# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 333 ஐப்பசி 08ஆம் நாள் புதன்கிழமை 25 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20
பக்கங்கள்: 32


முச்சந்தி முரளி



அப்ப...
இன்றைக்கும் தெளிவான
முடிவு வராதோ!...

## வேள்விகளுக்கு நிரந்தரத் தடை!

### யாழ். மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 25

யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் அமைந்துள்ள இந்து ஆலயங்களில் மிருக பலியிடல் வேள்வி நடத்துவதற்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்று நிரந்தரத் தடைவிதித்தது. இந்து ஆலயங்களில் பலியிடல் பூசை வழிபாடுகளை நடத்துவதற்கு இறைச்சிக்கடைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி சபைகள் அனுமதி வழங்கி வந்தமை அதிகார முறைகேடு என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டி யுள்ளார்.

ஆலயங்களில் இறைச்சிக் கடைச் சட்டங்களின் கீழ் மிருகங்கள் பலியிடப்படுவதைத் தடைசெய்யக் கோரி சைவ மகா சபை யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் நீதிப் பேராணை மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

மனு மீதான விசாரணைகள் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் 2016 ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் நடைபெற்று வந்தது. வேள்விக்கு இடைக்காலத் தடையும் விதிக்கப்பட்டது.

மிருக பலியிடலை நடத்தும் ஆலய நிர்வாகிகளை எதிர் மனுதாரர்களாகக் கொள்ளாமல், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச சபை என்பவற்றுக்கு எதிராகவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும் வேள்வி பூசை நடத்தும் கவுணாவத்தை நரசிம்மர் ஆலய நிர்வாகத்தினர் தம்மையும் வழக்கில் ஒரு தரப்பினராகச் சேர்க்குமாறு இடையீட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்து தமது தரப்பு வாதங்களை முன்வைத்தனர். >> 29

## ஐ. நா. அறிக்கையாளரின் கருத்துக்களுக்கு வரவேற்பு

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

இலங்கைக்கு நேரில் வந்து பார்வையிட்ட பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி. கிரிவ் வெளியிட்ட அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

இலங்கை அரசு பொறுப்புக் கூறல் விடயங்களை உள்நாட்டில் முன்னெடுக்கத் தவறினால் அது வெளிநாடுகளில் முன்னெடுக்கப்படும் என்று தாம் முன்னரே சுட்டிக்காட்டியிருந்தார் என்று கூட்டமைப்பின் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். "இதே சாரப்பட்ட ஐ.நா. அறிக்கையாளர் பப்லோ வெளியிட்ட அறிக்கையை நாம் வரவேற்கின்றோம்" என்றார் அவர்.

இலங்கை அரசு உள்நாட்டில் பொறுப்புக்கூறல் பொறிமுறையை முன்னெடுக்கத் தவறினால் வெளிநாட்டில் அது முன்னெடுக்கப்படக்கூடும் என்று ஐ.நா. அறிக் >> 29

## சட்ட மா அதிபர் சொல்லும் கதை

யாழ்ப்பாணம், ஒக். 25

அநுராதபுரம் சிறையில் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தி வரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கை தொடர்பில் அரச >> 29

## அம்பலவன் பொக்கணையில் ஆயுதவேட்டை நேற்றுத் தோல்வி

### படையினர் தோண்டிய இடத்தில் எதுவுமில்லை

முல்லைத்தீவு, ஒக். 25

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் புதைத்தனர் என்று நம்பப்படும் ஆயுதங்களைத் தேடி அம்பலவன் பொக்கணையில் படையினர் நேற்று முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கை தோல்வியில் முடிந்தது. ஆயுதங்கள் எதனையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளது அம்பலவன் பொக்கணை. அங்குள்ள பாடசாலைக்கு முன்பாக உள்ள இடத்தில் புதைக்கப்பட்டுள்ள ஆயுதங்களைத் தேடுவதற்கான அனுமதி நீதிமன்றத்திடம் இருந்து பெறப்பட்டது. 'பெக்கோ' தோண் >> 29

## ஜனவரி 27ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்

### கட்சித் தலைவர்கள் கூடி நேற்று இறுதித் தீர்மானம்

கொழும்பு, ஒக். 25

நீண்டகாலம் இழுத்தடிக்கப்பட்ட உள்ளூராட்சிமன்றத் தேர்தலை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தலைமை அமைச்சர் தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுதொடர்பான முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவர்கள் >> 29

## கூட்டமைப்பினரின் முடிவை அலைபேசியில் கேட்ட ரணில்!

கொழும்பு, ஒக். 25

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்காதபோதிலும், அந்தக் கட்சியின் நிலைப்பாட்டை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அலைபேசி ஊடாகக் கேட்டறிந்த பின்னரே உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் இறுதி முடிவெடுக்கப்பட்டுள் >> 29

## மாமியை வெட்டிக்கொன்று மனைவியைக் காயப்படுத்திய குடும்பத் தலைவருக்கு 8 வருட சிறைத் தண்டனை

### யாழ்ப்பாண மேல் நீதிமன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

பூநகரியில் மாமியாரை வெட்டிப் படுகொலை செய்ததுடன், மனைவியை வெட்டிக் காயப்படுத்திய குடும்பத் தலைவருக்கு 8 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது யாழ்ப்பாண மேல் நீதிமன்று.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரியில் 2011ஆம் ஆண்டு ஏப்ரல் 5ஆம் திகதி யோகராசா சிவகலா (வயது - 42) வெட்டிப்படுகொலை செய்யப்பட்டார். அவரது மகள் வெட்டுக் >> 29

## இடியுடன் கூடிய மழை பெய்யும்

பாழ்ப்பாணம், ஒக். 25

பருவப் பெயர்ச்சிக் கால நிலை ஆரம்பமாகியுள்ளதால் எதிர்வரும் நாள்களில் பிற்பகல் மற்றும் மாலை வேளைகளில் யாழ்ப்பாணத்தில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என யாழ்ப்பாணம் திருநெல் வேலியில் உள்ள வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி ரி. பிரதீபன் >> 29

## அரியாலை துப்பாக்கிச் சூட்டுக் கொலை

## மற்றொரு கோணத்திலும் பொலிஸார் விசாரணை

கொழும்பு, ஒக். 25

அரியாலையில் துப்பாக்கிச் சூட்டை நடத்திய ஆயுததாரிகளின் இலக்கு பொலிஸாரா என்ற கோணத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆயுததாரியை அடையாளம் கண்டு கைது செய்யும் வரையில் எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது.

இவ்வாறு வடக்கு மாகாண மூத்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்ணான்டோ கூறியுள்ளார்.

அரியாலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை நடந்த துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் ஒருவன் கொல்லப்பட்டான். துப்பாக்கிச் சூட்டை நடத்திய ஆயுததாரிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை. மூன்று பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணையை முன்னெடுத்துள்ளன. >> 29






## அமைச்சராக இருப்பதற்காக வெட்கப்படுகின்றாராம் சம்பிக்க

### அமைச்சரவைக் கூட்டத்தில் அவரே தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 25

அரசில் அமைச்சராக இருப்பதையிட்டு வெட்கமடைகின்றேன். கரங்களுக்கு விலங்கிடப்பட்ட அமைச்சராக இருப்பதில் என்ன பயன்?

இவ்வாறு அமைச்சரவைக் கூட்டத்தில் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சரான சம்பிக்க ரணவக்க. >> 29

## விமலிடம் விளக்கம் கேட்கிறார் சபாநாயகர்

கொழும்பு, ஒக். 25

ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தலாக அமையும் புதிய அரசமைப்பைத் தோற்கடிப்பதற்குரிய சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். முடியாத பட்சத்தில் நாடாளுமன்றத்துக்குக் குண்டுபோட்டாவது அதைத் தடுத்து நிறுத்துவோம், என்று தெரிவித்த தேசிய சுதந்திர >> 29




## மக்களின் எச்சரிக்கையால் திரும்பிச் சென்ற அதிகாரிகள்

கிளிநொச்சி,ஒக்.25
இரணைமடுக் குளத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தற்போது நடைபெற்றுவரும் நிலையில், கனகாம்பிகைக் குளத்தில் புல் வெட்டச் சென்ற நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளை பொதுமக்கள் தமது கால்நடைகளுக்கு தேவையான புற்களை அழிக்க வேண்டாம் என எச்சரித்து திருப்பி அனுப்பினர் எனக் கூறப்படுகின்றது.

இரணைமடுக் குளத்தில் புற்களைப் பறிப்பதற்காக கனகாம்பிகைக் குளத்தைச் சுற்றியுள்ள பகுதியிலிருந்து கனரக வாகனங்களைப் பயன்படுத்தி, புல்வெட்டும் நோக்கில் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் நேற்று அந்த இடத்துக்குச் சென்றனர்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்கள் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். தமது கால்நடைகளுக்குத் தேவையான புற்களை அழிக்க வேண்டாம் என கோரிக்கை விடுத்தனர்.

மக்களது இந்த எதிர்ப்பு நடவடிக்கையால் புல்வெட்டும் நடவடிக்கையைக் கைவிட்ட நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் திரும்பிச்சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)



## வலிகாமத்தில் திடீர் மழை

யாழ்ப்பாணம்,ஒக்.25
யாழ். வலிகாமத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்றுத் திடீரெனக் கடும் மழை பெய்தது.

பெரும் இடிமுழக்கத்துடன் சுமார் 45 நிமிடங்கள் மழைவீழ்ச்சி நீடித்ததுடன் மழை ஆரம்பித்து 20 நிமிடங்களில் வலிகாமத்தின் சில பகுதிகள் நீர் தேங்கியிருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டது.

வலிகாமத்தில் கடும் மழை பதிவாகிய போதும் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் மழை வீழ்ச்சி பதிவாகவில்லை எனவும் இதனால் விவசாயிகள் பெரும் ஏமாற்றமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
(ற-ரி4)

## மாணிக்கம் பண்ணை கிராமத்தின் நுழைவாயில் நேற்றுத் திறப்பு

வவுனியா,ஒக்.25
செட்டிகுளம், மாணிக்கம் பண்ணை கிராமத்துக்கான நுழைவாயில் நேற்றுத் திறக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் இணைந்து நுழைவாயிலைத் திறந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் 3இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் கிராமத்துக்கான நுழைவாயில் அமைக்கப்பட்டது.


இந்த நிகழ்வில் செட்டிகுளம் பிரதேச சபைச் செயலாளர், அப்பகுதி கிராம அலுவலர், மதகுருமார், கிராம மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி4)





# தமிழ் உச்சரிப்பு தெரியவில்லை

## வடக்கு முதல்வர் சுட்டிக்காட்டு



கொழும்பு,ஒக்.25
தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ் உச்சரிக்கத் தெரியவில்லை. லகர, ளகர, ழகர வேறுபாடுகள் மற்றும் ன, ந, ண, போன்றவற்றின் வேறுபாடு தெரிவதில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
முன்பு வானொலி ஒலிபரப்புக்களில் பேசப்படுகின்ற தமிழ் இலக்கியநடை நிறைந்ததாக முறையான உச்சரிப்புடன் கூடியதாக அமைந்திருக்கும்.

ஆனால் இப்போதோ வானொலிப் பெட்டியை அல்லது தொலைக்காட்சிப் பெட்டியை திருப்பினால் அங்கு பேசப்படுகின்ற தமிழை எப்படி வர்ணிப்பதென்று எமக்குப் புரியவில்லை. சில திரைப்படங்கள்கூட இவ்வாறான பிழைகளைவிட ஊக்குவிக்கின்றன.

அவர்களின் பேச்சில் ஆங்கிலம் அறுபது சதவீதம் தமிழ் நாற்பது சதவீதம் என்று காணப்படுகின்றது. தமிழ் கொல்லப்படுகின்றதா என்று ஏங்கவேண்டியுள்ளது.

மொழிக்கல்வியில் நீங்கள் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

எம்மெல்லோரையும் பிணைப்பது எமது மொழியே. அந்த மொழியில் பாண்டித்தியம் அடைவது இன்றியமையாதது. கணிதம், விஞ்ஞானம், புவியியல், வரலாறு போன்ற பாடங்களிலும் நீங்கள் கூடிய கவனம் செலுத்துவதன் மூலமே உலகைப் பற்றியும் எம்மைப் பற்றியும் எமது சூழலைப் பற்றியும் அறிந்து கொள்ள முடியும்.

நீங்கள் மருத்துவராக அல்லது பொறியியலாளராக அல்லது சட்டத்தரணியாக அல்லது ஆசிரியராக ஏதோ ஒன்றாக வர முடியும்.

ஆனால் எம்மைப் பற்றியும் சூழலைப் பற்றியும் எமது அரசியல் நிலமை பற்றியும் அறிந்து கொண்டால் மட்டுமே எமது வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக் கொள்ள முடியும்.

பரந்த அறிவு இன்று எம் எல்லோருக்கும் தேவைப்படுகின்றது.

அந்த பரந்த அறிவைப் பெறுவதற்கு கணினியறிவு போதுமான அனுசரணை வழங்கி வருகிறது - என்றார்.
(ற-ரி4)

## முகப்புத்தகத்தால் ஏற்பட்ட கலவரம்: கைதானவருக்கு பிணை

மட்டக்களப்பு,ஒக்.25
புதிய காத்தான்குடியில் போலி முகப் புத்தகத்தால் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலையடுத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட எட்டு பேரும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அடுத்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. காத்தான்குடி பகுதியில் இடம்பெற்ற திருமணத்தில் மாப்பிள்ளையொருவர் சீதனம் பெற்றார் என கூறி, போலியான முகப்புத்தகம் ஒன்றை ஆரம்பித்து அவரை விமர்சித்ததை அடுத்தே மோதல் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற,ரி4)



## வடக்கு மக்களுக்காகவே அதிகம் கடன் பெற்றோம்

### இப்படிக் கூறுகிறார் பந்துல குணவர்தன

கொழும்பு,ஒக்.25
வடக்குக்கு முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்த யாழ் தேவி புகையிரத சேவையை இந்தியாவிடம் இருந்து கடன் வாங்கி மகிந்த ராஜபக்சவே ஆரம்பித்து வைத்தார்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:
வடக்கில் பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்த போதும் அவை அனைத்தும் மகிந்தவால் நடைபெறவில்லை. நாட்டில் ஏற்பட்ட போரால் வெளிநாடுகளில் இருந்து கிடைத்த நிதியைக் கொண்டே அவை முன்னெடுக்கப்பட்டன என்று விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான சில கட்சிகள் குற்றம் சுமத்தின.

வடக்கு மக்களுக்காகவே நாம் அதிக கடன் வாங்கினோம்.

தற்போது இருக்கும் எதிர்க்கட்சி பெயரளவில் மாத்திரமே எதிர்க்கட்சியாக இருக்கின்றது.

தினேஸ் குணவர்தன தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 53 பேரைக்கொண்டு இருக்கும் கூட்டு எதிர்க்கட்சியே உண்மையான எதிர்க்கட்சி - என்றார்.
(ற,ரி4)



## தரமுயர்த்தப்பட்டது முருங்கன் மருத்துவமனை

மன்னார்,ஒக்.25
பிரதேச மருத்துவமனையாக இயங்கிய முருங்கன் மருத்துவமனை ஆதார வைத்தியசாலையாக நேற்றுத் தரமுயர்த்தப்பட்டது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி யூட் ரதனி தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் வடமாகாண முதலமைச்சரின் பிரதி நிதியாக கலந்து கொண்ட வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி அன்ரன் சிசில், மருத்துவர்கள் சுகாதார அமைச்சரின் செயலாளர் சந்திரையா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் இரண்டாவது முக்கிய மருத்துவமனையாக முருங்கன் ஆதார வைத்தியசாலை உள்ளது. (ற-ரி4)

# அரசியல் கைதிகளின் விடுவிப்புக்காக கையெழுத்துச் சேகரிப்புத் தீவிரம்



யாழ்ப்பாணம்.ஒக்.25
அநுராதபுரத்தில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி, யாழ்ப்பாண மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கையெழுத்துப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் இடம்பெற்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும், விசாரணையின்றி சிறைவாசம் அனுபவிக்கும் தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனைகளின்றி விடுதலை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, கையெழுத்துப் போராட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**யாழ்ப்பாணம்**
யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்துப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் இடம்பெற்றது.

யாழ் மையப் பேருந்து நிலையம் மற்றும் யாழ் நகர்ப் பகுதிகளில் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மக்கள் அரசியல் கைதிகளின் விடுவிப்பை வலியுறுத்தி தமது கையெழுத்துக்களைப் பதிவிட்டனர்.

**மட்டக்களப்பு**
கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ள கையெழுத்துப் போராட்டம் மாவட்டம் முழுவதும் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

ஆரம்பிக்கப்பட்டுள்ள இப் போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென மாணவர் ஒன்றியம் வேண்டியுள்ளது.

இவ்வாறு சேகரிக்கப்படும் கையெழுத்துக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அரச தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கவுள்ளன என்றும், இந்தக் கையெழுத்துப் போராட்டத்துக்கு அனைத்து மக்களும் ஆதரவை வழங்க வேண்டுமெனவும் யாழ்ப்பாண மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற- ரி2)

## வல்லப் பட்டைகளுடன் பிரித்தானியர் கைது

கொழும்பு.ஒக்.25
கொழும்பு, கோட்டைப் பகுதியிலுள்ள விடுதி ஒன்றில் வல்லப்பட்டைகளுடன் வெளிநாட்டுக் குடிமகன் ஒருவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
35 வயதான பிரித்தானியக் குடிமகன் ஒருவரே கைது செய்யப்பட்டார்.
நேற்று அதிகாலை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையில் 3 கிலோ 370 கிராம் வல்லப்பட்டைகளுடன் அந்த நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி2)

## மட்டுவில் விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 25
மட்டுவில், புத்தூர் வீதியில் உள்ள வண்ணாத்திப் பாலத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந் தார்.
படி பட்டா ரக வாகனமும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது எனக் கூறப் பட்டது.
மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்தவரே அதில் காயமடைந் தார்.
வாகனம் தலைகீழாகப் புரண்டது என்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பாலத்துக்குள் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார் எனவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி2, 9)

## புதிய கட்டடத் தொகுதிக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

கொழும்பு, ஒக். 25
கொழும்பு பாத்திமா முஸ்லிம் பெண்கள் கல்லூரியின் புதிய 4 மாடி கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.
நிகழ்வு கல்லூரி அதிபர் தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய, மேல் மாகாணசபை உறுப்பினர்கள், கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி2)



## விபத்தில் இருவர் காயம்

அதி சொகுசு பேருந்து ஒன்று வேலியை உடைத்துக் கொண்டு வளவுக்குள் புகுந்து விபத்துக்குள்ளானது. அதில் இருவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பேருந்தின் சாரதியும் நடத்துனரும் காயமடைந்தனர். முகமட் நியாஸ் (வயது27) சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த சுதாகரன் நிர்மலன் (வயது18) ஆகிய இருவருமே காயமடைந்துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை சாவகச்சேரி எழுதுமட்டுவாழ் பகுதியில் இடம்பெற்றது.
கொழும்பிலிருந்து பயணிகளுடன் வந்த குறித்த பேருந்தின் ரயர் திடீரென வெடித்துள்ளது. மதிலை உடைத்துக் கொண்டு சென்ற பேருந்து அருகிலிருந்த வளவுக்குள் புகுந்தே இந்த விபத்து இடம்பெற்றது என்று கூறப்படுகிறது. (ரி2, 26)

## காடுகளை அழித்தால் கடும் நடவடிக்கை

### அரச தலைவர் எச்சரிக்கை

கொழும்பு.ஒக்.25
காடுகளை அழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் ஆசிய பசுபிக் வலய நாடுகளின் வனப் பரம்பல் பற்றிய ஆணைக்குழுவின் 27 ஆவது கூட்டம் நேற்று இடம்பெற்றது.
இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார் என அரச தலைவர் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
நாட்டின் வனப் பரம்பலைப் பாதுகாக்கும் பொருட்டு அரசு சிறப்பு அவதானத்துடன் செயற்படுகிறது. அதற்கான அனைத்து செயற்பாடுகளும் தாமதமின்றி நிறைவேற்றப்படும்.
சுற்றாடல் பாதுகாப்புக்கான பாரிஸ் மாநாட்டில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் உட்பட ஏனைய பன்னாட்டு பிரகடனங் களை உரியவாறு பின்பற்றுவதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட தேசிய ரீதியில் செயற்றிட்டங்கள் பல நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.
பன்னாட்டு நாணய நிதியத்தின் ஊடாக உலக நாடுகளுக்கு நிதியுதவிகளை வழங்கும்போது தமது நாட்டில் வனங்களின் அடர்த்தியை அதிகரிப்பதற்கும் சூழலைப் பாதுகாப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படும் நாடுகளுக்கு கூடுதல் ஒத்துழைப்பை வழங்குவதற்கான நடைமுறையொன்று பன்னாட்டு ரீதியில் செயற்படுத்தப்படவுள்ளது.
இதனூடாக சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு நாடுகள் அதிக அக்கறையுடன் செயற்படும். முன்னொருபோதும் ஏற்படாத வகையில் உலக நாடுகள் பலவும் தற்போது காலநிலை மற்றும் வானிலை மாற்றங்களினால் ஏற்படும் இடர்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது.
உலகளாவிய ரீதியில் ஏற்படும் சுற்றாடல் சீர்கேடுகள் காரணமாக மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களினதும் நிலவுகைக்கு இயற்கையினால் சவால் விடுக்கப்பட்டுள்ளது.
சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் காடுகளின் பாதுகாப்புத் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்களில் கல்விமான்கள், ஆய்வாளர்கள் உள்ளிட்ட அனைவரது வழிகாட்டல்களும் மிக முக்கிமானவை.
சுற்றாடலைப் பாதுகாக்கும் வகையில் செயற்படும் அரச நிறுவனங்களுக்கு சிறப்பு வசதிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்றுள்ளது. (ரி2)

## பராமரிப்பின்றித் தேயிலைத் தோட்டங்கள்; தொழிலாளர்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பு



ஹற்றன்.ஒக்.25
ஹற்றன் ஸ்டிரதன் செம்புவத்தை தோட்டத் தேயிலை மலையை முறையாகப் பராமரிக்க வேண்டும் எனக் கோரி அந்தத் தோட்டத் தொழிலாளர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
தோட்ட நிர்வாகத் துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தோட்டக் காரியாலயத்துக்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்றது.
வட்டவளை பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இந்தத் தேயிலை மலை காடாக மாறியிருப்பதால் தேயிலைச் செடிகளில் விஷப் பூச்சிகள், பாம்புகள் என்பன காணப்படுகின்றன. தாம் தினமும் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.
தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களின் நலன் கருதி தேயிலைச் செடியின் பராமரிப்பை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டவர்கள் கோரினர். தோட்டத்தில் மேற்கொள்ளப்படாத அபிவிருத்தி வேலைகளை தோட்ட நிர்வாகம் உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும் எனவும், காட்டு மிருகங்கள் மற்றும் குளவி தொல்லைகள் போன்றவற்றிலிருந்து தொழிலாளர்களை தோட்ட நிர்வாகம் பாதுகாக்க வேண்டும் எனவும் சுமார் 50 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். (ற-ரி2)

## மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது

ஹற்றன்.ஒக்.25
கெஸெல்கமுஓய பிரதேசத்தில் அனுமதியின்றி மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு சந்தேகநபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். கல் அகழ்வுக்குப் பயன்படுத்திய உபகரணங்கள் பொகவந்தலாவை பொலிஸாரால் கைப்பற்றப்பட் டது. கைது செய்யப்பட்ட நால்வரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கெதிராக ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி4)

## திருடர்களுடன் கூடிக் குலாவி மது அருந்திய ஏ.எஸ்.பி.

### விசாரணையை ஆரம்பித்தது பொலிஸ் திணைக்களம்

கொழும்பு, ஒக். 25

மாடுகளைத் திருடும் குழுவைக் கைது செய்வதற்குச் சிறப்புப் பொலிஸ் குழுவினர் சென்றுள்ளனர். அங்கே அவர்கள் கண்ட காட்சி அதிர்ச்சியடைய வைத்துள்ளது. திருடர்களுடன் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் கூடிக் குலாவி மது அருந்தியுள்ளார். இது தொடர்பில் கைது செய்யச் சென்ற சிறப்புப் பொலிஸ் குழு பொலிஸ் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது. அதற்கு அமைவாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


வடக்கு மாகாணத்தில் மாட்டுத் திருட்டுக்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது என்ற முறைப்பாட்டுக்கு அமைவாக, மாட்டுத் திருடர்களைக் கைது செய்வதற்கு சிறப்புப் பொலிஸ் குழு அமைக்கப்பட்டது. அவர்கள் சந்தேக நபர்கள் சிலரை அடையாளம் கண்டுள்ளனர்.

அவர்களைக் கைது செய்வதற்காக சில வாரங்களுக்கு முன்னர் சென்றுள்ளனர். சந்தேக நபர்களுடன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும் அங்கிருந்து கூடிக் குலாவி மது அருந்திக் கொண்டிருந்துள்ளார். மது விருந்தின் பின்னர் சந்தேக நபர்களை தனது வாகனத்திலேயே உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அழைத்துச் சென்றுள்ளார்.

இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த சிறப்புப் பொலிஸ் குழு பொலிஸ் தலைமையகத்துக்கு முறைப்பாடு செய்துள்ளது. முறைப்பாட்டுக்கு அமைவாக துரித விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (5.31)

## அரசமைப்புத் தொடர்பில் மகாநாயக்கர்கள் தவறுதலான புரிந்துணர்வில் செயற்படுகின்றனர்

### சு.க. செயலர் துமிந்த திசாநாயக தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 25

அரசமைப்புத் தொடர்பில் அரச தலைவரின் வாக்குறுதியை நம்புங்கள். புதிய அரசமைப்புத் தொடர்பில் மகாநாயக்கத் தேரர்கள் தவறான புரிந்துணர்வில் செயற்பட்டு வருகின்றனர். பௌத்தம் மற்றும் ஒற்றையாட்சி தொடர்பில் சரியான தெளிவுபடுத்தல் அவசியம். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் துமிந்த திசாநாயக தெரிவித்தார்.

ராஜாங்கனை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் கடந்த கால முரண்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அவ்வாறான தவறுகள் எவையும் இனியும் இடம்பெறாது இருக்கும் மாற்றங்களை அரசமைப்பில் முன்னெடுத்து அதன் மூலமாகவே தீர்வுக்கான அடித்தளத்தை முன்னெடுப்போம். இதுவே ஆளும் கட்சிகளினதும் எதிர் கட்சிகளினதும் ஒரே நிலைப்பாடாக உள்ளது.

இந்தக் கருத்தினை தவறான வகையில் சிலர் கருத்திற் கண்டு பொய் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதே கருத்தை மகாநாயக்க தேரர்களும் தெரிவித்து வருகின்றமை வருத்தமளிக்கிறது. புதிய அரசமைப்பில் பௌத்த மதம் பாதிக்கப்படுவதாகவும், ஒற்றையாட்சி இல்லாமலாக்கப்படுவதாகவும் கூறியே இப்போது அரசமைப்புக்கான முயற்சிகளைத் தடுக்குமாறு கூறுகின்றனர். இது பொய்யான பயமாகும். இந்தக் காரணிகளை அரச தலைவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் மகாநாயக்க தேரர்கள் விளங்கும் வகையில் தெளிவாகக் கூறியுள்ளார். உண்மையில் எவ்வாறான அரசமைப்பு முன்னெடுக்கப்படுகின்றது என்ற விளக்கத்தை அவர் தெளிவாகக் கூறியுள்ளார். அவரது வாக்குறுதிகளை நம்புங்கள். அவர் ஒருபோதும் பௌத்த மதத்தை அழிக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்க மாட்டார்.

இப்போது முன்வைக்கப்பட்டுள்ளது வெறும் கருத்துக்கள் மட்டுமேயாகும். கட்சிகளின் நிலைப்பாடே இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது புதிய அரசமைப்புக்கான வரைவு அல்ல. இந்தக் காரணிகளைத் தெளிவாக விளங்கிக்கொண்டு அதன் பின்னர் விமர்சனங்களை முன்வைக்க வேண்டும்.

பொறுமையாக அனைத்து தரப்பின் கருத்துக்கு அமையவே நாம் தீர்மானங்களை முன்னெடுப்போம். அத்துடன் பிரதானமானது மகாநாயக்க தேரர்களின் முழுமையான ஒத்துழைப்பும் அவர்களின் கருத்துக்களுமேயாகும். அவர்களை எதிர்த்தோ அல்லது அவர்களை நிராகரித்தோ எந்தவொரு தீர்மானமும் எடுக்க முடியாது. இப்போது மகாநாயக்க தேரர்கள் தவறுதலாக விளங்கிக்கொண்டுள்ள சில காரணிகள் குறித்து அவர்களை தெளிவுபடுத்தும் வகையில் நாம் சந்திப்புகளை முன்னெடுப்போம் -என்றார். (5.31)

## புதையல் கொள்ளைக்கு சென்றபோது பாதாளக்குழு பொலிஸாரிடம் சிக்கியதாம்

### விசாரணைகளில் கண்டறிந்துள்ளதாக பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 25

பாதாள உலகக் குழுவினர் புதையலை கொள்ளையிடுவதற்கே திட்டமிட்டு திவுலுப்பிட்டியவில் வாகனத்தில் நின்று கொண்டிருந்ததாக தமது விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது என்று பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கம்பகா மாவட்டத்தின் திவுலுப்பிட்டியவில் பாதாள உலகக் குழுவினருக்கும் சிறப்பு அதிரடிப்படையினருக்கும் இடையிலான மோதலில் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் 7 பேர் நேற்று முன்தினம் சம்பவ இடத்திலும் மற்றொருவர் வீட்டில் வைத்தும் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புதையல் ஒன்றைக் கொள்ளையிடுவதற்கு திட்டமிட்டே அந்தப் பகுதியில் ஒன்று கூடியதாக பொலிஸாரிடம் சந்தேக நபர்கள் கூறியுள்ள னர்.

இந்தத் தாக்குதலின்போது பாதாள உலகக் குழுவின் முக்கிய புள்ளிகள் என்று கருதப்படும் இருவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் இருவரும், களுத்துறைச் சிறைச்சாலை பேருந்து மீது தாக்குதல் நடத்திய வழக்கில் தேடப்படுவர்கள் என்றும் பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (5.31)

## சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிரான மனு இன்று விசாரணைக்கு

சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழு அரசின் கைப்பிள்ளையாக இல்லாமல், மக்களின் வாக்குரிமையை உறுதி செய்யவேண்டும். அதனை உறுதிப்படுத்துமாறு அழுத்தம் கொடுக்கும் வகையில் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 6 மனுக்கள் மீதான விசாரணை இன்று நடைபெறவுள்ளது. இவ்வாறு சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இன்னமும் நடத்தப்படவில்லை. இழுத்தடிக்கப்படுகின்றது.

தேர்தலை பிற்போடுவதற்கான தேவை அரசுக்கு உள்ளது. அதனாலேயே காலம் தாழ்த்தப்படுகிறது. மனித உரிமை மீறல் தொடர்பான ஆறு மனுக்களை உயர்நீதிமன்றம் நாளை (இன்று) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளது. அதில் ஒரு மனுவை நான் தாக்கல் செய்துள்ளேன்.

இதேவேளை 1998ஆம் ஆண்டு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சியின்போது உள்ளூராட்சி மன்றங்களை காலம் தாழ்த்துவதற்கு முற்பட்ட வேளையில், அது தொடர்பில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தேர்தல்கள் ஆணையாளரின் சுயாதீனத் தன்மையைப் பாதுகாப்பதற்கான சகல விதிமுறைகளும் அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக நீதியரசர் மார்க் பெர்னாந்து அந்த வழக்கில் தீர்ப்பளித்துள்ளார். தற்போதைய சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாகச் செயற்படவேண்டும். உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டிய கடப்பாடு சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உள்ளது -என்றார். (5.31)

## இரவு விடுதிகளுக்குச் செல்கிறாரா மேர்வினின் மகன் மாலக சில்வா?

### அறிக்கையிடுமாறு சி.ஐ.டிக்கு உத்தரவு

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகனான மாலக சில்வா, பிணை நிபந்தனையை மீறி இரவு விடுதிகளுக்குச் செல்கிறாரா என்பது தொடர்பில் அடுத்தவருடம் மார்ச் 6ஆம் திகதி இடம்பெறும் அமர்வில் அறிக்கையிடுமாறு, கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்கு கொழும்பு பிரதான நீதிவான் மன்றம் உத்தரவிட்டது.

2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31ஆம் திகதியன்று கொழும்பு 3 டுப்ளிகேசன் வீதியிலுள்ள இரவு விடுதியொன்றில் வைத்து, ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜோடியைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில், மாலக சில்வா உட்பட எழுவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிவான் விசாரணைகளை யடுத்து, ஸ்கொட்லாந்துப் பிரஜையும் சந்தேகநபராகப் பெயர் குறிப்பிடப்பட்டார்.

வழக்கின் சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், மாலக சில்வா இரவு விடுதிகளுக்குச் செல்லக் கூடாது என்று நீதிமன்றம் பிணை நிபந்தனை விதித்திருந்தது.

இந்த வழக்கு பிரதான நீதிவான் மன்ற மேலதிக நீதிவான் தமித் வெலிகொடபிட்டிய முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. மாலக சில்வா பிணை நிபந்தனையை மீறி இரவு விடுதிகளுக்குச் செல்வதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அது தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என்றும் தாக்கப்பட்ட ஸ்கொட்லாந்து பிரஜை சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகவும் சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடியுள்ளதாகவும் குற்றத் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். இதனை யடுத்தே, மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்த நீதிவான் மார்ச் 6 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். (5)

## முடிவு இன்று தெரியும்

கொழும்பு, ஒக். 25

சம்பள முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நாளை வியாழக்கிழமை அரச தாதியர் வேலைநிறுத்த போராட்டத்தில் குதிப்பதற்கு தயாரகியுள்ளனர். சுகாதார அமைச்சர் ராஜிதவுடன் இன்று நடைபெறும் பேச்சுக்களை அடுத்தே இது தொடர்பில் இறுதி முடிவு அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (5.31)

## தமிழ் மக்களுக்கு வாழ்வாதாரத்துக்கான தீர்வே இப்போது தேவை

### கூறுகிறார் பந்துல குணவர்தன

கொழும்பு, ஒக். 25

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டுக்கான உதவிகளே தேவை. அந்த உதவிகளையே மகிந்த அரசு கடந்த காலங்களில் மேற்கொண்டது. மைத்திரி அரசு அதனைக் கைவிட்டு, எழுத்தாவணங்கள் ஊடான தீர்வை முன்வைக்க முயற்சிக்கின்றது. இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு மக்கள் தற்போது பெரியளவில் தொழில் ரீதியிலான பிரச்சினைகளையே எதிர்நோக்குகின்றனர். அந்தப் பிரதேச மக்கள் வறுமை, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளிலுள்ள குறைபாடுகளினால் அல்லலுறுகின்றனர். அந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

மகிந்த ராஜபக்ச போரின் பின்னர் வடக்கு, கிழக்கில் நல்லிணக்கச் செயற்பாட்டை வலுதாக்கும் வகையில் தென்னிலங்கை மக்கள் அனுபவிக்கும் உரிமைகளை வடக்கு, கிழக்கு மக்களும் அனுபவிக்கும் வகையில் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார் - என்றார். (5.31)

## ரூ.76 இலட்சம் பணம், கஞ்சாவை வீட்டுக்குள் புதைத்தவருக்கு 11 மாதங்களின் பின் பிணை

யாழ்ப்பாணம், ஒக். 25

வீட்டுக்குள் 9 கிலோ 305 கிராம் கஞ்சாவையும் 76 இலட்சத்து 2 ஆயிரத்து 500 ரூபா பணத்தையும் பதுக்கி வைத்த குற்றச்சாட்டில் 11 மாதங்களாக விளக்கமறியலில் இருந்தவர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சம்பவம் மாதகலில் கடந்த வருடம் இடம்பெற்றது. குறித்த குற்றச்சாட்டில் இளவாலையைச் சேர்ந்த குறித்த குடும்பத் தலைவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். அவரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

அவரது உறவினர்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்திருந்தனர். அது பரிசீலனைக்கு வந்தது. சந்தேகநபரிடம் மீட்கப்பட்ட 7.6 மில்லியன் ரூபா பணம் சான்றுப் பொருளாக நீதிமன்றில் உள்ளதால் அவரை பிணையில் விடுவிக்க ஆட்சேபனை இல்லை என்று அரச சட்டவாதி நா.நிஷாந் மன்றில் தெரிவித்தார். இரு தரப்பு சமர்ப்பணங்களையும் பரிசீலித்த நீதிபதி மா.இளஞ்செழியன் பிணை வழங்கினார்.

அதன்படி, 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 2 இலட்சம் ரூபா பெறுமதியிலான 2 ஆள் பிணையிலும் சந்தேகநபர் விடுவிக்கப்படுகிறார். மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக் கிழமைகளில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் கையொப்பமிட வேண்டும் என்று நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

76 இலட்சம் ரூபா பணம் சந்தேகநபரின் உழைப்பால் கிடைத்தது என்று அவரின் உறவினர் நீதிமன்றில் தெரிவித்தார். (4)

# உதவிப் பணிப்பாளர்கள், ஆலோசகர்கள் 15 வருடங்களாக ஒரே வலயத்தினுள்

## விரைவில் இடமாற்றம் நடக்குமென்று கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள செயலாளர் தொடக்கம் ஆசிரியர்கள் வரையான சகலருக்கும் இடமாற்றம் வழங்கப்படும் நிலையில் ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மட்டும் 15 வருடங்கள் தொடக்கம் 20 வருடங்கள் வரைக்கும் ஒரே வலயத்துக்குள் பணிபுரிகின்றனர் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தின் 12 கல்வி வலயங்களின் அலுவலகங்களிலும் பணிபுரியும் ஊழியர்கள் தொடக்கம் கல்வி அமைச்சின் செயலாளர், அதிபர்கள், ஆசிரியர்கள் என அனைவருக்குமே உச்ச பட்சமாக 7 வருடங்களுக்கு ஒரு முறை கட்டாய இடமாற்றம் நடைமுறையில் உள்ளது.

ஆசிரிய ஆலோசகர்களுக்கும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் இடமாற்றங்கள் வழங்கப்படுவதில்லை.

இதனால் வடக்கு மாகாணத்தில் சுமார் 150 ஆசிரிய ஆலோசகர்களும் 50 க்கும் மேற்பட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் தொடர்ந்தும் ஒரே வலயத்துக்குள் நீண்டகாலமாகப் பணிபுரிகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இதில் பலர் 16 ஆண்டுகளையும் தாண்டி 20 ஆண்டுகள் வரை ஒரே இடத்தில் பணிபுரிகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

"உண்மையில் சகல அரச ஊழியர்களுக்கும் குறிப்பிட்ட கால எல்லையில் சுழற்சிமுறையிலான இடமாற்றம் வழங்கப்பட வேண்டும்.

இந்த இரண்டு பதவிகளுக்குமான தனியான சேவையின்மை காரணமாக இதுவரை இவ்வாறான இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை. தற்போது ஆசிரிய ஆலோசகர் சேவை உருவாக்கம் இடம்பெறுகிறது.

மேற்குறிப்பிட்டவர்களுக்கும் விரைவில் இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படும்" என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (4-101)

*பருவ மழை ஏமாற்றுவதால்*

## பயிர்கள் கருகி வாடுகின்றன சிலர் இறைப்பதில் தீவிரம்

குடாநாட்டில் பருவமழையை நம்பி ஆரம்பித்த காலபோக நெற்செய்கையில் எதிர்பார்த்த மழை பெய்யாமையினால் முளைத்த பயிர்கள் வாடி வதங்கிக் கருகுகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சில விவசாயிகள் இரண்டாவது தடவை விதைப்பதிலும் ஒரு சாரார் முளைத்த பயிரைப் பாதுகாக்க கிணறுகளிருந்து தண்ணீர் இறைப்பதிலும் ஈடுபட்டுள்ளனர்.

வடபகுதியிலுள்ள கமக்காரர் பருவ மழையை நம்பியே காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். 2017/2018 ஆம் ஆண்டில் கால போக நெற்செய்கையும் கடந்த ஒரு மாதத்துக்கு முன் ஆரம்பிக்கப்பட்டுப் பயிர்கள் முளைத்த நிலையிலுள்ளன. வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மழையை நம்பி விதைக்கப்பட்ட நெல் முளைக்காமையால் சில விவசாயிகள் இரண்டாவது தடவையாகவும் விதைப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். பருவ மழை பெய்வதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்படுமாயின் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள தாம் பெரும் இழப்பை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என்று கூறுகின்றனர். (4-115)

## பழைய சேலையிலிருந்து மாற்றுடை பாவித்த சேலைகளை வழங்குங்கள்

### வாழ்வாதார மேம்பாட்டுக்காக "பாசிக்" கோருகிறது

யாழ்ப்பாணம், ஒக். 25

பழைய சேலைகளில் இருந்து மாற்றுடைகள் தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே பாவித்த சேலைகளை யாராக இருந்தாலும் வழங்கலாம்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்காக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

"பாசிக்" நிறுவனத்தால் வாழ்வாதார உதவித் திட்டமாக ஜெய்க்கா நிறுவனத்தின் உதவியுடன் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வருமானம் குறைந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பாவித்த சேலைகளில் இருந்து மாற்றுடைகள் தயாரித்தல் செயற்றிட்டமானது மூன்று ஆண்டு காலத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்தச் செயற்றிட்டமானது இதனைச் செயற்படுத்துபவர்கள் தமது ஆளுமைகளை வளர்த்துக் கொள்ளவும், தமது வருமானத்தை தொடர்ச்சியாக பெறுவதற்கும் கைகொடுக்கிறது. அதனால் பாவனையில் இல்லாத பயன்படுத்தக்கூடிய சேலைகள் அன்பளிப்பாகப் பெறப்படவுள்ளன.

சேலைகளை அன்பளிப்பாக வழங்க விரும்புபவர்கள் இலக்கம் 28, கோவில் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள பாசிக் நிறுவன யாழ்ப்பாண அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

அல்லது 021 222 7897 மற்றும் 021 222 1699 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். இந்தத்திட்டம் தொடர்பான விடயங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-173)

## கசிப்பு வைத்திருந்த 4 பேருக்கு ரூ.23,000 தண்டம்

கிளிநொச்சி, ஒக. 25

கசிப்பு வைத்திருந்த நால்வருக்கு 23 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி நீதிவான் நீதிமன்று.

கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்களப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 4 பேரும் கைது செய்யப்பட்டனர். கிளிநொச்சி நீதிமன்றில் அவர்கள் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் தம் மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டனர்.

அதன்படி, 180 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்தவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

750 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்தவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. 2 ஆயிரத்து 250 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

500 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்தவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (4-6)

## சட்ட விரோதமான மீன்பிடிகளை தடுக்குமாறு நாளை பிரேரணை

### வடக்கு மாகாண சபையில் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

வடக்கு கடல்பகுதியில் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க இலங்கை அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி மாகாண சபையின் நாளைய அமர்வில் பிரேரணை முன்மொழியப்படவுள்ளது.

இந்தப் பிரேரணையை வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன் மற்றும் து.ரவிகரன் ஆகியோர் முன்மொழியவுள்ளனர். அவர்களது பிரேரணையில்,

வடமராட்சியின் சுண்டிக்குளம் தொடக்கம் கொக்கிளாய் நாயாறுவரை பாரம்பரிய மீன்பிடி முறைகள் மீறப்பட்டுள்ளன. தற்போது உழவு இயந்திரம் மூலமாகக் கரைவலைகள் பயன்படுத்தப்பட்டு மீன்பிடிக்கப்படுகிறது. இதனால் சிறு தொழிலாளர்கள் பாதிக்கப்படுவது மட்டுமல்ல, கரையோரங்களைப் பாதுகாக்கும் இயற்கைத் தாவரங்களும் அழிந்து போகின்றன. வீதிகளும் பாதிக்கப்படுகின்றன. மண்ணரிப்புக்களும் ஏற்படுகின்றன. கடலிலும் அதிகதூரம் வலை வளைப்பதால் கடலின் அடியில் இருக்கும் கடல் தாவரங்கள் அழிக்கப்படுவதுடன், மீன் உற்பத்திகளும் தடைப்படுகின்றன. இது சட்டவிரோத தொழில். எனவே சட்டவிரோதமாக நடைமுறைப்படுத்தப்படும் தொழில் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இந்தக் குற்றத்தில் ஈடுபடுபவர்களும் தண்டிக்கப்பட வேண்டும் என்றுள்ளது.

இந்தப் பிரேரணையின் கோரிக்கையை நிறைவேற்றவேண்டும் என்று அரச தலைவர், தலைமை அமைச்சர், கொழும்பு மீன்பிடி அமைச்சர் ஆகியோரை இந்தச் சபை கோர வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-8)

## தென்னைச் செய்கையாளர்கள் வட்டி மானியம் பெறமுடியும்

### சீராகச் செயற்படுத்துபவர்களின் வட்டி மீளவும் அவர்களுக்கே வழங்கப்படும்

யாழ்ப்பாணம். ஒக். 25

வடக்கு மாகாணத்தில் தென்னைச் செய்கையாளர்கள் வட்டி மானியம் பெற்று தென்னைச் செய்கையை ஊக்குவிக்க முன்வர வேண்டும் என்று தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாணத்தில் தென்னைச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் முகமாக தென்னைச் செய்கைக்கு மானியம் வழங்கி வருகின்றோம். இவர்களுக்குத் தென்னம் கன்றுகள், சேதனப்பசளை, ஊடு பயிர்ச் செய்கை, வட்டி மானியம், நீர்ப்பாசன மானியம், அசேதன உரமானியம் ஆகியனவற்றை வழங்கி வருகின்றோம். இவர்களுக்கான மானியங்களை வழங்குவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் மாவட்ட ரீதியில் கிராமங்கள் தோறும் தென்னை 'கற்பகதரு' சங்கங்களை அமைத்து வருகின்றோம். இவற்றுக்கான பதிவுகளைப் பெருந்தோட்ட அமைச்சின் கீழ் மேற்கொண்டு வருகின்றோம். யாழ்ப்பாண மாவட்டத்தில் 333 தென்னை கற்பகதரு சங்கங்களை அமைத்துள்ளோம்.

தென்னைப் பயிர்ச் செய்கையில் மக்கள் ஈடுபட விரும்பினால் அதற்குரிய மானியம், ஆலோசனைகளை வழங்க நாம் தயாராக உள்ளோம். அரை ஏக்கர் தொடக்கம் 30 ஏக்கர் வரையான நிலப் பகுதிக்கு தென்னைப் பயிர்ச் செய்கை மானியம் வழங்கப்படும். ஒரு ஏக்கருக்கான வட்டி மானியமாக ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும். வருடத்துக்கான வட்டியாக 9 வீதம் அறவிடப்படும். இவ்வாறு 30 ஏக்கர் வரையில் 3 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்படும். இந்தக் கடன்களைப் பெற்று எமது ஆலோசனையைப் பின்பற்றி தென்னைச் செய்கையை மேற்கொள்ள முடியும். ஒரு ஏக்கரில் 64 தென்னைகளை நட முடியும்.

வட்டி மானியத்தைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேசத்தில் உள்ள கமநல கேந்திர நிலையம் அல்லது கற்பகதரு சங்கங்களின் ஊடாக விண்ணப்பங்களை பெற முடியும். அதன் பின்னர் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையினால் தென்னைப் பயிர்ச் செய்கைக்கான நிலப்பரப்பு பார்வையிடப்பட்டு ஏக்கருக்கு ஏற்ப கடன் தொகைகள் வழங்கப்படும். வழங்கப்படும் கடன் தொகையை குறிப்பிட்ட காலத்துக்குள் செலுத்தும் பட்சத்தில், வருடத்துக்கு 9 வீத வட்டியாக அறவிடப்பட்ட 12 ஆயிரம் ரூபா மீளவும் அவர்களுக்கு மானியமாக வழங்கப்படும். ஆகவே இவ்வாறான கடன்களைப் பெற்று தென்னைச் செய்கையை மேற்கொள்ள முன்வர வேண்டும் - என்றார். (4-ரி)

# மருந்து உற்பத்தியை அதிகரிக்க அதிக நிதி தேவையாகவுள்ளது

## மாகாண வைத்தியத் திணைக்களம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.25

வடக்கு மாகாணத்தில் சித்த மருத்துவ நிலையங்களில் மருந்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை இருப்பதால் அதற்கான நிதி ஒதுக்கீடும் அதிகம் தேவையாக உள்ளது என்று மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தினர் கோரியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் திணைக்களத்துக்கு சொந்தமான மாவட்ட மருத்துவமனைகள் 5, கிராமப்புற மருத்துவமனைகள் 8, நடுத்தர மருந்தகம் 18, சமூக மருத்துவ அலகு 34, இலவச மருந்தகம் 62 உட்பட 127 மருத்துவ நிலையங்கள் உள்ளன. இவற்றில் பயன் பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

2013 ஆம் ஆண்டு 4 இலட்சத்து 50 ஆயிரம், 2014ஆம் ஆண்டு 5 இலட்சம், 2015 ஆம் ஆண்டு 5.9 இலட்சம், 2016ஆம் ஆண்டு 6 இலட்சத்து 74 ஆயிரம் நோயாளிகள் பயன் பெற்றுள்ளனர். ஆகவே மருந்து உற்பத்திகளை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது.

2015ஆம் ஆண்டு 32 மில்லியன் ரூபாவும், 2016ஆம் ஆண்டு 38 மில்லியன் ரூபாவும் மருந்து உற்பத்திக்குச் செலவாகியுள்ளது.

கடந்த வருடம் திணைக்களத்துக்கு 36 மில்லியன் ரூபா கிடைத்திருந்தது. ஆனால் மருந்து உற்பத்திக்கு 38 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது. மருந்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை இருப்பதால் நிதி ஒதுக்கீடுகள் அதிகம் தேவை.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 56 வீதம், மன்னார் 9 வீதம், வவுனியா 12 வீதம், முல்லைத்தீவு 11 வீதம், கிளிநொச்சி மாவட்டம் 12 வீதம் என்ற அளவில் சித்த மருந்து விநியோகம் நடைபெறுகின்றது என்று திணைக்களம் தெரிவித்தது. (4-ரி)

சைட்டம் பிரச்சினையாக இருந்தாலும்

# மருத்துவர் நியமனத்தில் இழுபறிகள் வேண்டாம்

## நியமனத்தை விரைவுபடுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 25

வடக்கு மாகாணத்தில் மருத்துவம் சார்ந்த பிரச்சினைகளில் முதலாவதாக மருத்துவர்கள் பற்றாக்குறைப் பிரச்சினையே காணப்படுகிறது. சைட்டம் விவகாரம் இடையூறாக இருந்தாலும் வெற்றிடங்களை முதலில் நிரப்ப வேண்டும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் கோரப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கில் 23 மருத்துவமனைகளில் மருத்துவர்கள் நிரந்தரமாக இல்லை. வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் பொதுவாக மருத்துவம் சார்ந்த உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் உள்ளன. இவை பற்றிய கோரிக்கையை அமைச்சர் ராஜிதவிடம் முன்வைத்துள்ளோம்.

நோயாளிகளின் நன்மை கருதி ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்களை நியமித்து வருகின்றோம். இது தொடர்பான நடவடிக்கையை உடனடியாக எடுக்குமாறு நாம் கோரியுள்ளோம். பல்கலைக்கழக கற்கையைப் பூர்த்தி செய்து மருத்துவர்கள் வெளியேறும்போது சைட்டம் போன்ற பிரச்சினைகள் வந்துவிடுகின்றன. இதனால் மருத்துவ பீட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன. ஒரு வருடத்தில் கற்கை நெறியை நிறைவு செய்து வெளியேறும் மாணவர்கள் எண்ணிக்கையில் மாற்றம் உண்டாகிறது. இதனால் மருத்துவர்களை நியமிப்பதில் கால தாமதம் ஏற்படுகின்றது. இதுவரை 10 தாதியர்கள் , 13 ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர் - என்றார். (4-ரி)

# மோட்டார் சைக்கிள் திருடிய நபருக்கு 2 வருடங்கள் சிறை

சாவகச்சேரி, ஒக். 25

கைதடியிலுள்ள உணவகத்தில் வாடிக்கையாளரான அரச பணியாளரிடம் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளையும் அதனுள் வைக்கப்பட்டிருந்த 15 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசியையும் திருடிய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்று 2 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பளித் தது.

கடந்த ஓகஸ்ட் 20 ஆம் திகதி திருட்டு இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணையிலிருந்து நாவாந்துறையைச்சேர்ந்த ஒருவர் கைதாகி ஓகஸ்ட் 22 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

அவருக்கு எதிராகக் கடந்த மாதம் நீதிமன்றில் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றில் அவர் தன் மீதான குற்றத்தை ஏற்றுக் கொண்டார். பின்னர் ஒரு லட்சம் ரூபா பிணையில் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குறித்த நபருக்கு இரண்டு வருடங்கள் சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (4- 9)

# சுகாதாரத் திணைக்கள சாரதிகளுக்கு இடமாற்றம் வழங்குவது கட்டாயமே

## சுகாதார அமைச்சு கூறுகிறது

யாழ்ப்பாணம், ஒக். 25

வடக்கு மாகாணத்தில் சுகாதார சாரதிய சேவையில் ஈடுபடுவர்களைச் சுகாதார சேவைகளின் ஊழியர்களாக மாத்திரம் கருத முடியாது. அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்வது கட்டாயமே என்று வடக்கு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாணத்தில் சுகாதார சேவைகளில் சாரதியாக ஈடுபடுபவர்கள் நேர்முகத் தேர்வின் மூலம் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்கள் கொழும்பு அமைச்சின் சுகாதார சேவைகளின் சாரதிகளைப் போன்று தனியே சுகாதார அமைச்சின் சாரதிகளாக மாத்திரம் இருப்பது தொடர்பாக அவர்களது சங்கங்களின் மூலமாகத் தெரிவித்து இருந்தார்கள்.

ஆனால் மாகாண சபை முறைமையின்படி அவர்கள் சுகாதார சேவைகளுக்கு மட்டும் சாரதிகளாக இருக்க முடியாது. புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் வடக்கு மாகாணத்தின் எந்த அமைச்சின் கீழும் பணியாற்றவேண்டும்.

அவ்வாறே சுகாதார அமைச்சிலுள்ளவர்களும் ஏனைய திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டால், அங்கும் சென்று பணிபுரிய வேண்டும்.

இது தொடர்பான சாதகமான முடிவுகளை அமைச்சரவையில் மாத்திரமே பெற்றுக் கொள்ளமுடியும். பொதுவான அமைச்சின் சாரதிகளாக மாத்திரம் கருதப்பட்டு 5 வருடங்களின் பின்னர் அவர்கள் வேறு அமைச்சின் சாரதிகளாக இடமாற்றப் படுவர் என்று சபை கூறியுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-ரி)

# திருட்டு அலைபேசியை வைத்திருந்த அரியாலை நபருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, ஒக். 25

மீசாலையில் மூன்று மாதங்களுக்கு முன்னர் திருடிய 15 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசியைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் அரியாலையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

கடந்த ஜூலை 24 ஆம் திகதி இரவு மீசாலை கிழக்கில் உள்ள வீட்டினுள் உட்புகுந்த நபர் அங்கிருந்து 46 ஆயிரம் ரூபா பணத்தையும் அலைபேசியையும் திருடிச் சென்றுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். குறித்த அலைபேசியிலிருந்து அழைப்பு ஏற்படுத்தப்படுவதாக அலைபேசி நிறுவனத்தினரால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் பொலிஸார் அரியாலை பூம்புகார் பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்தனர். அவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் ஏழாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (4-9)

# வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக கூறி மோசடியில் ஈடுபட்டவர் கைது

## பதிலுக்கு அவரும் 6 பேர் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 25

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகக்கூறி யாழ்ப்பாணத்திலுள்ள பலரிடம் பெருமளவில் பண மோசடி செய்து ஏமாற்றிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் ஊர்காவற்றுறை மண்கும்பான் வெள்ளைக் கடற்கரைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை தங்கி உள்ளதாக அறிந்த நாவாந்துறை மக்கள் அந்தப் பகுதிக்குச் சென்று குறித்த நபரை மடக்கிப் பிடித்துள்ளனர். பிடிபட்டவர் மோசடிக் கும்பலில் ஈடுபடும் தென்னிலங்கையைச் சேர்ந்த குழுவின் உறுப்பினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

பின்னர் குறித்த நபர் நாவாந்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று பொலிஸாரால் கூறப்பட்டது.

இது ஒருபுறமிருக்க, தன் மீது தாக்குதல் நடத்தினர் என்று 6 பேருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டிசந்தேகநபரும் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டின்படி விசாரணை மேற்கொண்ட பொலிஸார் ஆறு சந்தேக நபர்களையும் கைது செய்து யாழ்ப்பாண நீதிவான் மன்றில் முற்படுத்தினர். அவர்களை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (4-37)

# வவுனியா பொது மருத்துவமனை சுகாதார அமைச்சினால் விசாரணை

யாழ்ப்பாணம், ஒக். 25

வவுனியா மாவட்ட மருத்துவமனையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சில சம்பவங்கள் தொடர்பில் கொழும்பு சுகாதார அமைச்சிலிருந்து வந்தீருந்த அதிகாரிகள் கொண்ட குழு கடந்த வாரம் இரு நாள்களாக விசாரணையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட மருத்துவமனையிலும் அதன் நிர்வாக ரீதியிலும் கடந்த காலத்தில் இடம்பெற்றதாகப் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன என்று கூறப்பட்டது. குற்றச் சாட்டுகள் தொடர்பில் மாகாண சுகாதார அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. பின்னர் கொழும்பு சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. விசாரணையின் பின்னர் குறித்த குழுவினர் மாகாணத் திணைக்களத்திலும் இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற்றுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனை தொடர்பான ஒரு நடவடிக்கைக்காக கொழும்பில் இருந்து குறித்த குழு வந்திருந்து சில ஆவணங்களைப் பரீட்சித்துச் சென்றனர் என்று வவுனியா மருத்துவமனையின் பணிப்பாளர் கு.அகிலேந்திரன் தெரிவித்தார்.

"வவுனியா மருத்துவமனை தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் அடங்கிய கடிதம் எமக்கும் பலருக்கும் தனியொருவரால் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் ஒப்பமிடப்படவில்லை. இது தொடர்பில் கொழும்பு சுகாதார அமைச்சினால் கோரப்பட்டதன் பிரகாரம் எம்மால் ஓர் ஆரம்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை அனுப்பப்பட்டது. அதன் பின்னர் மாகாணத் திணைக்களத்துக்கும் வந்திருந்த சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மேலதிக தகவல்களைப் பெற்றுச் சென்றுள்ளனர்" என்று மாகாண சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (4-101)

# மது போதையில் சாரத்தியம் ஐவருக்கு ரூ.75,500 தண்டம்

சாவகச்சேரி, ஒக்.25

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய ஐந்து சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிவான் மன்றால் 75 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

ஐவரும் நேற்றையதினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன. குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம், தலைக்கவசம் இன்றி மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய ஒருவருக்கு 28 ஆயிரத்து 500 ரூபாவும், சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப்பத்திரம் இன்றி மது போதையில் வாகனத்தைச் செலுத்திய மற்றுமொருவருக்கு 25 ஆயிரத்து 500 ரூபாவும் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய ஏனைய மூவருக்கும் தலா 7 ஆயிரத்து 500 ரூபாவுமாக 75ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

(21,9)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியை

**திருமதி சிவாஜினி சிவேந்திரன்**

**(B.A Hons) Dip. in. Edu**

அவர்கள் (23.10.2017) அன்று பண்டார நாயக்கா மாநாட்டு மண்டபவளாக Lotus மண்டபத்தில் நடைபெற்ற பிரதீபா பிரபா பாராட்டு விருதினை கௌரவ கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் முன்னிலையில் பெற்றுக்கொண்டதை மகிழ்வுடன் பாராட்டுகின்றோம்.

Best Wishes

பாடசாலைச்சமூகம்,
யா /நயினாதீவு மகாவித்தியாலயம் நயினாதீவு.

## ஒரு எண்ணெய்! ஆரோக்கியமான பல நன்மைகள்!!!

- ✓ முடி உதிர்வு, பொடுகுத் தொல்லையா?
- ✓ கருமையான நீண்ட கூந்தல் வேண்டுமா?
- ✓ முகத்தில் கரும்புள்ளி, கருவளையமா?
- ✓ முகப்பருவா?
- ✓ தோல் சுருக்கமா?
- ✓ உதடு, குதிக்கால் வெடிப்பா?
- ✓ உடற்பருமன், Cholesterol Blood Sugar இதய நோய் பிரச்சினையா?

Royal

இன்றே பாவியுங்கள்!!!

**"றோயல் ஓர்கானிக் வேர்ஜின் தேங்காய் எண்ணெய்"**

- 100% Natural
- Cold Pressed
- No Refining
- No Bleaching

Re- Packed By:
Royal Industry
Colombo - 13

சந்தைப்படுத்துவோர்
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
021 222 2567

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் நிர்வாக உதவியாளராக (Management Assistant) கடமையாற்றும் கு.சிவதாசன் அவர்களின் அன்பு மனைவி

**திருமதி சிவதாசன் லோகேஸ்வரி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாகத்தினர்,**
**யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச்சங்கம்,**
**530, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

## வலி - கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் வ - து

## கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் கைத்தொழில் கட்டடத்திற்கான வர்ணம் பூசுவதற்கான கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன. தகுதி யானவர்கள் 31.10.2017 இற்கு முன்னதாக அலுவலக நேரத்தில் கட்டடத்தை பார்வையிட்டு கூறுவிலைகளை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**முகாமையாளர்.**

**தொடர்பு-077 354 7046**
**077 934 6543**

## நியத ஜய

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம்: 611 வர்ணம்: மஞ்சள்

சீட்டிழுப்பு திகதி: 24.10.2017

வெற்றி இலக்கங்கள்: 03 04 21 44 ஆங்கில எழுத்து A

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 12,401,056/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 206

வர்ணம் : இளஞ்சிவப்பு

சீட்டிழுப்பு திகதி: 24.10.2017

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 76,260,668/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்: Z 17 58 61 79

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 55

வர்ணம் : நீலம்

சீட்டிழுப்பு திகதி: 2017.10.24

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 65,611,955/-

வெற்றி இலக்கங்கள்: 43 47 64 72 ஆங்கில எழுத்து H

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 24.10.2017 | 2202 | நீலம் |

மிதுனம்

வெற்றி இலக்கங்கள்: 19 23 38 43

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,055,192/=

2017.10.27ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## வாடகைக்கு

NO 129, நாவலர் றோட் யாழ்ப்பாணம்(ஐந்து சந்திக்கு அருகில்) என்னும் முகவரியிலுள்ள முற்றிலும் Tiles பதிக்கப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு-076 927 7796**

## உடன் விற்பனைக்கு

HOME VEDIO SET உடன் விற்பனைக்கு உண்டு. ஒரு கை பாவனை

1) D.V.D
2) BOX
3) Boofer
4) நீள Box நான்கு

**தொடர்பு :- 077 543 9914**

## விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக 30 அடி அகலம் 200 அடி நீளம் கொண்ட இரு கடைகளும் 15 அடி அகலம் 100 அடி நீளம் கொண்ட ஒரு கடையும் யாழ். கோவில் வீதி கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 6 பரப்பு காணியும் 4பரப்பு காணியும் யாழ் சீனிவாசன்றோட்டில்10பரப்புகாணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 077 723 2535**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1987 இல் பிறந்த சூரியன் செவ்வாய் 11 இல் கி.பாவம் 25 மிருக சீரிடம் 4 நிறுவனத்தின் உரிமையாளருக்கு பொருத்தமான மணமகள் தேவை. செவ்வாய் தோஷம் அற்ற சாதகங்களும் பரிசீலிக்கப்படும்.

**தொடர்பு-0212213043**
**071486 5923**

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## 2017 ஆம் / 2018 ஆம் ஆண்டிற்கு தொழிலாளர்களை வழங்கும் ஒப்பந்தகாரரை பதிவுசெய்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் தொழிலாளர் சேவையை வழங்குவதற்கு விரும்பும் ஒப்பந்தகாரரை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 06.11.2017 ஆம் திகதி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். பதிவுக்கான விண்ணப்பங்களை யாழ் மாநகர சபை, பொறியியலாளர் பகுதியில் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

பதிவுக்கட்டணமாக ரூபா.1,000.00 + வரியினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

| இல | வேலைவிபரம் I | கூலிஒருவருக்கானது (2017 -2ம் அரை ஆண்டிற்கானது) II | சராசரியாகஒரு தடவையில் வழங்கக்கூடிய தொழிலாளர் எண்ணிக்கை III |
|---|---|---|---|
| 1 | பயிற்றப்படாததொழிலாளர்கள் ( Un skilled - Male) | 1150.00 | ... |
| 2 | பயிற்றப்படாததொழிலாளர்கள் ( Un skilled- Female) | 1050.00 | ... |
| 3 | பகுதியளவில் பயிற்றப்பட்டதொழிலாளர்கள் ( Semi skilled) | 1250.00 | ... |
| 4 | பயிற்றப்பட்டதொழிலாளர்கள் (Skilled Grade II) | 1350.00 | ... |
| 5 | சாரதி (உழவுஇயந்திரம்,கனரகவாகனம்செலுத்த) (Skilled Grade II) | 1350.00 | ... |

I. வேலை அனுபவமுள்ள தொழிலாளர்கள்

II. யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் ஆறு மாதங்களுக்கொரு முறை நிர்ணயிக்கப்படும் எட்டுமணி வேலைக்கான ஒரு நாட் கொடுப்பனவு (குறிப்பிடப்பட்டுள்ளது).

III. சேவை வகுதிகள் ஒவ்வொன்றிலும் ஒரே நேரத்தில் வழங்கக்கூடிய சராசரித் தொழிலாளர்களின் எண்ணிக்கை.

**திரு.பொ.வாகீசன்,**
**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**
**25.10.2017**

## பேராசான் கலாநிதி பா.தனபாலன்

## அவர்களுக்கு

## (உப பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

## தேசிய இரத்தின தீப விருது - வாழ்த்துகின்றோம்

வடக்கு ஊடகக் கல்விக் கல்லூரி,
மலையக கலை, கலாசார சங்க எற்பாட்டில்





22.10.2017 அன்று வவுனியா ஓவியா விருந்தினர் விடுதியில் வர்த்தக, வாணிப அமைச்சர் கௌரவ ரிசாட் பதியுதீன் அவர்களால் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு.அப்துல் மப்றுப், புத்தளம் பாராளுமன்ற உறுப்பினர் திரு.நாவி, அனுராதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. குசாக்ரகுமான், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திரு. காதர் மஸ்தான் ஆகியோர் மத்தியில் எமது பேராசான் கலாநிதி, பா.தனபாலன் அவர்களுக்கு "தேசிய இரத்தின தீப" விருது வழங்கப்பட்டமைக்காக அவரைப் பாராட்டுகின்றோம்.

- யுத்தத்தால் பாதிப்புற்ற வன்னி மாணவர், இளைஞர்களுக்கான கல்வி விழிப்புணர்வு முகாம்கள், தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறைகள்
- மக்களுக்கான ஆலோசனை வழிகாட்டல், தெருவெளி நாடகமூலமான மறு வாழ்வுக்கான விழிப்புணர்வுகள், ஊடகங்கள் மூலமான கருத்தமைவுகள்.
- அதிபர், ஆசிரியர், சமூகத்தினருக்கான களப்பயில்வுகள், ஆய்வுகள், வெளியீடுகள், புத்தாக்கங்கள்.
- எம் மண்ணில் வரையறுக்கப்பட்டிருந்த உயர் கல்வி ஆய்வுக் கலாசாரத்தை சர்வதேச தரத்திற்கு மாற்றி சமூகம் பயன்படும் வகையில் உருவாக்கிவரும் சிற்பி.
- திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னம்பிட்டி, அனுராதபுரம், புத்தளம், மாத்தளை, கண்டி, நுவரெலியா ஆகிய பிரதேசங்களில் கல்வி, கலாசார பண்பாட்டெழுச்சி விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களை அமைதியாக நிறைவேற்றும் கல்விப் போராளி, நடமாடும் பல்கலைக் கழகம்! இளைஞர்களை வலுவூட்டும் வளவாளனே! உம் சேவை தொடர வாழ்த்துவதுடன் உம்முடன் நாமும் மனிதத்துவ விடுதலைக்காக கல்வியை கருவியாக்குவோம்.

**ஜெ.பேனாட் மற்றும்**
**பேராசானிடம் கல்வி கற்று உயர்ந்த மாணவர்கள்**

# நூல்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு நாளை ஆரம்பம்

சாவகச்சேரி, ஒக்.25

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டிய நூல்களின் காட்சிப்படுத்தல் நிகழ்வு நாளை சாவகச்சேரி நகரசபையின் கீழுள்ள சாவகச்சேரி பொது நூலகத்தில் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து மூன்று நாள்கள் இந்தக் காட்சிப்படுத்தல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதற்கு நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசன் தலைமை வகிப்பார். காலை மு.ப.9.30 மணிக்கு முதல்நாள் நிகழ்வின் நூல்களின் காட்சிப்படுத்தல் கூடங்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைப்பார். நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் ந.ஜெயகுமாரன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ல.முகுந்தன் ஆகியோர் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (21,9)

வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42 ஆம் வீதியில் இரண்டு அறைகள் இணைந்த குளியலறைகளுடன் கூடிய தொடர்மாடி வீடு நாள், மாத வாடகைக்குண்டு.

தொடர்பு - 077 837 8597

விற்பனைக்குண்டு

மோட்டார் சைக்கிள்கள்

1. BAJAJ DISCOVER-125 - NPBEX-XXXX
2. HERO PLEASURE- NP BFB-XXXX
3. HERO DASH - NP BDT-XXXX
4. HONDA DIO- NPBCM-XXXX
5. HONDA DIO- NPBFB-XXXX
6. TVS APACHE 200 - NPBFK-XXXX
7. BAJAJ PULSAR-150 - NPBDG-XXXX
8. BAJAJ AVENGER - NPBEP-XXXX
9. BAJAJ PULSAR NS 200 - NPBEO-XXXX
10. TVS WEGO - NPBFF-XXXX
11. BAJAJ DISCOVER - 125 - WP BAK XXXX

தொடர்புகளுக்கு : மேகாந் - 077 060 8074

TRADE FINANCE AND INVESTMENTS PLC
No. 233, Stanley Road, Jaffna.
021 221 9997, 021 222 1898

## மரண அறிவித்தல்

### திருமதி வசந்தாதேவி சுகுணதீரன்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, தெஹிவளை யை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தாதேவி சுகுணதீரன் நேற்று (24.10.2017) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு (நில அளவையாளர்) - தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை (ஆசிரியர்) - தங்கமணி (ஆசிரியர்) தம்பதியரின் அன்பு மருமகளும் சுகுணதீரனின் (ஓய்வுபெற்ற கணக்காளர் - கல்வித் திணைக்களம்) அன்பு மனைவியும் தனஞ்சயன் (ஜனசக்தி காப்புறுதி), சுமங்கலி (லண்டன்) ஆகியோரின் அன்பு அன்னையும் ஜெயந்தினி, கணேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் விவேதன், சோபினி, தரணிதரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம், செல்வராசா மற்றும் செல்வராணி (லண்டன்), தேவராஜா (கனடா), இந்திராணி (கனடா), ஆனந்தராசா (கனடா), இ.ரவீந்திரராஜா (திருநெல்வேலி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2017) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் மகிந்த மலர்ச்சாலை, கல்கிசையில் நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராமுப்பிள்ளை சுகுணதீரன் (கணவர்)
சுகுணதரன் தனஞ்சயன் (மகன்) - 077 3124123
தம்பு இரவீந்திரராஜா (சகோதரன்) - 077 133 1771

# ஒரே நாளில் கண் சிகிச்சை பெற்ற 9 பேருக்குப் பாதிப்பு

## தனியார் வைத்தியசாலையில் நடந்த சத்திரசிகிச்சையின் போது அசம்பாவிதம்

யாழ்ப்பாணம், ஒக். 25

ஒரே நாளில் கண்ணில் 'கற்றாக்' சிகிச்சை பெற்றுக்கொண்ட 10 பேருக்கு ஒரேயடியாக நோய்த் தொற்று ஏற்பட்டு பார்வை பாதிக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பான மருத்துவ சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள நொதேர்ன் சென்றல் தனியார் மருத்துவமனையில் கண்ணில் "கற்றாக்" சத்திரசிகிச்சை மேற்கொண்ட ஒன்பது பேருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளார்கள்.

கண் சிகிச்சை நிபுணர் மலரவனால் சிகிச்சை வழங்கப்பட்ட பின்னர் கண்ணில் வலி ஏற்பட்டதை அடுத்து அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சத்திரசிகிச்சையின்போது கிருமித் தொற்று ஏற்பட்டமையே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. "அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் பரிசோதனையின் அறிக்கை இன்று கிடைக்கும்போதே உண்மை தெரியவரும்" என்று போதனா வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை சிகிச்சை இடம்பெற்றுள்ளது. மாலை 6 மணியிலிருந்து 7 மணிவரை நடந்த சிகிச்சையின் பின்னர் 8 மணிக்கு அனைவரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

"கடந்த சனிக்கிழமை எமக்கு கண் மருத்துவ நிபுணர் மலரவனால் சிகிச்சை வழங்கப்பட்டது. அன்றைய தினமே சிகிச்சை முடிந்து வீட்டிற்கு செல்ல அனுமதிக்கப்பட்டேன். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சைக்காக வருமாறு கூறினார்கள். அதன்படி சத்திர சிகிச்சைக்குப் பின்னரான சிகிச்சைக்குச்சென்று வீடு திரும்பினேன். அன்றிரவு உறங்கிவிட்டேன். நேற்றுமுன்தினம்காலை கண்விழித்தபோது கண்ணில் வலி ஏற்பட்டது. சத்திர சிகிச்சையின் பின்னர் ஏற்படும் சாதாரண வலியாக இருக்கும் என்று அதனைப் பெரிதுபடுத்தவில்லை.

சில மணிநேரங்களின் பின்னர் சிகிச்சை நடந்த மருத்துவமனையிலிருந்து தொலைபேசியில் எனக்கு அழைப்பை ஏற்படுத்தி கண்ணில் வலி உள்ளதா என்று கேட்டனர். ஆம் என்று பதில் சொன்னதும் உடனடியாக மருத்துவமனைக்கு வருமாறு கூறினார்கள். அங்கு சென்றபோது என்னுடன் சனிக்கிழமை சத்திர சிகிச்சை செய்து கொண்டவர்களும் அங்கு வந்திருந்தார்கள். அங்கு வைத்துச் சிகிச்சை வழங்கப்பட்டது.

பின்னர் திங்கட்கிழமை இரவு (நேற்று முன்தினமிரவு) எம்மை மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர். சத்திரசிகிச்சையின்போது கண்ணில் ஏற்பட்ட கிருமித் தொற்றுக்காகவே எமக்குத் தற்போது சிகிச்சை அளிக்கப்படுகின்றது என்று எமக்குக் கூறப்பட்டுள்ளது" என்று தனது பெயரை அடையாளப்படுத்த விரும்பாத, பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் தெரிவித்தார்.

"சிகிச்சைக்காக 60 ஆயிரம் ரூபா தொடக்கம் 75 ஆயிரம் ரூபா வரையில் செலவிட்டிருந்தோம். தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கண்சிகிச்சை விடுதியில் தங்கி மேலதிக சிகிச்சையைப் பெறுகின்றோம் என்பது வேடிக்கையாக இருக்கிறது" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சத்திரசிகிச்சையின்போது என்ன தவறு இடம்பெற்றது என்பது சொல்லப்படவில்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் சிலர் விசனப்பட்டனர். பார்வையில் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் பொறுப்புக் கூறவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

"கண்ணில் ஏற்பட்ட பாதிப்புக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. கிருமித் தொற்றா அல்லது வேறு காரணத்தால் பாதிப்பு ஏற்பட்டதா என்பது தெரியவில்லை. அது தொடர்பில் நடத்தப்படும் பரிசோதனை அறிக்கை இன்று கிடைக்கும் அதன் போதே காரணத்தை உறுதிப்படுத்தலாம். அவர்களுக்குப் போதனா மருத்துவமனையில் வைத்துச் சிகிச்சை வழங்கப்படுகிறது. இன்று விழித்திரை சத்திர சிகிச்சை நிபுணர் அவர்களைப் பார்வையிட்டு சிகிச்சை வழங்குவார். ஓரிரு நாள்களில் சரியான நிலைமை தெரியவரும். தற்போது நவீன வசதிகளுடனான சிகிச்சைகள் உள்ளன. விரைவில் குணப்படுத்தலாம் என்றே நம்புகிறேன்" என்று கண் சிகிச்சை நிபுணர் மருத்துவர் மு.மலரவன் தெரிவித்தார்.

"சத்திர சிகிச்சைக்கான மருந்துகள் வெளிநாட்டிலிருந்து வருபவை. அவற்றில் ஏதாவது மாறுதல் உள்ளதா, அல்லது சத்திரசிகிச்சைக் கருவிகளில் அல்லது அதற்கான இயந்திரங்களில் கோளாறு உள்ளதா என்பன பற்றி உரிய தரப்பினர் ஆய்வு செய்வர். சத்திர சிகிச்சைக் கூடத்தையும் அதற்குரியவர்கள் ஆய்வு செய்வர். சுகாதார அமைச்சும் இந்த விடயத்தில் தலையிடும்" என்றும் மலரவன் தெரிவித்தார்.

"தனியார் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட கண் சத்திர சிகிச்சையின்போது ஒரு வகைத் தொற்றுக் காரணமாகப் பாதிக்கப்பட்ட 7 ஆண்களும் 2 பெண்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தொற்றுக்கான சிகிச்சை வழங்கப்படுகிறது. அவர்களில் ஒருவர் வவுனியாவில் இருந்து வந்திருந்தவர். பாதிக்கப்பட்ட அனைவரும் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள். கிருமித் தொற்றுத் தொடர்பில் போதனா மருத்துவமனையின் நுண்உயிரியல் பிரிவினர் பரிசோதனை மேற்கொண்டுள்ளனர். பரிசோதனையின் பின்னரே தொற்றுக்கான காரணம் தெரியவரும்" என்று போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். 2006 ஆம் ஆண்டு காலத்திலும் இதுபோன்ற நிலை யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது. அதில் சிலருக்குப் பார்வை இழப்பு ஏற்பட்டது என்று மருத்துவத் தரப்பினரால் கூறப்பட்டது. (உ-4,37,106,101)

# மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.25

தீவகக் கல்வி வலய மாணவர் நாடாளுமன்றக் கன்னி அமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு வேலணை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு உலக மையம் அமைப்பு மற்றும் வேலணை மக்கள் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் க.சர்வேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.இராசையா ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக புங்குடுதீவு உலக மைய அமைப்பின் தலைவர் சதீஸ், வேலணை மக்கள் ஒன்றியத் தலைவர் அரசரட்ணம் ஆகியோரும் கலந்து கொள்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது (21,9)

# சூரன் போர்

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் இன்று மாலை 4 மணிக்கு கந்த சஷ்டி சிறப்பு அபிசேகம் நடைபெற்று சூரன் போர் இடம்பெறுமென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (21,9)

*** *** *** *** *** *** *** *** ***

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் இன்று புதன்கிழமை பிற்பகல் சூரசங்கார நிகழ்வு இடம்பெறும்.

இன்று காலை சிறப்புப் பூசைகள், அபிஷேகம் இடம்பெற்று பி.ப 3 மணிக்கு சூரசங்காரம் இடம்பெறும். நாளை வியாழக்கிழமை காலையில் தீர்த்தத் திருவிழாவும் வெள்ளிக்கிழமை பி.ப 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும். (4-17)

# ஆங்கில தின நிகழ்வும் பரிசில்கள் வழங்கலும்

தென்மராட்சி, ஒக்.25

தென்மராட்சி கல்வி வலய ஆங்கில தின நிகழ்வும், பரிசில் வழங்கலும் நேற்றுமுன்தினம்சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் போது மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

(௯)

# பருவகால இடரை எதிர்கொள்வது தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.25

பருவகால இடர் நிலைமைகளை எதிர்நோக்குவதற்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை மு.ப.10 மணிக்கு சாவகச்சேரி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கலந்துரையாடலில் பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களத் தலைவர்கள் இடர் முகாமைத்துவக் குழு உறுப்பினாகள், மற்றும் பங்குதாரர்களைக் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி தே.பாபு அறிவித்துள்ளார். (21,9)




# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக யாழ்.பேருந்து நிலையத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.25
அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில்நேற்றுக்கவனவீர்ப்புப்போராட்டம் இடம்பெற்றது.
சமவுரிமை இயக்கம் மற்றும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்தப் போராட்டம் யாழ்.மையப் பேருந்து நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.
உணவு ஒறுப்பில் ஈடுபடும் அரசியல் கைதிகளின் உயிர்களைப் பறிக்காதே, அவர்களின் வழக்குகளை அநுராதபுரத்தில் இருந்து வவுனியாவுக்கு மாற்று, அனைத்து அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பில் விடுதலை செய் போன்ற கோரிக்கைகளை முன் வைத்துப் போராட்டம் நடத்தப்பட்டது.
அநுராதபுர சிறையில் உணவு ஒறுப்பில் ஈடுபடும் மூன்று அரசியல் கைதிகள் விடயத்தில் அரச தலைவர் இரண்டு நாள்களுக்குள் நல்ல தீர்மானம் ஒன்றை அறிவிக்கவேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் வலியுறுத்தப்பட்டது.
சகல தமிழ் அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பின் அடிப்படையில் விரைவில் விடுவிக்க நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.
"விடுதலை செய் விடுதலை செய்' அரசியல் கைதிகளை விடுதலை செய்" , "பழிவாங்காதே அரசியல் கைதிகளைப் பழிவாங்காதே", "உணவு ஒறுப்பில் இருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கையை அரசே நிறைவேற்று" , "மூன்று அரசியல் கைதிகளையும் வவுனியா நீதிமன்றுக்கு மாற்று", "உணவை மறுத்துள்ள மூன்று அரசியல் கைதிகளை சாகடிக்காதே", "தமிழ் அரசியல் கைதிகளின்மீது பேரினவாத பழிவாங்கல்களை நடத்தாதே" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர்.
இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் அரசியல் கைதிகளின் உறவினர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி2)

## யானைக்குட்டி வழக்கு விவகாரம்; சேனநாயக்கவுக்கு அழைப்பு

கொழும்பு,ஒக்.25
தம்மாலோக தேரருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் முதல் சாட்சியாளரான, அயலுறவு இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க நேற்று நீதிமன்றில் முன்னிலையாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.
தேரர் சட்டவிரோதமாக யானைக் குட்டி வைத்திருந்த வழக்கின் முதல் சாட்சியாளரான அயலுறவு இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்கவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்தது.
நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கில் வசந்த சேனநாயக்க நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. சேனாநாயக்க அத்தியாவசிய கடமை காரணமாக நீதிமன்றத்தில் முன்னிலையாக வில்லை என சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச மூத்த சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரியப்படுத்தினார் எனக் கூறப்பட்டது. வழக்கின் அடுத்த கட்ட சாட்சி விசாரணைகள் எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)



கிளிநொச்சி மகா தேவா சைவச் சிறுவர் இல்லத்தின் குருகுலபிதா அப்புஜியின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.
பொன். நித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, ஓய்வுநிலை அரச உத்தியோகத்தர்கள் மகாதேவா சைவச் சிறுவர் இல்ல உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற.ரி4)





## நிலங்கள் பிரிக்கப்பட்டதை கண்டித்து ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு.ஒக்.25
மட்டக்களப்பு, கல்குடா தொகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயத்தில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பிரிக்கப்பட்டுள்ளதைக் கண்டித்து, வாழைச்சேனையில் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று, நேற்று நடைபெற்றது.
பொது அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
வாழைச்சேனை, கைலாயப் பிள்ளையார் ஆலய முன்றலில் ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி, பிரதேச செயலகத்தில் முடிவடைந்தது. அங்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை, உதவித் திட்டமிடல் பணிப்பாளரிடம் பேரணியில் கலந்துகொண்டோர் கையளித்தனர். (ற.ரி4)

## பாலத்தின் சீரமைப்புக்காக போக்குவரத்தில் மாற்றம்

கொழும்பு,ஒக்.25
இராஜகிரிய மேம்பாலத்தின் சீரமைப்புப் பணிகள் காரணமாக, பத்தரமுல்லை மற்றும் பொரளைக்கு இடையிலான வீதிகளின் வாகனப் போக்குவரத்து நேற்றுத் தொடக்கம் மட்டுப்படுத்தப்பட்டது.
சீரமைப்புப் பணிகள் நிறைவடையும் வரை, வீதியின் இரு சந்திகள் மூடப்படவுள்ளன என வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்தனர். வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு, பொலிஸார் சாரதிகளுக்குத் தெரியப்படுத்தினர். (ற.ரி4)

## ஐ.நா. தினத்தை முன்னிட்டு கொடியேற்றும் நிகழ்வு

கொழும்பு.ஒக்.25
72 ஆவது ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்டு கொடியேற்றும் நிகழ்வு நேற்றுக் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் மற்றும் ஐ.நா. வதிவிட பிரதிநிதி திருமதி. ஊனா மெக்கோலே ஆகியோருடன், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், இராஜதந்திரிகள் மற்றும் இலங்கை ஐ.நா நிறுவனத்தின் ஊழியர்கள் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)



## குடும்பத் தலைவர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி,ஒக்.25
கிளிநொச்சி மாவட்டம் பிரமந்தனாறு குளம் பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.
கிளிநொச்சி கண்ணகிநகர் பகுதியைச் சேர்ந்த 37 வயதான வரே தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.
நேற்று முன்தினம் காணாமல் போயிருந்த நிலையில் அவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற,ரி4)

## இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.25
எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்களின் விளக்கமறியல் எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.
வழக்கை விசாரித்த ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் எம்.எம்.ரியாழ், மீனவர்களை எதிர்வரும் நவம்பர் 7ந் தேதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று உத்தரவிட்டார்.
கடந்த செப்ரெம்பர் 12ஆம் திகதி கைது இவர்கள் கைது செய்யப்பட்டனர். தமிழ் நாட்டின் மண்டபம் மற்றும் இராமேஸ்வரம் பகுதிகளைச் சேர்ந்த பன்னிரண்டு மீனவர்களை நான்காவது முறையாக பொலிஸார் ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். எனத் தெரிவிக்கப்பட்டது. (ற,ரி4)



## ஜப்பானுடன் பலமான உறவைக் கட்டியெழுப்ப ரணில் விருப்பம்

கொழும்பு, ஒக். 25
ஜப்பானின் தலைமை அமைச்சராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள சின்சோ அபேக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானிய நாடாளுமன்றத்துக்கு நடந்த தேர்தலில் மொத்தமுள்ள 465 இடங்களில், 300 இற்கும் மேற்பட்ட இடங்களில் பிரதமர் சின்சோ அபேயின் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது.

இதுகுறித்துக் கீச்சகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வாழ்த்துத் தெரிவித்து பதிவு இட்டுள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் கீச்சகத்தில் ஜப்பானியத் தலைமை அமைச்சருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளதுடன், ஜப்பான் இலங்கை ஒத்துழைப்பைப் பலமாக கட்டியெழுப்புவதற்கு, எதிர்பார்த்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (5)

# முஸ்லிம் கூட்டமைப்பு விரைவில் அறிவிப்பு

## மு.க. முன்னாள் செயலர் ஹசனலி

கொழும்பு, ஒக். 25
முஸ்லிம் கட்சிகளை இணைத்து அமைக்கப்படவுள்ள முஸ்லிம் தேசியக்கூட்டமைப்புக்குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை அடுத்தவாரம் வெளியிடவுள்ளதாகச் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலர் எம்.ரி.ஹஸனலி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
முஸ்லிம் தேசியக் கூட்டமைப்புக்கான பணிகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் அமைப்பு ரீதியிலான வேலைத் திட்டங்கள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. தற்போது அது குறித்த எழுத்தாக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதனை இவ்வாரமளவில் நிறைவு செய்து கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கிறோம். கூட்டமைப்புத் தொடர்பிலான உத்தியோகபூர்வத் தீர்மானத்தை அடுத்த வாரம் பகிரங்கப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். மேலும்சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவையும்விரைவில் சந்தித்து முஸ்லிம் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளோம்.



கூட்டமைப்புத் தொடர்பில் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட சந்திப்புகளின் போது பெருவரவேற்புக் கிடைத்துள்ளது. முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிடுவதைப் புத்திஜீவிகள் உட்பட சாதாரண மக்களும் விரும்புகின்றனர். எதிர்வரும்தேர்தலில்முஸ்லிம் தேசியக்கூட்டமைப்பைக் களமிறக்குவதை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம் - என்றார். (5.31)

## காணாமற்போனோர் பணியக உறுப்பினர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கொழும்பு, ஒக். 25
காணாமற்போனோர் பணியகத்துக்கான உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கு, அரசமைப்புப் பேரவையினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் பணியகத்தை உருவாக்கும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, கடந்த ஜூலை மாதம் அரச தலைவரின் கையெழுத்துடன், வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

காணாமற்போனோர் பணியகத்தின் உறுப்பினர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இழுபறி நிலை நீடித்து வந்தது.

இதுகுறித்துக் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில், அரசமைப்புப் பேரவை இலங்கையின் மும்மொழி நாளிதழ்களிலும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அரசமைப்புப் பேரவையின் பதில்ச் செயலர் நாயகத்தால் செய்யப்பட்டுள்ள விளம்பரங்களுக்கு அமைய, நவம்பர் 6ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள், உண்மையைக் கண்டறிதல் அல்லது விசாரணைகள், மனித உரிமைகள் சட்டம், பன்னாட்டுச் சட்டம், மனிதாபிமான செயற்பாடுகளில் முன் அனுபவம் இருக்க வேண்டும் அல்லது காணாமற்போனோர் பணியகத்தின் பணிகளை நிறைவேற்றுவதுடன் தொடர்புடைய வேறு தகமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (5)

## சைட்டம் விவகாரத்தில் உணவு ஒறுப்புப் போராட்டம்

கொழும்பு, ஒக். 25
சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச மருத்துவபீட மாணவர்களின் பெற்றோர் சாகும்வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தைநடத்துவதற்குத்தயாராகி வருகின்றனர். இது தொடர்பில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சிறப்புமாநாடொன்றைநடத்தத்தீர்மானம் எடுக்கவுள்ளனர். (5,31)

## எனது கணிப்புத் தவறாகிவிட்டது

### வடக்கு ஆளுநர் குரே தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 25
நாட்டில் சிங்கள மக்கள் மட்டுமே நல்லவர்கள் என்று நாம் நினைத்துவந்தோம்.
வடக்கிலும் நல்ல மனிதர்கள் இருக்கின்றார்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

பாடசாலையின் பரிசளிப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கிலும் தெற்கிலும் மனித நேயமிக்க மனிதர்கள் இருக்கின்றார்கள்.

குறுகிய அரசியல் நோக்கமும் அதிக ஆசை பிடித்த தலைவர்களுமே இந்த மனித நேயத்திற்கு வேட்டுவைக்கின்றனர்.

ஒரே நாடு ஒரே தேசம் என்று இருந்தால் ஒரு தலைவர் இருப்பார். ஆனால் நாடு சிறுசிறு துண்டுகளாக இன ரீதியாகவும் மத ரீதியாகவும் பிரிக்கப்பட்டால் பல தலைவர்கள் இருப்பார்கள். சிறந்த தலைமைத்துவம் உருவாகப் பிணக்குகள் தீர்க்கப்பட வேண்டும். அவ்வாறு செய்பவர் சிறந்த தலைவராக உருவாகுவார். அனைவரும் ஒன்றுபட்டால் தலைமைத்துவம் உருவாகும். அரசியல்வாதிகள் தமது குறுகிய அரசியல் இலாபத்துக்காக போராடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் - என்றார். (5.31)

## கைதான ஐ.தே.க. உறுப்பினர் வீட்டிலிருந்து ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, ஒக். 25
கம்பகா மாவட்டத்தின் திவுலுபிட்டியவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து கைது செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ரந்தீர் ரொட்ரிகோ வீட்டிலிருந்து ஆயுதங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பாதாள உலகக் குழுவினர் எனக் கூறப்படும் குழுவுக்கும் சிறப்பு அதிரடிப் படையினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது. பாதாள உலகக் குழுத் தலைவன் என்று நம்பப்படும் குரே கொல்லப்பட்டிருந்தார். இந்தச் சம்பவத்தையடுத்து 7பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களுள் ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினரும் அவரது மனைவியும் உள்ளடக்கம்.

வத்தளையிலுள்ள மாகாண சபை உறுப்பினரின் வீட்டைச் சோதனையிட்ட பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர், அங்கிருந்து 115 தோட்டாக்கள், குண்டு துளைக்காத அங்கி மற்றும் கைத்துப்பாக்கி வைக்கப் பயன்படுத்தும் உறை ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளனர். (5)



## மோட்டார் சைக்கிளில் சுற்றிய அமைச்சர்

கொழும்பு, ஒக். 25
உள்ளூராட்சிச் சபைகள் மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தனது அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கண்காணிப்பதற்காக மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். சமூகவலைத் தளங்களில் இந்த ஒளிப்படம் வேகமாகப் பகிரப்பட்டு வருகின்றது. (5)

### முதன்முறையாக

## வானூர்தி தயாரிக்கப் போகின்றது வான்படை

கொழும்பு, ஒக். 25
இலங்கையில் முதல் தடவையாக வான் படையினர் வானூர்தி தயாரிப்புப் பணியில் ஈடுபடவுள்ளதாக வான் படைத் தளபதி எயார் மார்சல் கபில ஜயம்பதி தெரிவித்தார்.

போரினால் உயிரிழந்த வான்படை வீரர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு ஆசி வேண்டி கண்டித் தலதா மாளிகையில் நடைபெற்ற மத வழிபாடுகளில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
வான்படையினூடாக வானூர்திகளை நிர்வகிக்கும் நடவடிக்கைகளே இடம்பெற்றுள்ளன. பாதுகாப்புச் செயலரின் ஆலோசனைக்கு அமைவாக வானூர்திகளை இங்கு தயாரிப்பதற்குத் தேவையான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தேவையான இடம், சூழல், உற்பத்திப் பொறிகள் நிறைவடைந்த பின்னர் அடுத்த ஆண்டு முதல் வானூர்திகளை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

போர்க் காலத்தில் போர் காரணமாக வானூர்திகள் சேதமடைந்தாலும் தற்பொழுது பறவைகளினால் சேதம் ஏற்படுகிறது.

எமது நாட்டிற்குரிய பன்னாட்டுக் கடற்பரப்பைப் பாதுகாப்பதற்கும், நாட்டிற்குள் சட்ட விரோதமாகப் பொருள்கள் எடுத்து வரப்படுவதைத் தடுக்கவும் கடற்படையுடன் இணைந்து கண்காணிப்பு மற்றும் சிறப்புப் பாதுகாப்பு முன்னெடுப்புகளைச் செய்து வருகிறோம்.

எமது நாட்டில் வானூர்திகளை உற்பத்தி செய்யும் அதேவேளை, நாட்டிற்கு உகந்த தொழில்நுட்பத்துடன் கூடிய வானூர்திகளை இறக்குமதி செய்வதற்கும் வான்படை திட்டமிட்டுள்ளது - என்றார். (5)

# உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளி நீக்கப்படவேண்டும்

## நாடு வளர்ச்சியடைய அதுவே வழி என்கிறார் கரு ஜயசூரிய

இன ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும்நாடுபிளவுபடுமாயின் நாட்டை எம்மால் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்செல்ல முடியாது. உள்ளவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளியை நீக்கினால் நாடு வளர்ச்சியடையும். இடைவெளியை நீக்க வேண்டியது அரசின் பெரிய பொறுப்பாகும். இவ்வாறு சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இன ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் நாடு பிளவுபடுமானால் நாட்டை எம்மால் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியாது. சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதனூடாக மாத்திரமே நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு இட்டு செல்ல முடியும். உள்ளவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளி காரணமாகவே உலகில் புரட்சிகள் ஏற்படுகின்றன. எமது நாட்டிலும் இளைஞர்களால் பல போராட்டங்கள் நடந்தமையால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன.

உள்ளவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளி நீக்கப்படவேண்டும். இதனை நீக்கினால் நாடுவளர்ச்சியடையும். இடைவெளியை நீக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். இதன்பிரகாரம் வறுமையை ஒழித்து அதிகளவில் தொழில் வாய்ப்புகளை வழங்கி நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டும் - என்றார். (5.31)

# ஒற்றையாட்சி மீது கைவைத்தால் அரசின் ஆட்டத்தை முடிப்போம்

## அபாய எச்சரிக்கை விடுக்கிறார் விமலரத்ன தேரர்

கொழும்பு, ஒக். 25

புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டை கூட்டாட்சிப் பாதையை நோக்கி அழைத்துச்செல்வதே அரசின் நோக்கமாக உள்ளது. ஒற்றையாட்சியின் மீது கைவைத்தால் பாரதூரமான விளைவுகளை அரசு சந்திக்க நேரிடும். இவ்வாறு கோட்டே, சிறி கல்யாணி சமகிரி தர்ம மகா சங்க சபாவின் அனுநாயக்க தேரரான பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு பௌத்த மாகா சம்மேளன மண்டபத்தில் நேற்று நடைபெற்ற புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை குறித்து விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

நாட்டில் நடைமுறையில் உள்ள ஒற்றையாட்சியை வேறு வகையில் அர்த்தப்படுத்த வேண்டாம். முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் புதிய அரசமைப்பு தொடர்பான யோசனையொன்றைக் கொண்டு வந்திருந்தார். அவ்வாறான தொரு யோசனையே தற்போது மாறுபட்ட விதத்தில் கொண்டு வரப்படுகின்றது. இறுதியில் எவருக்கும் தெரியாத வகையில் கூட்டாட்சியை நோக்கி நகர்வதே இதன் இலக்காகும்.

அரசுக்கு எதிராகவோ அல்லது எவரின் அழுத்தத்தின் பேரிலோ நான் கருத்துக்களை முன்வைக்கவில்லை. அஸ்கிரிய, மல்வத்த தேரர்கள் நேரடியாக கருத்துக்களை முன்வைத்திருக்காவிடினும் அவர்களின் ஆசீர்வாதத்துடன்தான் சங்க மகா சபை தமது கருத்துக்களை முன் வைக்கும் - என்றார். (5)

# ஐ.தே.க. கிழக்கில் தனித்துப் போட்டி

## அந்தக் கட்சியின் இம்ரான் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 25

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி கிழக்கு மாகாணத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளது. இதற்குரிய ஏற்பாடுகள் - பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இவ்வாறு அந்தக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூப் தெரிவித்தார்.



கட்சி உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் திருகோணமலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1989ஆம் ஆண்டு வரை கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியே தனிப் பெரும் கட்சியாக ஆட்சி அமைத்தது. முஸ்லிம் காங்கிரசுடன் கட்சி செய்து கொண்ட ஒப்பந்தமே கிழக்கில் குறிப்பாக அம்பாறையில் கட்சியின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்து கட்சியைக் கிழக்கில் மீளக் கட்டியெழுப்பும் பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகிறோம். பலர் இன்று கிழக்கில் தமது தாய் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ளனர்.

திருகோணமலையைப் பொறுத்தவரை உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டே முஸ்லிம் சிங்கள மக்கள் பெரும்பான்மையை வசிக்கும் அனைத்துச் சபைகளையும் தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள சபைகளில் அதிக உறுப்பினர்களையும் கைப்பற்றலாம். அம்பாறை மற்றும் மட்டக்களப்பில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் சபைகளில் பெரும்பான்மையான அங்கத்தவர்களை பெறலாம்.

கிழக்கு மாகாணத்தில் தனித்துப் போட்டியிடுவதே எமது கட்சியின் எதிர்கால வளர்ச்சிக்கு வழி அமைக்கும். இருந்தாலும் வழமை போன்று யானையின் முதுகில் சவாரி செய்ய அரசின் பங்காளிக் கட்சிகள் திட்டமிட்டு வருகின்றன.

இந்தக் கட்சிகள் திட்டமிடுவது போன்று எமது கட்சி இவர்களுடன் கூட்டணி அமைத்தால் 1989ஆம் ஆண்டு அம்பாறையில் எமது கட்சிக்கு ஏற்பட்ட நிலையே எதிர்காலத்தில் கிழக்கு மாகாணம் முழுவதும் ஏற்படும். இதைத் தடுத்து கிழக்கில் மீண்டும் தனிப்பெரும் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியை மாற்றியமைக்க நாம் தனித்துப் போட்டியிடுவதே சிறந்தது.

நான் இவ்விடத்தில் முஸ்லிம் கட்சிகளுக்குச் சவால் விடுகிறேன்.

முடிந்தால் யானையின் முதுகில் சவாரி செய்யாமல் தனித்துப்போட்டியிட்டுத் திருகோணமலையில் ஒரு சபையையாவது கைப்பற்றிக் காட்டுங்கள் - என்றார். (5)

# யாசகர்களின் மறுவாழ்வுக்கு தனியான இடம் விரைவில்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 25

கொழும்பு மாநகரில் அலைந்து திரியும் யாசகர்களுக்கு மறுவாழ்வு வழங்கு வதற்குத் தனியான இடம் அடையாளம் காணப்பட்டு அங்கு அவர்களுக்கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்தப்படுமென முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

யாசகர்களும் எமது சமூகத்தில் ஒரு பிரிவினரே. அவர்களது தேவைகளை இனங்கண்டு அவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டியது எமது கடமை.

அவர்களுக்காகத் தனியான ஒரு இடத்தைப் பெற்றுக் கொடுத்து, அவர்களது சுய தொழில், ஆக்கங்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்குச் சுயதொழில் பயிற்சி வழங்கப்படும். இவர்களின் நலன்கருதிநீண்டகாலவேலைத் திட்டங்கள் பலவும் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். (5.31)

# வாடகை வாகனத்துடன் தலைமறைவு

## பொலிஸ் வலைவீச்சு

கொழும்பு, ஒக். 25

நவீனரக வாகனத்தை வாடகைக்குப் பெற்றுக் கொண்டநபர் வாகனத்துடன் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொஸ்வத்தை பொலிஸ் பிரிவில் வசிக்கும் பெண், 45 லட்சம் ரூபா பெறுமதியான வாகனத்தை ராகமை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் மாதமொன்றுக்கு 90 ஆயிரம் ரூபா வாடகை ஒப்பந்தத்துடன் வழங்கியுள்ளார்.

மாத வாடகை வழங்கப்படாததால் அந்தப் பெண், வாகனத்தை வாடகைக்குப் பெற்றவருக்கு அலைபேசி அழைப்பை மேற்கொண்ட போதிலும் அவரோடு தொடர்பு கொள்ள முடியாது போயுள்ளது. அந்தப் பெண் தனது கணவருடன் அந்த நபரைத் தேடி அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

அவர் குடியிருந்த வாடகை வீடும் பூட்டப்பட்டிருந்ததால் இது தொடர்பில் ராகமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வாகனத்தை வாடகைக்குப் பெற்றவர் இதற்கு முன்னரும் பல இடங்களில் வாகனங்களை வாடகைக்குப் பெற்று அவற்றுடன் தலைமறைவாகியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# பிணைமுறி விசாரணைக்குழுவின் ஆயுள் 6 வாரங்களுக்கு நீடிப்பு

மத்திய வங்கி முறி தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் பதவிக்காலம் மேலும் 6 வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழு தமது இறுதி அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக இந்தக் காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 27ஆம் திகதி தமது பணிகளை ஆரம்பித்த இந்த ஆணைக்குழு, ஒக்ரோபர் 17ஆம் திகதியுடன் பணிகளை நிறைவு செய்து கொண்டது. மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் உட்பட 63 சாட்சிகள் தமது சாட்சியங்களை வழங்கினர். இந்த நிலையிலேயே, அந்த ஆணைக்குழுவின் பதவிக்காலத்தை 6 வாரங்களுக்கு நீடிக்க அரச தலைவர் அனுமதி வழங்கியுள்ளார். (5)

# கைதாவதைத் தடுக்கக்கோரும் கோத்தாவின் மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 25

தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் வகையில் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவினால் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு, அடுத்த வருடம் ஜனவரி 23ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

இந்த மனுமீதான விசாரணை, நீதியரசர்களான ஈவா வனசுந்தர, கே.டி.சித்ரசிறி, விஜித் கே மலல்கொட ஆகியோரடங்கிய நீதியரசர்கள்குழாம் முன்னிலையில், எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, மேற்கண்ட அறிவிப்பு விடுக்கப்பட்டது.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு நிறுவப்பட்டமையை சவாலுக்கு உட்படுத்தியும் தன்னைக் கைது செய்வதைத்தடுக்கக் கோரி இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் கோரியே, அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை அவர் தாக்கல் செய்திருந்தார்.

2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி மனு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதியரசர் ஈவா வனசுந்தர, நீதியரசர் சரத் டி அப்ரூ ஆகியோரடங்கிய நீதியரசர்கள் குழாம், கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்வதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சட்டத்தரணி சனத் விஜேவர்தன ஊடாக பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவை, பொலிஸ்மா அதிபர், நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் உள்ளிட்ட 45 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தலைமை அமைச்சரால் 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி மற்றும் அதன் ஊடாக உருவாக்கப்பட்ட நிதி மோசடி விசாரணை பிரிவு ஆகியவற்றை வலிதற்றதாக்குமாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (5)

# 2 லட்சம் மெட்ரிக்தொன் அரிசி 2மாதத்துள் இறக்குமதி

கொழும்பு, ஒக். 25



அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் முதற் கட்டமாக 2 இலட்சம் மெட்ரிக் தொன் அரிசியை டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

90 ஆயிரம் மெட்ரிக் தொன் நாடு, 60 ஆயிரம் மெட்ரிக் தொன் சம்பா, 50 ஆயிரம் மெட்ரிக் தொன் வெள்ளை பச்சையரிசி உள்ளடங்கிய இரண்டு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி புதிதாக இறக்குமதிசெய்யப்படவுள்ளது. (5.31)

# இடைக்கால அறிக்கையை நாடாளுமன்றில் விவாதித்தால் விளைவுகள் விபரீதமாகும்

## மகிந்த அணி எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 25



புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கைமீது விவாதம் நடைபெறுமானால் நாடாளுமன்றம் போர்க்களமாகும் என்று மகிந்த அணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்படி எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதற்குப் பதிலாகத் தற்போதைய அரசமைப்பை மறுசீரமைக்கலாம்.

புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கையால் அதிகளவிலான நிதியை அரசு வீணடித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் மூன்று நாள்கள் நிதியை வீணடிக்கும் செயற்பாட்டில் அரசு இறங்கியுள்ளது. நாங்கள் விவாதத்துக்குச் செல்வோம்.

ஆனால், அங்கு இடம்பெறும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளால் நாடாளுமன்றம் போர்க்களமாகும். அதிலிருந்து நாடாளுமன்றைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் - என்றார். (5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# ஐ.நாவை அரசு கணக்கில் எடுக்கிறதா?

இலங்கைக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர்பப்லோடிகிரிப் தனது பயணத்தின்முடிவில்கொழும்பு அரசுக்கு ஓர்எச்சரிக்கையை விடுத்துச்சென்றிருக்கிறார். இறுதிப்போரில்இடம்பெற்றபோர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், பன்னாட்டுப் போர்ச் சட்ட மீறல்கள் தொடர்பில்பொறுப்புக்கூறுவதற்குக்கொழும்புதவறுமாக இருந்தால், அத்தகைய பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் இலங்கைக்கு வெளியே உள்ள நாடு ஒன்றில் முன்னெடுக்கப்படு வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, அத்தகைய ஒருநிலை தோன்றுவதற்கு முன்னர் முறையான நீதிப்பொறிமுறைஒன்றைஏற்படுத்த வேண்டியது கொழும்பின் பொறுப்பு என்று அவர் எச்சரித்துள்ளார்.

பப்லோமட்டுமல்ல, இதற்குமுன்னர்ஐக்கியநாடுகள்மனித உரிமைகள் ஆணையாளரும் இதேபோன்றதொரு எச்சரிக்கையை விடுத்திருந்தார். போர்க்குற்ற விசாரணைகளைக் கொழும்புநடத்தத்தவறினால், வேறு வழிகளில்அந்த விசாரணையைநடத்தவேண்டியஅவசியம்ஏற்படும்என்றுஅவர் எச்சரித்திருந்தார். ஆனால், கொழும்பு இந்த எச்சரிக்கைகள் தொடர்பில் அலட்டிக் கொண்டதாக இல்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனின்எச்சரிக்கைகடந்தமாதம்வெளியானதன்பின்னர்கூட, அரசு பொறுப்புக் கூறல் தொடர்பில் எதுவும் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. அந்த விடயத்தில் காரியங்கள்இம்மியளவும்நகரவில்லை. போர்க்குற்றங்கள்தொடர்பில் விசாரிப்பதற்கு வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபோதும் அது தொடர்பில் எந்த நகர்வும் இடம்பெறவில்லை. அதற்கும் மேலாக அத்தகைய கலப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படமாட்டாது, படையினர் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்படமாட்டார்கள்என்று அரசதலைவர்கள்பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள்.

இந்தவிடயத்தையும்பப்லோதனதுபயணத்தின்இறுதியில் சுட்டிக்காட்டியுள்ளார். "படையினரைநீதிமன்றத்தில்நிறுத்தமாட்டோம்என்று எவரும் கூறமுடியாது. நீதிமன்றமே அதனைத் தீர்மானிக்கவேண்டும். படையினரைப் பாதுகாப்பதாகக் கூறுவது சுயாதீன நீதித்துறையின் பண்புகளை மீறுவதைப்போன்றதாகும். பொறுப்புக்கூறல்பொறிமுறையைத் தொடர்ந்தும்தாமதிக்கவேண்டாம். இல்லாவிடின்பொறுப்புக்கூறும் கடப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு உள்நாட்டிலோஅல்லது வெளிநாட்டிலோ உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார் பப்லோ.

பப்லோசொல்வதைப்போன்றுபடையினரைநீதிமன்றத்தில் நிறுத்தமாட்டோம்என்பதைத்தான்திரும்பத்திரும்பஅரசதலைவர்கள்கூறிவருகின்றார்கள். அதேநேரத்தில்தமிழ்அரசியல் கைதிகளின்வழக்கைஅனுராதபுரம்நீதிமன்றத்தில்இருந்து வவுனியாவுக்கு மீண்டும் மாற்றும்படி கேட்டால், நீதித்துறை விவகாரத்தில் தலையிடமாட்டோம் என்றும் அதே தலைவர்கள்கூறுவார்கள். இதுதான்இலங்கையின்நிலைமை. பாதிக்கப்படுபவர்கள்தமிழர்களாயின்நீதித்துறை யில் இந்தத்தலைவர்கள்தலையிடமாட்டார்கள். அதுவே பாதிக்கப்படுபவர்கள் சிங்களவர்களாக இருந்தால், எந்தத் தலையீட்டைச்செய்யவும்அவர்கள்தயங்கமாட்டார்கள். ஆண்டாண்டு காலமாகத் தொடரும் இந்த நிலையை எதிர்த்துத்தான் தமிழர்கள்போராடினார்கள், போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

இதுபோன்றநிலைகளில்பன்னாட்டுச்சமூகம்தலையிட்டு நீதியை, நியாயத்தை ஏற்படுத்த முயன்றால், அந்தச் சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காக அதைச் செய்கிறோம் இதைச் செய்கிறோம் என்று வாக்குறுதிகளை வழங்கிவிட்டு, பின்னர் அவற்றை நிறைவேற்றாமல் விட்டு காலத்தைக் கடத்தி த் தப்பிக்கொள்வதுதான் கொழும்பின் இராஜதந்திரமாக எப்போதும் இருந்து வருகிறது.

இப்போதுகூட, பப்லோவின்பரிந்துரைகளைச்செயற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று அவரது வருகைக்கு முன்னதாகவே அரசின் அமைச்சர்கள் கருத்துத் தெரிவித்துவிட்டார்கள். எனவே பப்லோவின் எச்சரிக்கை மற்றும் கருத்துக்களைச் செவிமடுத்து கொழும்பு அரசு நல்லவிதமானநடவடிக்கைகளைஎடுக்கும்என்றுசொல்லமுடியாது. ஏனெனில்ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள்கூட்டத்தொடரில்இலங்கைவிவகாரம்பேசுபொருள்ஆகும்போதுதவிர, மற்றையநேரங்களில்ஐ.நாவைஅரசுகணக்கில்எடுக்கிறதா என்கிற கேள்வி இருக்கிறது. அது எந்த அரசாக இருந்தாலும் என்ன, நிலைமை ஒன்றேதான்.





# மோசமான கட்டத்தில் குடாநாட்டின் பாதுகாப்பு

சேரலாதன்

குடாநாட்டின் பாதுகாப்பு மோசமான கட்டத்தை எட்டியுள்ளதை அரியாலை கிழக்கில் இடம்பெற்றதுப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் எடுத்துக் காட்டியுள்ளது. இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்டதுப்பாக்கிச்சூட்டில்இளைஞர் ஒருவர் அநியாயமாக உயிரிழந்துள்ளார். குடாநாட்டில் துப்பாக்கிக் கலாசாரம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளதை மேற்படி சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

குடாநாட்டு மக்களுக்கு துப்பாக்கிகள் புதிதானவையல்ல. நீண்ட காலமாக இடம்பெற்ற போர் காரணமாகத் துப்பாக்கிகள் மட்டுமல்லாது ஏனைய போராயுதங்களும் இவர்களுக்கு அத்துப்படியாகிவிட்டன. ஆனால் போர் ஓய்ந்து அமைதி திரும்பியுள்ளதாகக் கூறி வருகின்ற இன்றைய நிலையில் வாள் வெட்டுக் கலாசாரம் ஆரம்பமாகியுள்ளது. குடாநாட் டைப் பொறுத்தவரையில் இங்கு நிலைகொண்டிருக்கும் பொலிஸார் மற்றும் படையினரைத் தவிர ஏனைய சாதாரண பொதுமக்களிடம் துப்பாக்கி சட்டபூர்வமாக வைத்திருப்பதற்கான காரணம் எதுவுமில்லை. இவ்வாறு பொதுமக்களிடமும் துப்பாக்கிகள் இருக்குமேயானால் குடாநாட்டின் பாதுகாப்பு மோசமான கட்டத்தை எட்டிவிட்டது என்றுதான் கூற வேண்டும்.

## குடாநாட்டில் படையினரது பிரசன்னம் அவசியமாக்கப்படும் ஏதுநிலை

இந்த நிலையில் குடாநாட்டிலிருந்து படையினரை அகற்ற வேண்டுமெ ன இனிமேல் எவருமே கோரிக்கைவிட முடியாத ஒரு ஏது நிலை உருவாக்கப்பட்டு வருவதுபோல் தோன்றுகிறது. படையினர் இங்கு நிலை கொண்டிப்பதை நியாயப்படுத்த வலுவான ஆதாரமொன்று தற்போது அரசுக்குக் கிடைத்துவிட்டது. போருக்குப்பிந்திய காலப் பகுதி குடாநாட்டு மக்களைப்பொறுத்தவரையில் சோதனைக் களமாகவே மாறிவிட்டது. திருட்டுக்கள், கொள்ளைகளில் ஆரம்பித்து கொலை களும் இடம்பெற ஆரம்பித்துவிட்டன. இளைஞர்களில் ஒரு பிரிவினர் வாள்களுடன் வெறியாட்டத்தில் ஈடுபடுகின்றனர். குடாநாட்டு மக்களது தனித்துவமிக்க கலாசாரம் மறைந்து வன்முறைக் கலாசாரமாக மாறி வருகின்றது.

## மீண்டும் தலைதூக்கும் வன்முறைக்கலாசாரம்

கல்விக்கும் கலாசாரத்துக்கும் தெய்வ வழிபாட்டுக்கும் புகழ்பெற்ற குடாநாடு தலைகுனிந்து நிற்க வேண்டியதாயிற்று. ஆனால் இந்த இழிநிலையைக் களைவதற்கான நடவடிக்கை எதுவும் அதற்குரிய அதிகாரத்தரப்பினரால்எடுக்கப்பட்டதாகத்தெரியவில்லை. குடாநாட்டின்படித்தமனிதர்களும்சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தை வகிப்பவர்களும் வாய்மூடி மௌனிகளாக இருந்து கொண்டு இங்கு நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கவே முடிந்தது. அரசியல்வாதிகளின் நிலையும்இதுபோன்றுதான்காணப்பட்டது. கோண்டாவிலில் நிகழ்ந்த பொலிஸார் மீதானவாள்வெட்டுச்சம்பவம்பொலிஸ்தரப்பினரை விழிப்படையச் செய்தது. அதைப் போன்று வடமராட்சியில்துன்னாலைப் பகுதியைச்சேர்ந்தசிலரால்நடத்தப்பட்டவன்முறைச் சம்பவங்களும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திவிட்டன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியின் மெய்ப்பாதுகவலர் சுட்டுக் கொல்லப்பட்டமை பொலிஸாரை ஆத்திரமடையச் செய்துவிட்டது. இதன் பின்னர் பொலிஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைளால் வாள்வெட்டிலும்வன்முறைகளிலும்ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டனர். வாள்வெட்டுச் சம்பவங்கள் குறைந்து காணப்பட்டன. ஆனால் சமீப நாள்களாக அவை மீண்டும் தலைதூக்கியுள்ளதைக் காணமுடிகின்றது. இதன்உச்சக்கட்டமாகஅரியாலையில்இடம்பெற்றதுப்பாக்கிச்சூட்டுச்சம்பவம்அமைந்துவிட்டது. இந்தச் சம்பவத்தை கேள்விப்பட்டதும் தெற்கில் உள்ள இனவாதிகள் துள்ளிக் குதிக்கப்போகிறார்கள். புலிப்பயங்கரவாதம் மீண்டும் வடக்கில் தலைதூக்கிவிட்டது. பெரும்பான்மையினமக்கள்இனிமேல்நிம்மதியாக வாழ முடியாது. வடக்கில் மேலதிக படைமுகாம்களை அமைத்து அங்கு தலைதூக்கியுள்ள பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்றெல்லாம் கூச்சல்கள் தலைதூக்கப் போகின்றன.

## வழிதவறிச் செல்ல முயலும் இளைய சமுதாயம்

அரசியல் கைதிகள் பற்றிப் பேசுகின்றோம். படையினரிடம் தமது காணிகளை இழந்து தவிக்கின்ற மக்களின் நிலை கண்டு வேதனைப்படுகின்றோம். காணாமற் போகச் செய்யப்பட்டவர் தொடர்பாகக் குரல் எழுப்புகின்றோம்.

ஆனால் எம்மால் ஒழுங்காக இருக்க முடியவில்லை. இந்த நிலையில் மற்றவர்களைக் குறைகாணுவதால் பயனொன்றும் கிடைக்கமாட்டாது. இங்குள்ளஇளைஞர்களில்சிலர் திரைப்படங்களையும் தொலைக்காட்சித் தொடர்களையும்பார்த்துவிட்டுஅதில்தோன்றுகின்ற கதாபாத்திரங்கள் போன்று தாமும் நடக்க முற்படுகின்றனர். இதன் விளைவு களைத்தான் குடாநாட்டு மக்கள் இன்று அனுபவிக்கின்றனர்.

புலிகளின் காலம் தொடர்பாக நாம் பேசுவதால்பயனொன்றும்கிடைக்காது. அத்தகையதொரு காலம் இலகுவில் உருவாகிவிட முடியாது. எம்மை நாமே திருத்திக் கொள்வதன்மூலமாகஅந்தக்காலத்தில்நிலைநாட்டப்பட்ட சட்டத்தையும் ஒழுங்கையும் எம்மால் உய்த்துணர முடியும்.

இளைஞர்கள் அனைவரும் சரியான திசைகளில் செய்வார்களாயின் குடாநாட்டில் அமைதி மீள நிலைபெறும். இல்லையென்றால்இங்குவாழ்கின்றமக்களைஎவராலும் காப்பாற்றிவிட முடியாது.

# சோதனைக் களமாக மாறவுள்ள தேர்தல்கள்

சேரலாதன்

வடக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் அடுத்த ஆண்டு செப்ரெம்பரில் பூர்த்தியடைந்து விடும். அநேகமாக அடுத்த ஆண்டின் இறுதியிலோ அல்லது 2019ஆம் ஆண்டின்ஆரம்பத்திலோவடக்கு மாகாண சபைத் தேர்தலை நாம் சந்திக்கக்கூடும்.

### தமிழ் அரசுக்கட்சிக்கு கூடுதலான பொறுப்பு

இம்முறை தேர்தல் களம் சூடு பிடிக்கும் என்பதில் ஐயமில்லை. புதிய தேர்தல் விதிமுறைகளின் பிரகாரம் இனிவரும் தேர்தல்கள் இடம்பெறவிருப்பதால் வேட்பாளர்களின் தெரிவில் அதிக அக்கறை காட்டவேண்டிய தேவை கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது.


வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாகவே உள்ளது. கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் எதைக் கூறினாலும், அதை ஏற்றுக் கொள்வதற்கு மக்கள் தயாராக இல்லை என்பது தெரிந்த விடயம். கூட்டமைப்பின் முக்கிய பங்காளிக் கட்சியான இலங்கைத்தமிழ்அரசுக்கட்சி கூடுதல் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டிய தருணம் இப்போது ஏற்பட்டுள்ளது.

கடந்த முறை முதலமைச்சருக்கான வேட்பாளர் தெரிவில் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தனின் தலையீடு முழுஅளவில் காணப்பட்டது. மாவை சேனாதிராசாவே அந்த பதவிக்கு நிறுத்தப்படுவாரெனப் பலராலும் எதிர் பார்க்கப்பட்ட போதிலும், சி.வி. விக்னேஸ்வரனைச் சம்பந்தன் தெரிவு செய்தார் . மாவையும் பெருந்தன்மையுடன் அதை ஏற்றுக்கொண்டார். விக்னேஸ்வரன் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்றநீதியரசராக இருந்த ஒரே காரணத்தினால், அவர் மீது நம்பிக்கை வைத்து மக்கள் தமது அமோக ஆதரவை வழங்கினார்கள். அதிகூடிய விருப்பு வாக்குகளும் அவருக்கே கிடைத்தன. மாவையின் தீவிர ஆதரவாளர்கள் கூட்டமைப்பின் தலைமைக்கு மதிப்புக் கொடுத்துத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டனர். ஆனால் மாகாண சபையில் பின்னர் நடந்தேறிய சம்பவங்கள் சம்பந்தனின் அன்றைய முடிவும், அவரது தெரிவும் தவறானவை என்பதை எடுத்துக்காட்டிவிட்டன.

### குழப்பங்களுக்கு காரணமாக முதலமைச்சர்

வடக்கு மாகாண சபையில் ஏற்பட்ட பல குழப்பங்களுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனே காரணமாக இருந்துள்ளார். முதலமைச்சர் பதவிக்கான அதிகாரத்தை வைத்துக்கொண்டு தம்மை நியமித்த கட்சியையும், கூட்டமைப் பின் தலைமையையும் மதிக்காமல் நடந்து கொண்டார். கூட்டமைப்புக்கு எதிரானவர்களுடன் உறவைக் கொண்டிருக்கவும் இவர் தவறவில்லை. தமது பதவியைத்தக்கவைத்துக்கொள்வதற்காக எதைச் செய்வதற்கும் அவர் தயாராக இருந்தார். இனம் இரண்டாகப் பிளவுபடுவதை அவர்ஒருபொருட்டாகவேநினைக்கவில்லை. கட்சிக்கும், தலைவருக்கும் கட்டுப்படாத அவரது செயற்பாடுகள், தொடர்ந்து இடம் பெறுமேயானால், அது வடக்குத் தமிழர்களின் ஒற்றுமைக்கு வேட்டு வைக்கப்பட்டதாகிவிடும். முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராக இனிமேல் எவரையும் களம் இறக்கப் போவதில்லை என்று தமிழ் அரசுக்கட்சி தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகின்றது. கடந்தகால அனுபவங்கள் அவர்களை இந்த முடிவை எடுப்பதற்குத் தள்ளி விட்டிருக்கலாமெனத் தோன்றுகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் தற்போது நான்கு கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இதில் சிலகட்சிகள் கூட்டமைப்பின் தலைமைக்கு மதிப்புக் கொடுக்காது நடந்து கொள்வதை அவதானிக்க முடிகின்றது. தலைமையை விமர்சித்து அறிக்கை வெளியிடுவதையும் இவை வழக்கமாகக் கொண்டுள்ளன. இந்தக் கட்சிகளின் விடயத்திலும் கூட்டமைப்பின் தலைமை கவனம் செலுத்த வேண்டும்.



### தமிழ்க் கூட்டமைப்பின் ஒற்றுமை நீடிக்குமா?

மாகாணசபையில் குழப்ப நிலை உருவாகும் விதத்தில் தமிழ் அரசுக் கட்சிக்கு விரோதமாக நடந்து கொள்வதற்கு எவருக்கும் எவ்வித மன்னிப்பும் வழங்கப்படகூடாது. ஏனென்றால் தமிழர்களின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டுதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தேர்தல் வேளைகளில் மட்டுமல்லாது வேறு சந்தர்ப்பங்களிலும் தமிழர்களின் ஒற்றுமையை அது பறை சாற்றியது. வேறு இனத்தவர்கள்கூட கூட்டமைப்பின் ஒற்றுமையைக் கண்டு வியந்தார்கள். கடந்த அரச தலைவருக்கான தேர்தலின்போது கூட்டமைப்பின் தலைவர் சுட்டிக்காட்டியவருக்கே வடக்குக்கிழக்கில்வாழ்கின்றதமிழர்கள் வாக்களித்தனர். மகிந்தவைத் தோற்கடித்து மைத்திரிபால சிறிசேனவைப் பதவியில் அமர்த்தினார்கள். கடந்த மாகாண சபைத் தேர்தலிலும் கூட்ட மைப்புக்கே அமோக வெற்றி கிடைத்தது. இது நாடாளுமன்றத் தேர்தல் வரை நீடித்தது. இனிவரும் காலங்களிலும்கூட்டமைப்புஒற்றுமையுடன் செயற்பட்டால் அதன் வெற்றியை எவராலுமே தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் ஒற்றுமை நீடிக்குமா என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

### சோதனைக் களமாக தேர்தல்கள்

நடைபெறப்போகின்ற உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் கூட்டமைப்பைப் பொறுத்த வரையில் முக்கியத்துவம் வாய்ந்தவை. கடந்த காலத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, தவறுகள் இனங்காணப்பட வேண்டும். கடந்த காலங்களில் கூட்டமைப் பின் வசமிருந்த உள்ளூராட்சிச்சபைகள் உரியவகையில் செயற்படவில்லை என்ற குற்றச் சாட்டுக் கள் எழுந்தன. உள்ளூர் மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிதண்ணீர் விநியோகம், கழிவகற்றல், வீதிகளை சீரமைத்தல் ஆகியவற்றில் குறைபாடுகள் இருந்ததாகமக்கள்முறைப்பட்டுக் கொண்டனர். இதேவேளை உள்ளூராட்சிச் சபைகளில் அங்கம் வகித்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் தமக்குள்ளே மோதிக் கொண்டமை மக்கள் மத்தியில் கடுமையான வெறுப்பை ஏற்படுத்தி விட்டது. மாகாண சபையிலும் இதே நிலைதான் காணப்பட்டது. மக்களுக்குச்சேவையாற்றவேண்டியவர்கள் தத்தமது சொந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் குறியாக இருந்ததைக் காண முடிந்தது. இது எமது மக்களிடம் கடுமையான கோபத்தை ஏற்படுத்தி விட்டது. ஆகவே நேர்மையும், பண்பும் மிக்கவர்களுக்கே வேட்பாளர் தெரிவில் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். பொருத்தமில்லாதவர்களை வேட்பாளர்களாகத் தெரிவு செய்வதன் மூலமாக எதிர்பார்க்கும் வெற்றியைக் கூட்டமைப்பினால் ஈட்டிக் கொள்ள முடியாது. மொத்தத்தில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் கூட்டமைப்புக்குஒருசோதனைக்களமாகவே இருக்கப்போகின்றன.



## ஆசிரியருக்கான கடிதம்

### அரச தலைவரின் வெள்ளைக்கொடி வியாக்கியானம் நகைப்புக்குரியது

மாண்புமிகு அரசதலைவருக்கு போரால் பாதிக்கப்பட்ட பொதுமகன் உங்களூடாக எழுதும் மடல். தாங்கள் கடந்த 14.10.2017 சனிக்கிழமை யாழ். தீபகற்பத்திற்கு சுற்றுப்பயணம் செய்ததை யாவரும் அறிவர். தமிழ் மக்களின் அமோக வாக்குகளால் தாங்கள் அரச தலைவர் ஆனதையும், தாங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அப்படிப்பட்ட தங்களின் யாழ். வருகைக்கு இந்த முறை தமிழர் தரப்பு கறுப்புக் கொடிகள் காட்டி தமது எதிர்ப்பைத் தெரிவித்த செய்திகள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன. இது தமிழ் மக்கள் தங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையை இழந்து நிற்பதை எடுத்துக் காட்டுவதை மறுப்பதற்கில்லை.

எமது மக்களின் கறுப்புக் கொடி விவகாரம் குறித்துத் தாங்கள் வெளியிட்ட விமர்சனத்தைப் பார்த்தபோது எனக்கு சிரிப்பதா அழுவதா என்ற எண்ணம் ஏற்பட்டது. வெள்ளைக் கொடியை ஏந்துங்கள். போட்டி பொறாமையை கைவிடுங்கள். சமாதானம் தேவை என்றெல்லாம் ஏதேதோ கூறினீர்கள். தமிழ் மக்கள் என்றுமே சமாதானத்தை விரும்பும் தரப்பினர்தான். நாம் போரை வெறுக்கின்றோம். அரசதலைவரே, தாங்கள் கூறுவது போல் இறுதிப் போரின்போது உங்கள் படையினரிடம் வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்த எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தங்களுக்கும் தெரியும். அது குறித்து விசாரணை இடம்பெற்றதா? தமிழருக்கு நீதி கிடைத்ததா? எல்லாமே பரம இரகசியம். அதனால் தான் தங்களுக்கு வெள்ளைக் கொடி காட்ட தமிழ் மக்கள், யாழ். மக்கள் அஞ்சியிருக்கலாம். ஐயா, வெள்ளைக் கொடிக்கே மதிப்புக் கொடுக்கவில்லை, தங்கள் படையினர். அதேபோல் அகிம்சை என்றால் பாரதம் என்று புகழப்படும் போரில் இந்தியாவே தமிழர்களைத் தோற்கடிக்க இலங்கை அரசுக்கு உதவியது. ஐயா, அடுத்த முறை எமது யாழ். தீபகற்பத்துக்கு வரும்போது நல்ல தீர்வோடு வந்தால் தமிழ் மக்கள் உங்களை அன்போடு வரவேற்றுச் சீராட்டுவார்கள் அதுவே உண்மை.

அன்பு, வரணி.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வேலணை பிரதேச சபை
# 2018 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக் கடைகள், வாகனத்தரிப்பிடங்கள், சிற்றுண்டிச்சாலைகள், என்பனவற்றை 01.01.2018 தொடக்கம் 31.12.2018 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 25.10.2017 முதல் 10.11.2017 மதியம் 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 13.11.2017 பி.ப 1.00 மணிவரை
கேள்வி திறக்கும் திகதி : 13.11.2017 பி.ப 1.30 மணி

| தொ இல | சந்தைகளின் பெயர் | மாதாந்த வாடகை VAT நீங்கலாக | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (Vat தவிர்த்து) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (Vat தவிர்த்து) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (Vat தவிர்த்து) |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிப்புலம் மீன் சந்தை | | 2000 | 5000 | 27,500 |
| 2 | வேலணை அம்பிகை நகர் மீன்சந்தை | | 2000 | 5000 | 14,300 |
| 3 | சரவணை மீன் சந்தை | | 2000 | 5000 | 7,370 |
| 4 | புங்குடுதீவு மடத்துவெளி மீன்சந்தை | | 2000 | 10,000 | 190,190 |
| 5 | அல்லைப்பிட்டி மீன்சந்தை | | 2000 | 5000 | 73,700 |
| 6 | வேலணை சாட்டி கடற்கரை சிற்றுண்டிச் சாலை | | 2000 | 5000 | 9,350 |
| 7 | வேலணை சாட்டி கடற்கரை வாகனத்தரிப்பிடம் | | 2000 | 10,000 | 255,640 |
| வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனைச்சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும் | | | | | |
| 8 | வேலணை துறையூர் மீன்சந்தை (புதிய கட்டடம்) | | 2000 | 10,000 | 220,000 |
| 9 | கடை இல-2 கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை | 1000 | 2000 | 5000 | 31,600 |
| 10 | கடை இல-4 கருவாட்டு கடை | 1000 | 2000 | 5000 | 34,760 |
| 11 | கடை இல-5 கருவாட்டு கடை | 1000 | 2000 | 5000 | 34,760 |
| 12 | கடை இல-6 கோழிக்கடை | 1000 | 2000 | 5000 | 33,715 |
| வேலணை பொதுச்சந்தை (6ஆம் வட்டாரம்) | | | | | |
| 13 | மரக்கறி, மீன் | | 2000 | 5000 | 37,878 |
| 14 | சிற்றுண்டிச்சாலை | 1750 | 2000 | 5000 | 24,000 |
| 15 | கோழிக்கடை | 750 | 2000 | 10,000 | 110,111 |
| புங்குடுதீவு முற்றவெளிச்சந்தையும் கடைத்தொகுதியும் | | | | | |
| 16 | மீன், மரக்கறி சந்தை | | 2000 | 5000 | 22,000 |
| 17 | கோழிக்கடை | 500 | 2000 | 5000 | 50,110 |
| 18 | கடை இல-5 சிற்றுண்டிச்சாலை | 600 | 2000 | 5000 | 15,620 |
| 19 | கடை இல-6 | 350 | 2000 | 5000 | 46,200 |
| 20 | கடை இல-7 | 350 | 2000 | 5000 | 46,200 |
| 21 | கடை இல-2 (உப அலுவலகத்திற்கு அருகாமை) | 800 | 2000 | 9600 | 96,000 |
| 22 | புங்குடுதீவு மடத்துவெளி இளைப்பாற்று மண்டபமும் சிற்றுண்டிச்சாலையும் | | 2000 | 5000 | 15,620 |

**பொதுவான நிபந்தனைகள் : சந்தை கோழிக்கடை**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப் படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச் சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடனும் சமுகமளித்தல் வேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர் பிரதேச சபை வேலணை எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 09.11.2017 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரமே விண்ணப்பிக்கமுடியும்.
5. கேள்விப்படிவக்கட்டணம் கேள்வித் தொகை, வாடகை, குத்தகைத் தொகை என்பவற்றுக்கு 15% (Vat) பெறுமதி சேர்வரி செலுத்தப்படல் வேண்டும்.
6. தெரிவு செய்யப்படும் இறைச்சிக் கடைக்குரிய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 2/3 பகுதியையும் ஏனைய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் 30.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ளவேண்டும்.
7. விவரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
8. மாதாந்த வாடகையும் +(15%Vat) செலுத்துதல் வேண்டும்.
9. கடை, இறைச்சிக்கடை வருடாந்த உரிமத்தினை செலுத்துதல் வேண்டும்.
10. பராமரிப்பு வேலைகள் குத்தகை தாரர்களாலேயே சபையின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
11. தவறுநர் பட்டியலில் உள்ளவர்கள் இக்கேள்வி கோரலுக்கு விண்ணப்பிக்கமுடியாது.
12. கேள்விப் படிவத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் உடன்படிக்கைகளை ரத்துச்செய்யும் உரிமை பிரதேச சபைக்கு உண்டு.
13. மேல்திக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**நிபந்தனைகள் - கடைத்தொகுதி**

1. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரமே விண்ணப்பிக்கமுடியும்.
2. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். குறித்த மாத வாடகைப் பணத்தினை அடுத்தமாதம் 10ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தாமதக் கட்டணப் பணமாக 10% அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகைப்பணத்தினை டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்துதல் வேண்டும்.
3. மூன்று மாத வாடகையை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
4. கேள்விச் சித்திகரராகத் தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினைச் செய்துகொள்ளல் வேண்டும்.
5. சித்திகாரர், குத்தகைதாரர், வேலணை பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதி முறைகளுக்கிணங்க நடந்துகொள்ள வேண்டும்.
6. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
7. மாதாந்த வாடகையும் +(15% Vat) செலுத்துதல் வேண்டும்.
8. பராமரிப்பு வேலை, கழிவகற்றல் என்பவற்றை தாங்களே மேற்கொள்ளல் வேண்டும்.

**செயலாளர்,**
**பிரதேசசபை, வேலணை.**


# அடிப்படையான பணவீக்கம் மாற்றமின்றி அமைந்துள்ளது

## தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் தகவலளிப்பு

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையான புள்ளிக்கு புள்ளி பணவீக்கம் நடப்பாண்டின் ஜீன் மாதத்தில் பதிவாகிய படியே கடந்த ஜீலை மாதத்திலும் மாற்றமின்றி 6.3 வீதமாகக் காணப்படுகிறது.
இந்தத் தகவலை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.
கடந்த ஜீலை மாத காலப்பகுதியில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளில் இருந்து பணவீக்கப் பங்களிப்புகள் முறையே 3.7 வீதமாகவும், 2.6 வீதமாகவும் அமைந்துள்ளன. அதேவேளை ஜீன் மாத காலப்பகுதியை எடுத்து நோக்கின் மேற்படி இரு பிரிவுகளில் இருந்து பணவீக்கப் பங்களிப்புகள் முறையே 3.9 வீதமாகவும், 2.4 வீதமாகவும் காணப்படுகின்றன.
தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் மாதம் மீதான மாத மாற்றங்கள் ஜீன் மாத காலப்பகுதியில் 123.4 ஆக அமைந்துள்ளதுடன் கடந்த ஜீலை மாதத்தில் 122.4 புள்ளிகளாக குறைவடைந்துள்ளன. இரு மாதங்களிடையேயான இந்த மாற்றம் 1.0 சுட்டெண் புள்ளி அல்லது 0.8 வீத புள்ளி என்ற விதமாக கணிப்பிடப்பட்டுள்ளது.
இந்த மாதாந்த மாற்றத்துக்குரிய காரணங்களை ஒப்பிட்டு நோக்கின் உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதி 0.90 வீதமாக குறைவடைந்தும், உணவல்லாப் பொருள்களின் செலவுப் பெறுமதி 0.06 வீதத்தினால் அதிகரித்தும் காணப்படுகின்றன.
மரக்கறி, புதிய மீன், தேங்காய், மைசூர் பருப்பு, சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், பச்சை மிளகாய், தேங்காய் எண்ணெய் மற்றும் வெள்ளைப் பூடு ஆகியவற்றின் விலைக் குறைவுகள் உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதி குறைவுக்கு காரணமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
ஆனாலும் சுட்டெண்ணில் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் அரிசி, நெத்தலிக் கருவாடு, முட்டை, வாழைப்பழம் மற்றும் தேயிலை போன்ற பொருள்களின் மீது பதிவிடப்பட்டுள்ளன. (ஓ)

# உயர் கல்வி செயற்பாடுகளை விஸ்தரிக்கும் ஐ.ஐ.எஸ் சிற்றி கம்பஸ் நிறுவனம்

வட பிராந்தியத்தில் உயர்கல்வித் துறை சார்ந்து உறுதியான பங்களிப்பை மாணவர்களுக்கு வழங்கி வரும் ஐ.ஐ.எஸ் நிறுவனம் தமது உயர்கல்விச் செயற்பாடுகளை தேசிய ரீதியில் மேம்படுத்த தீர்மானித்துள்ளதாக ஐ.ஐ.எஸ் சிற்றி கம்பஸ் நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்று அதிகாரி கு.விக்னேஸ் தெரிவித்துள்ளார்.
இது குறித்து கருத்துரைத்துள்ள அவர்,
" தேசிய ரீதியில் கொழும்பு, மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களில் எமது நிறுவனம் சார்ந்த வளாகங்கள் அமையவுள்ளன. அதன் முதற் செயல்நிலையாக கொழும்பு மாவட்டத்தின் பம்பலப்பிட்டியில் எமது வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு கல்விச் செயற்பாடுகள் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வியாபார முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் துறைகளில் தமது பட்டக் கற்கைநெறிகளை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் மேற்படி வளாகங்களில் இணைந்து கல்விச் செயற்பாடுகளைத் தொடர முடியும். இந்த மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடே மனிதவள அபிவிருத்தியை நல்ல முறையில் கட்டமைத்துக் கொள்வதில் அதிகரித்தபங்களிப்பைஎம்மால் வழங்க முடியும். அதற்கான நம்பிக்கையை நாம் கொண்டுள்ளோம்." என்றார். (ஓ)




# 100 நாள்களை எட்டியது விவசாயிகள் போராட்டம்

- விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.
- வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்.
- கடன் சுமையால் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.
- காவிரி நதிநீர் பங்கீட்டை முழுமையாக மேற்கொள்ள வேண்டும்.
- அதைக் கண்காணிக்க தனி வாரியம் அமைக்க வேண்டும்.

சென்னை. ஒக். 25
பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் டெல்லியில் போராடிவரும் தமிழக விவசாயிகளின் போராட்டம் நேற்றுமுன்தினம் 100 நாள்க்ளை எட்டியது.

பருவ மழை பொய்த்ததால், தமிழகத்தில் விளைச்சல் பெரியளவில் இல்லை. இதனால் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும், வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும், கடன் சுமையால் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், காவிரி நதிநீர் பங்கீட்டை முழுமையாக மேற்கொள்ள வேண்டும். அதைக் கண்காணிக்கத் தனி வாரியம் அமைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் டெல்லியில் தமிழக விவசாயிகள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்களின் போராட்டம் நேற்றுமுன்தினம் 100 நாள்களை எட்டியது. (ம)

## அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லைப் பணிகள் தீவிரம்

வொஷிங்டன். ஒக். 25
அமெரிக்கா - மெக்சிக்கோ இடையே எல்லை அமைக்கும் பணிகள் மிகவும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

அமெரிக்காவின் போதைப் பொருள் கலாசாரம் அதிகரித்து வருவதற்கு மெக்சிக்கோவே காரணம் என்று குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. இதனால் அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற சில வாரங்களில் அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லையில் சுவர் அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தார் ட்ரம்ப். கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் உள்ளிட்ட முக்கியப் புள்ளிகள் ட்ரம்பின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் ட்ரம்ப் அதைக் கண்டுகொள்ளவில்லை. அவசரஅவசரமாக தற்காலிகச் சுவர்கள் அமைக்கப்பட்டன. தற்போது நிரந்தச் சுவர்கள் அமைக்கும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம)



## குவிகின்றன வாழ்த்துக்கள்

டோக்கியோ, ஒக். 25
ஜப்பான் நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திர ஜனநாயகக் கட்சி அமோக வெற்றிபெற்றுள்ள நிலையில், தலைமை அமைச்சராக மீண்டும் சின்சோ அபே தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அபேக்கு உலகத் தலைவர்கள் பலரும் தத்தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

ஜப்பான் நாடாளுமன்றின் பதவிக்காலம் அடுத்த வருடத்துடன் முடிவுக்கு வருகிறது. வடகொரியாவுக்கு எதிரான நகர்வுகளுக்காக ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபேக்கு மிகப்பெரும் ஆதரவு அங்குள்ளது. இதனால் சுமார் ஒரு வருடத்துக்கு முன்னதாகவே தேர்தலை நடத்தி ஆட்சியைத் தக்கவைக்க அபே முடிவுசெய்தார். இதன்படி கடந்த மாதம் ஜப்பான் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. நாடாளுமன்றத்துக்கான தேர்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. 465 ஆசனங்களில் 312 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைத் தக்கவைத்தது சுதந்திர ஜனநாயகக் கட்சி. இந்த வெற்றியை அடுத்து சின்சோ அபே தொடர்ந்தும் ஜப்பான் தலைமை அமைச்சராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இதையடுத்து இந்தியத் தலைமை அமைச்சர் மோடி அபேக்கு, 'எனது இனிய நண்பர் தேர்தலில் வெற்றி பெற்றதற்கு வாழ்த்துக்கள். இரு நாடுகளுக்கு இடையேயான உறவு மேலும் வலுப்படும் என்ற நம்பிக்கை உள்ளது' என்று தனது வாழ்த்தைத் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்பும் அபேக்கு தனது வாழ்த்தைத் தெரிவித்தார். வடகொரியாவுக்கு எதிரான தடைகளை அதிகப்படுத்துவது தொடர்பில் இருநாட்டின் தலைவர்களும் உறுதிபூண்டுள்ளனர். (ம)





## 120 பேரை கொன்று குவித்து ஐ.எஸ். ஆயுததாரிகள் அடாவடி

டமஸ்கஸ், ஒக். 25
சிரியாவில் நடைபெற்ற உச்சகட்ட போரின்போது பொதுமக்களில் 120 பேரை ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் கொன்று குவித்த தகவல் வெளியாகியுள்ளது.

ஈராக், சிரிய நாடுகளின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து இந்த வருடத்தின் மத்திய பகுதியில் மீண்டது ஈராக். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆதிக்கம் பெரியளவில் உள்ள ஒரேநாடு தற்போது சிரியாவே. சிரியாவின் ரக்கா நகரமும் அண்மையில் மீட்கப்பட்டது.

இறுதிக்கட்டப் போரின்போது ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் தமது பின்னடைவைச் சமாளிப்பதற்காக பொதுமக்களை மனிதக்கேடயங்களாகப் பயன்படுத்தினார்கள் என்றும், தமது பிடியில் இருந்து தப்பிக்க முற்பட்ட சுமார் 120 பேரை அவர்கள் கொன்று குவித்தனர் என்றும் பன்னாட்டு ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)





வொஷிங்டன், ஒக். 25
ரொஹிங்யர்கள் விவகாரத்தை மியன்மார் அரசு திருப்தியளிக்கும் விதத்தில் கைக்கொள்ளாததை அடுத்து மியன்மார் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கு அமெரிக்கா பரிசீலித்து வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன:

பௌத்தநாடானமியன்மாரில்ரொஹிங்ய இஸ்லாமியர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். அவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது. கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ரொஹிங்ய ஆயுதக் குழுவுக்கும், மியன்மார் அரச படைக்கும் இடையே கடும்மோதல் வெடித்தது. இதையடுத்துமியன்மாரில்அப்பாவிரொஹிங்ய இஸ்லாமியர்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர்.

இதையடுத்து 6 லட்சம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குச்சென்றுதஞ்சமடைந்துள்ளனர். தற்போதும் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான ரொஹிங்யர்கள் பங்களாதேஷ் நோக்கிச் சென்றவண்ணம் உள்ளனர்.

இந்த விவகாரத்தில் மியன்மார் அரசுக்கு எதிரான நகர்வுகளை உலக தொண்டு நிறுவனங்கள் கடைப்பிடித்து வருகின்றன. இந்த நிலையில் மியன்மார் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கு அமெரிக்கா பரிசீலித்து வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## வவுனியா வடக்கு பிரதேச சபை

## 2018.01.01 முதல் 2018.12.31 வரை மரக்கறி சந்தைகள், மீன் சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் 2018

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2017.10.25 தொடக்கம் 2017.11.15 ஆம் திகதிவரை**
**கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 2017.11.15 பிற்பகல் 02.00 மணி**
**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2017.11.15 பிற்பகல் 02.00 மணி**

கேள்விஅறிவித்தல் அட்டவணை

| தொ.இ | குத்தகைவிபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்பு | ஆகக் குறைந்தகேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | கனகாரயன்குளம் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 5,000.00 | 200,000.00 |
| 2. | கனகாரயன்குளம் கோழிக்கடை | 2,000.00 | 5,000.00 | 65,000.00 |
| 3. | கனகாரயன்குளம் மீன்கடை | 2,000.00 | 5,000.00 | 38,000.00 |
| 4. | கனகாரயன்குளம் மரக்கறிகடை | 2,000.00 | 5,000.00 | 60,000.00 |
| 5. | புளியங்குளம் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 5,000.00 | 270,000.00 |
| 6. | புளியங்குளம் கோழிக்கடை | 2,000.00 | 5,000.00 | 140,000.00 |
| 7. | புளியங்குளம் மீன்கடை | 2,000.00 | 5,000.00 | 50,000.00 |
| 8. | புளியங்குளம் மரக்கறிகடை | 2,000.00 | 5,000.00 | 90,000.00 |
| 9. | நெடுங்கேணி மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 5,000.00 | 260,000.00 |
| 10. | நெடுங்கேணி கோழிக்கடை | 2,000.00 | 5,000.00 | 295,000.00 |
| 11. | நெடுங்கேணி மீன்கடை | 2,000.00 | 5,000.00 | 80,000.00 |
| 12. | நெடுங்கேணி மரக்கறிக்கடை | 2,000.00 | 5,000.00 | 90,000.00 |

1. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம், பூங்காவீதி, வவுனியா"** எனமுகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாளஅட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் **"தவறுனராகக்"** கணிக்கப்பட்டஎவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
4. தெரிவுசெய்யப்படும் கடைகள்,சந்தைகளுக்கானசித்திரக்கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 2/3பங்குத்தொகையை **2017.11.15** ஆம் திகதி செலுத்தி அன்றைய தினமே ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மிகுதி 1/3 தொகையினை **2018.07.31** இற்கு முன்னர் மாதாந்தம் சமதொகைகளாக ஒவ்வொரு மாதமும் 05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறுமிடத்து 10 % தண்டப்பணம் அறவிடப்படும்
5. இறைச்சிக்காக கன்று ஈனக்கூடிய பசுக்களை அறுப்பது தடைசெய்யப்படும். எனினும் கன்று ஈன முடியாத பிரயோசனமற்றது என பொதுசுகாதார பரிசோதகர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்பிக்கும் பட்சத்தில் மாடு அறுப்பதற்கு அனுமதி வழங்க முடியும் அத்துடன் சூடுவெந்தான், நெடுங்கேணியில் அமைந்துள்ள கொல்களத்திலேயே மாடுகள் வெட்டப்பட்டு இறைச்சிக்கு கொண்டுவரப்படல் வேண்டும் என்பதுடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதலும் வேண்டும்.
6. கேள்விநிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை எந்தவொரு காரணமும் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு அல்லது செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
7. கேள்வித்தொகையிலும் குறைந்தகேள்விவிண்ணப்பம் கோருபவர்களின் கேள்விநிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்பு பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
8. கேள்விதிறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
9. மரக்கறிச்சந்தை மண்டபம் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர். கொண்டுவரும் பொருள்களின் விற்பனைவிலையில் 4% இற்குமேல் வரி அறவிடக் கூடாது.
10. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்
11. கடை,சந்தைகளின் தூய்மைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்குத் தாங்கள் முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
12. மரக்கறிசந்தைக்கு உற்பத்தியாளரால் விற்பனைக்குகொண்டு வரப்படும் உற்பத்திப் பொருள்களின் நிறையில் கழிவுகள் எதனையும் குத்தகையாளரால் விதிக்கமுடியாது.

**திரு. கந்தசாமிசத்தியசீலன்**
**செயலாளர்,**
**வவுனியாவடக்குபிரதேச சபை**
**நெடுங்கேணி.**

(விண்ணப்ப படிவங்களை 2017.10.25 தொடக்கம் 2017.11.14 ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரையும் 2017.11.15 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.)

## பாவம் இந்த மனிதர்

பரிஸ், ஒக். 25
பல நாள்களுக்கு முன்னர் சாப்பிட்ட உணவின் மீதியை அப்படியே வைத்திருந்தால் எப்படியிருக்கும். உணவு மட்டுமல்ல ஒவ்வொரு விடயத்திலும் சேர்ந்த பல நாள் கழிவுகளுக்குள்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார் பிரான்ஸைச் சேர்ந்த 60 வயது ஜியான். இவரின் இந்தப் பழக்கத்தால் இவரை வைத்து பல ஆவணப்படங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

வீடு முழுவதும் குப்பைகள். சமையலறை, உணவறைகளில் சாப்பிட்ட உணவுகளின் மீதிகள், பிளாஸ்டிக் பாத்திரங்கள், எலும்புகள், அழுகிய காய்கள், பழங்கள் என்று நாற்றமடிக்கும் குப்பைகள். ஓய்வறையிலும் ஏனைய அறைகளிலும் புத்தகங்கள், செய்தித்தாள்கள், தபால்கள், அழுக்குத் துணிகள் என்று வீடு முழுவதும் குப்பைக்காடாகக் காட்சியளிக்கிறது. இந்தக் குப்பைகளுக்குள்ளே உறங்கி, சாப்பிட்டு உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறார் ஜியான். அரியவகைநோயொன்றால்ஜியான்பாதிக்கப்பட்டுள்ளார். இதனாலேயே அவர் இவ்வாறு நடந்துகொள்கிறார் என்று சில மருத்துவ அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

"ஜியான் மிகவும் அருமையான மனிதர். 2002ஆம் ஆண்டு வரை தொழில்நுட்ப வல்லுநராக வேலை செய்துவந்தார். புத்திசாலி. நிறைய படிப்பார். அறிவுபூர்வமான உரைகளைக் கேட்பார். அவரிடம் இருக்கும் ஒரே மோசமான பழக்கம் குப்பைகளை வீட்டுக்குள் வைத்துக் கொள்வதுதான். அதுவும் இந்தக் குறைபாடு வந்த பிறகுதான் இப்படி நடந்துகொள்கிறார். நாற்றம் வருகிறது, அவர் ஆரோக்கியத்துக்குக் கேடு என்றெல்லாம் சொன்னாலும் அவர் மனம் அதை ஏற்றுக்கொள்ளாது. அதனால் ஆண்டுக்கு ஒருமுறை ஆட்களை வரவழைத்து, அனைத்து குப்பைகளையும் அப்புறப்படுத்தி விடுவோம். குப்பைகள் வெளியேறும் போது, ஏதோ பொக்கிஷம் போவதுபோல் பாவமாக பார்த்துக் கொண்டிருப்பார் ஜியான். இவரது குறைபாட்டை அறிந்து, அதை ஆவணப்படுத்தும் விதத்தில் ஒளிப்படங்களை எடுத்துவருகிறேன்" என்கிறார் ஒளிப்படக்கலைஞர் அர்னாட் சோசோன். (ம)



பொது அறிவு இல்லாத கல்வியை விட, கல்வி இல்லாத பொது அறிவானது ஆயிரம் மடங்கு சிறந்தது
- இங்கர்சால்

பக்கங்கள் - 08

# புதன் பொய்கை

25 ஒக்ரோபர் 2017 புதன்கிழமை




# ஆத்மார்த்தமான உயிரூட்டல் க(உ)ரு

உடுவிலூர் கலா

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த தமிழ். ஆம் தமிழ்மொழி உலக மொழிகளுள் முதன்மையானது. மறத்தமிழ், வீரத் தமிழ், பிள்ளைத் தமிழ், கொஞ்சு தமிழ் எனப் பலபெயர் கொண்டு தொன்மையுறுகிறது. உலகில் உள்ள அத்தனை மொழிகளுக்கும் தாய் மொழியாக விளங்கி நறுமணம் கொள்கிறது.

## வரலாற்றின் கூறுகள்

ஆரம்ப காலங்களில் லெமூரியாக் கண்டத்தில் வாழ்ந்த மக்கள், கூட்டம் கூட்டமாகப் பிரிந்து வாழ்ந்து ஒரு சங்கேத மொழியைப் பேசிப்பழகினர். அதனை நிலைநிறுத்தி அதனின்று பல பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளனர். லெமூரியாக் கண்டத்தில் இருந்து இலங்கை, அந்தமான், நிக்கோபார் தீவுகள், ஜாவா, சுமத்திரா, ஆஸ்திரேலியா போன்ற இன்னும் பல நாடுகள் பிரிந்துள்ளன என்பதை பூகோள ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அப்படியெனில் உலகின் முதல் மனிதன் பேசிய மொழியும் தமிழ்தான் என்பதில் ஐயமில்லை.

திராவிட நாகரிகம் உலகத்துக்கே நாகரிகத்தை கற்றுக் கொடுத்தது. உலக வரலாற்றை எடுத்து நோக்கின் அது உரோம நாகரிகம், மொசப்பத்தேமியா நாகரிகம், கிரேக்க நாகரிகம், பபிலோனிய நாகரிகம் போன்ற நாகரிகங்களை திராவிடநாகரிகத்தை முன்வைத்தே வரிசைப்படுத்துகிறது. ஒரு காலத்தில் ஆசியாக் கண்டத்தையே ஆண்டவன் தமிழன். இதன்வழி உலகுக்கு நர்கரிகத்தை கற்பித்தவன் தமிழன் என நாம் இறுமாப்போடு இருப்பது மேன்மையே. இன்று அந்தநிலமை மாறியுள்ளது. அங்குல நிலமின்றி, அகதியாய் உலக நாடெங்கும் வலம் வருகிறான். உலக அரங்கில் உரிமையுடன் வாழ தமிழனுக்கென்று தனிநாடு கிடையாது.

## தமிழ் மொழியின் அங்கலாய்ப்பு

இந்தநிலையிலே தாய்த் தமிழின் இன்றைய நிலை என்ன என்பதை நோக்கின், அது அழிந்து கொண்டே செல்கின்றது என்கின்ற உண்மையை உணர்ந்துகொள்ள முடிகிறது. எமது அன்றாட வாழ்வியலில் பயணங்களிடை கண்டு கொள்ள முடிகிறது. கவர்ச்சிக்கும் ஆடம்பரத்துக்கும் அடிமையாகிப் போகும் எம்மவர்கள் தமிழ்மொழியை தனிமைப்படுத்தியுள்ளனர். வேற்றுமொழிகளோடு களங்கமுற கலப்படமாக்குவதும், அடமானம் வைப்பதும் கவலைதருகின்றது. உலக அரங்கில் நெஞ்சுரம் கொண்டு நிமிர்ந்த நன்னடையோடு வீறுநடை கொண்ட தமிழ் மொழி இன்று தமிழர்களாலேயே புறந்தள்ளப்படுகிறது. தமிழில் இல்லாத அழகும் சுவையும் வேறெந்த மொழிகளிலும் இல்லை. இதனை உளமார அனுபவிக்கவும் உணரவும் வேண்டும். "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என முண்டாசுக் கவிஞன் பாரதி பாடியுள்ளான். "பாடையிலே படுத்தூரை சுற்றும்போதும் பைந்தமிழ் அழும் ஓசை கேட்க வேண்டும். ஓடையிலே என் சாம்பல் கரையும்போது ஏன் தமிழே சலசலத்து ஓட வேண்டும்" என்கின்றவரிகள் தமிழை அழித்துவிட நினைப்பவர்களுக்கு சம்மட்டியாய் அடிகொடுக்க வேண்டும்.

வீதிக்கு வீதி ஆங்கிலப் பாலர் பாடசாலைகளும், ஆரம்பப் பாடசாலைகளும் முளைவிட்டிருக்கின்றன. தமிழன்னையின் குழந்தைகளை தமது ஆதாரத்தின் ஆகாரமாகத் தத்தெடுக்கின்றன. முன்னைய கால வெளிகள் அற்புதமானவை. அவ்வெளியின் ஒளியாக சனசமூக நிலையங்கள் திகழ்ந்தன. அங்கு பாலர் பாடசாலைகள் இயங்கி வந்தன. அவையெல்லாம் கால ஓட்டத்தின் நவீன களிப்பினுள் மூழ்கிக் காணாமல் போய்விட்டன. பெற்றோர் ஆங்கிலத்தையே நாகரிக மொழியாகக் கருதுகின்றனர். பிறந்த குழந்தைக்கு ஆங்கிலச் சொற்களையே பேசக் கற்றுத் தருகின்றனர். "அம்மா" என்ற தெய்வீக வார்த்தையை ஓரங்கட்டிவிட்டு "மம்மி" என்று சாத்வீகம் அற்ற மொழியாடலைச் சொல்லிக் கொடுக்கின்றனர். 'மம்மி' என்பது இறந்தவர்களின் உடல்கள் என எகிப்திய வரலாற்றின் அடிப்படைகள் குறித்துரைப்பதை இவர்கள் அறிந்துகொள்ளத் தலைப்படவில்லை. 'ஓகே', 'சொறி', 'தாங்ஸ்' போன்ற ஆங்கிலச் சொற்களின் மொழிவடைப் பலாபலன் தனைப் பற்றியிருக்கும் இசைவாக்கத்தோடு பிள்ளைகளை உருவாக்குகின்றனர்.

## அழகியலற்ற மொழிப் பிறழ்வு


அழகான தமிழ்ப் பெயர்கள் இருக்க, பற்கள் கொளுவிக் கொள்ளும்படியான பெயர்களைப் பிள்ளைகளுக்குச் சூட்டுகின்றனர். பின்னாளில் பெயருக்கான அர்த்தம் தெரியாது பிள்ளைகள் திண்டாடுகின்றனர். உணவுப் பழக்க வழக்கங்களில் கூட 'பீட்சா', 'பர்கர்', 'கொக்கோ', 'சிக்கன்', 'பிரைட் ரைஸ்', 'செவன் அப்' என ஆரோக்கியமற்ற உணவு உடலில் திழைத்து சுவைதருவியாக உச்சரித்துப் பெருமை கொள்கின்றனர்.

இன்றைய காலவெளி நகர்வில் ஒரு பகுதி மாணவரை எடுத்துக் கொண்டால் அங்கு ஒழுங்கான தமிழ் உச்சரிப்பு தெரியாதவர்களே அதிகம் இருக்கின்றனர். தமிழிலுள்ள காற்புள்ளி, அரைப்புள்ளி என்ற தமிழ் உச்சரிப்பின் தாற்பரியம் மழுங்கி 'coma', 'Full Stop' என்பதாகவே அவை உச்சாடனம் பெறுகின்றன. தமிழ் வடிவ அமைவை அறிந்து பயன்கொள்வதில் ஆர்வமற்றிருக்கின்றனர். ஏராளமான எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகளை எழுத்துநடையில் இயல்பாக்கிக் கொண்டுள்ளனர். ஆங்கிலம் கருமமொழியாகவே உள்ளது. ஆனால் தமிழ், தாய்மொழியாக உள்ளது. நவீனக் களிப்பின் வேண்டாத அளிக்கையால் இதனைப் புரிந்துகொள்ள பெற்றோர் மறந்துவிடுகின்றனர். அதன்வழி பிள்ளைகளும் விலங்கிடப்படுகின்றனர். பரிதாப நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

## ஒழுங்கமைவற்ற வரலாற்றின் அறிவூட்டம்

பாடநூல்களை எடுத்துக் கொண்டால், தமிழர் வரலாறு மறைக்கப்படுகிறது என்பது மறுக்கப்படாத உண்மை. சிங்களவர் மட்டும் இலங்கையை ஆளவில்லை. தமிழ் மன்னர்களும் நாட்டை ஆட்சி அதிகாரம் செய்துள்ளனர். சங்கிலியன், செகராசசேகரன், பரராசசேகரன், எதிர்மன்னசிங்கன், பண்டாரவன்னியன் போன்ற தமிழ் மன்னர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி புரிந்துள்ளனர். 1619 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசன் சங்கிலியன் போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்புக்கெதிராக இறுதிவரை போராடினான் என்பதும் இறுதியில் கைதுசெய்யப்பட்டு கோவாக்கு கொண்டு செல்லப்பட்டான் என்பதும் வரலாறு.

> லெமூரியாக் கண்டத்தில் இருந்து இலங்கை, அந்தமான், நிக்கோபார் தீவுகள், ஜாவா, சுமத்திரா, ஆஸ்திரேலியா போன்ற இன்னும் பல நாடுகள் பிரிந்துள்ளன என்பதை பூகோள ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அப்படியெனில் உலகின் முதல் மனிதன் பேசிய மொழியும் தமிழ் தான் என்பதில் ஐயமில்லை.



# தமிழ்மொழி

(தொடர்ச்சி)

போர்த்துக்கல் நாட்டின் ஆவணக் காப்பகத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சிப் பிரதேச விவரங்கள் உள்ளதாக அறிய முடிகிறது. ஆனால் இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கான வரலாற்றுப் பாட நூல்களில் தமிழ் மன்னர்களது ஆட்சி நிலை பற்றிய தகவல்கள் இடம்பெறுவதில்லை. எம்மவர்கள் புலம்பெயரும்போது தமிழும் கூடவே புலம்பெயர்ந்தது. சிலர் அதனை பக்குவப்படுத்தி கையாள்கின்றனர். ஒரு சிலர் திரும்பியே பாராது வேற்று மொழிக் கலாசாரத்துடன் இணைவு கொண்டு வாழ்கின்றனர். 'நான் தமிழன்' என்பதில் பெருமை கொள்பவனே மறத்தமிழன். அழகான, பாதுகாப்பான, எக்காலமும் ஏனையவர்களால் பூசித்து வணங்கக் கூடிய பண்பாடும், கலாசாரமும் கொண்டது தமிழ்மொழி. இந்தவகையிலே இத்தகு தனிச் சிறப்புக்களையும் கொண்டமைந்த அருமந்த தமிழ்மொழியை அழியவிடாது பாதுகாக்க வேண்டும். தமிழ்த் தாய் பெற்றெடுத்த புதல்வர்கள் அனைவரிடத்தும் வேண்டப்படும் கடமைக்கூறும் அதுவே.

## மொழியின் தனித்துவங்களை பேணுவோம்

ஆக, பிறக்கும் பிள்ளைகளுக்கு நல்லதமிழிலில்பெயர்சூட்டுவோம். தமிழ் உணர்வை சிறுவயதில் இருந்தே குழந்தைகளுக்கு ஊட்டுவோம். தமிழ்க் கலாசாரத்தையும் பண்பாட்டையும், உடைகளாலும் பழக்கவழக்கங்களாலும் உணவுகளாலும்மெருகேற்றுவோம். வழுவாத தமிழ் உச்சரிப்புகளை உச்சரிப்போம். தமிழோடு வேற்று மொழிகளை சிறுதுளியேனும் கலக்காது பாதுகாப்போம். குறியீடுகள், இணைமொழிகள், அடுக்குமொழிகள், தொடர்கள், உருவகம், உயர்வு நவிற்சி, தற்குறிப்பேற்றல் போன்ற தமிழ் மொழி வழக்கின் பற்றுறுதிகளை சிறுவயதிலேயே கற்றுக்கொள்ள நாம் பாடுபடுவோம். அருமருந்தென்ன தமிழின் சுவையை உண்டுணர வீடுகளில் பாரம்பரிய உணவு முறைகளைக் கையாள்வோம். பிறகென்ன, தமிழின் சுகந்தம் எங்கும் வீசும். தமிழின உணர்வு கொண்ட குழந்தைகளாக எம் சமூகம் மாற்றங் கண்டுகொள்ளும்.

ஆங்கில மொழியைக் கௌரவமாகக் கருதாது, நல்ல தமிழ்கூறி மேன்மை காணும் தமிழனாக வாழ்வோம். செம்மொழியாம்தமிழ்மொழியை சுவாசிப்போம், சுவைப்போம், மகிழ்ந்திருப்போம்.

"வாழ்க தமிழ்மொழி..! வளர்க தமிழ் மொழி !" எனத் தினம் தினம் வாயாரப் பாடியிருப்போம். சேதாரமின்றி தமிழர் வாழ்வின் உய்வாய் தமிழைப் பாதுகாப்போம். இந்த உறுதிகூறலை, இன்றே இந்தநிமிடமே மேற்கொண்டு வரலாற்றின் பெருமையுடைய தொன்மத் தமிழர்களாய் நிலைத்திருந்து தமிழ் மொழியால் இவ் உலகை ஆட்சி அதிகாரம் செய்வோம்.




# திருக்குறளின் அரிய தகவல்கள்

- ★ திருக்குறளில் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.
- ★ திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் - 42,194
- ★ திருக்குறளில் தமிழ் எழுத்துக்கள் 247 இல் 37 எழுத்துக்கள் மட்டும் இடம்பெறவில்லை
- ★ திருக்குறளில் இடம்பெறும் இரு மலர்கள்- அனிச்சம், குவளை
- ★ திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் - நெருஞ்சிப் பழம்
- ★ திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை - குன்றிமணி
- ★ திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து - ஔ
- ★ திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள்- பனை, மூங்கில்
- ★ திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து - னி(1,705)
- ★ திருக்குறளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் - ளீ, ங
- ★ திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண்- ஒன்பது
- ★ திருக்குறள் இதுவரை 26 மொழிகளில் வெளிவந்துள்ளது.
- ★ திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழிபெயர்த்துள்ளனர்.






# வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## அறிவித்தல்

## பகிரங்க மூடிய கூறுவிலை விற்பனை

வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் மோட்டார் சைக்கிள்கள் மூடிய கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது.

| மோட்டார் சைக்கிள் இலக்கம் | வகை |
|---|---|
| NP JN0365 | BAJAJ CALIBER |
| NP MH 8371 | BAJAJ CT 100 |
| NP TS 8042 | BAJAJ CT 100 |
| NP TS 8043 | BAJAJ CT 100 |

மூடிய கூறுவிலைகள் மூலம் விற்பனைக்கு விடப்படும் மோட்டார் சைக்கிள்களுக்கான விண்ணப்பப் படிவத்தினை கீழ்குறிப்பிடப்படும் முகவரியில் அமைந்துள்ள சமாச அலுவலகத்தில் விடுமுறை நாள்கள் தவிர்ந்த கிழமை நாள்களில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 04.30 மணிவரையும் அத்துடன் சனிக்கிழமைகளில் மதியம் 12.30 மணி வரையும் ஒவ்வொரு மோட்டார் சைக்கிள்களுக்கும் மீளப்பெறமுடியாத ரூபா ஐந்நூறு (500.00) தொகையையும், மீளளிக்ககூடிய தொகையான ரூபா ஐயாயிரம் (5,000.00) தொகையையும் செலுத்தி பெற்றுக் கொள்ளமுடியும்.

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்ப படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒவ்வொரு விண்ணப்ப படிவங்களுக்கும் தனித்தனியான பணத்தொகை செலுத்தப்பட வேண்டும்.

மேற்கூறிய மோட்டார் சைக்கிள்களை **"வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். இல.44, பொதிமண்டப வீதி,(Goods Shed Road) வவுனியா"**- என்னும் முகவரியில் 25.10.2017 ஆம் திகதி தொடக்கம் 13.11.2017 ஆம் திகதி வரையும் விடுமுறை நாள்கள் தவிர்ந்த கிழமை நாள்களில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 04.30 மணிவரையும் அத்துடன் சனிக்கிழமைகளில் மதியம் 12.30 மணி வரையும் பார்வையிடலாம்.

இவ் மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் மோட்டார் சைக்கிளின் இலக்கம் குறிப்பிடப்பட்டு **" தலைவர்,வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல.44, பொதிமண்டப வீதி, வவுனியா"** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படும் இவ் மூடிய கூறுவிலைக்கான பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்கள் 15.11.2017 ஆம் திகதி பிற்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட பணத்தொகையை செலுத்தி பெறப்படாத விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும்.

கிடைக்கப் பெற்ற மூடிய கூறுவிலை விண்ணப்ப படிவங்கள் 16.11.2017 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 09.30 மணிக்கு எல்லோர் முன்னிலையிலும் சமாச நிதி, நிர்வாக உப குழுவினால் சமாச அலுவலக மண்டபத்தில் வைத்து திறக்கப்பட்டு கூடுதலான கேள்வித் தொகையை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட விண்ணப்பதாரிக்கு மோட்டார் சைக்கிள் விற்பனை செய்யப்படும். இவ் மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொள்பவர் ஆகக்குறைந்தது மூன்று (03) நாள்களுக்குள் உரிய பணத்தை சமாச அலுவலகத்தில் செலுத்தி மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொள்ளலாம். மேலும் சமாசத்தின் நிதி, நிர்வாக உபகுழுவின் தீர்மானமே இறுதி முடிவாகும்.

மூடிய கூறுவிலைக்கான விண்ணப்ப படிவங்கள் திறக்கப்படும் தினம் அன்று விண்ணப்ப படிவங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகள் சமுகமளித்தல் வேண்டும் அல்லது அவர் சார்பில் வேறு பிரதிநிதியொருவர் சமுகமளித்தல் வேண்டும்.

உரிய விண்ணப்பதாரி மூன்று (03) நாள்களுக்குள் பெற்றுக்கொள்ளாத சந்தர்ப்பத்தில் அடுத்த நிலையில் உள்ளவருக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்படுவதுடன் பெற்றுக்கொள்ளாதவருக்குரிய ரூபா ஐயாயிரம் (5,000.00) வைப்புத் தொகை மீளளிக்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,**
**இல.44, பொதிமண்டப வீதி, (Goods Shed Road), வவுனியா.**
T.P No: **024 - 222 2341**

## பரிசளிப்பு விழா







யாழ்ப்பாணம் - பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்வுகளும் அண்மையில் இடம்பெற்றன.



# அருளோடு ஆன்மிகம் உவந்தளிக்கும்

# நயினை நாகபூசணி அம்பாளின் நூலகம்

நா.கோபாலகிருஷ்ணன்

நயினாதீவு நாகபூஷணி அம்பிகையின் 'அருள் அலை, அகிலம் அனைத்திலும் பெரு வெள்ள ஊற்றாகி மக்களை பக்தியால் ஆளுகைசெய்கிறது. இனமதமொழிவேறுபாடுகள் கடந்து அருளுரையின் அறிவால் அன்பால் அரவணைப்பூட்டி வரவழைத்து நிற்கின்றது. அனுதினமும்நயினயம்பதியிலேசக்திரூபமாய்எழுந்தருளி அருள்பாலிக்கும் பரிபூரணியவளின் திரு வீதியில் அடியார் கூட்டம் பக்தி பரவச நிலையில் ஒன்றுகூடித் திழைக்கின்றனர். அம்பிகையவளுக்கான திருத் தொண்டின் பால் தோற்றமுறும் அன்பினில் இரு கரங்களையும் தலைமேல் குவித்து அடியவர்கள் வழிபாடுஇயற்றுகின்றதெய்வீகஅருள்காட்சிகிடைத்தற்கரிது.

இதனைக் காணுகின்ற போது, 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்ற பணிதல் மேன்மையுறுகிறது. உண்மையில்நயினாதீவுமண்ணும்அங்கு வாழ்கின்ற மக்களும் என்ன தவம் செய்தார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது. வேண்டுவார் வேண்டுவதை அருளும் அருள் சக்தியாக அன்னை நாகபூஷணி, அன்றும் இன்றும் என்றும் அருளின் பொலிவோடு விளங்குவதே இத்தகு சிறத்தல்களின் காரண காரியமாக முதன்மைபெறுகிறது.

**அம்பிகையின் அருளமுதோடு அறிவமுது**

அன்னை நாகபூஷணியின் அருளோடு அர்ச்சனை, நாகதோஷ பரிகாரம், அபிசேகம், தினமும் அன்னதானம் தனித்துவம் செய்ய, இவை அனைத்திற்கும் அப்பாலாய் அருங்காட்சியகமும் நூலகமும் மிளர்வுறுகின்றன. அறிவால் அறிகின்ற அறிவாலயமாக முதன்மைபெறுகின்றன. ஆலயத்தின் தெற்கு வீதியில்நூலகம்அமைந்துள்ளது. தேடக்கிடைக்காத புத்தகங்கள் நூலகத்தில் நிறைவாகவுள்ளன.

**அருளாளர் கா.ஆ.தியாகராசா**

"கடை திறந்தேன் கொள்வாரில்லை" என்று வள்ளலார் சொன்னவாறு அம்பாளின் நூலகத்தின் மகத்துவத்தை அனைத்து அடியவர்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும் என்பதில் நயினாதீவு நாகபூஷணி அம்பிகை ஆலயத்தின் மரபு வழி அறங்காவலரும் முன்னாள் அறங்காவலர் சபையின் தலைவருமான சைவப் பெரியார் கா.ஆ.தியாகராசா அதீத ஈடுபாடு கொண்டுள்ளார். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமே" என்றதிருமந்திரத்தின் வாசகவடிவமாக அர்த்தம்தருகிறார். அம்பிகையின்நூலகத்தில்உள்ள பெரும்பான்மையான நூல்களின் உட்பொருளை கற்றுணர்ந்த பெரியாராக திகழ்கிறார். பன்னிரு திருமுறைகளையும், பிழையறச் சொல்லற உரிய பண்ணோடு பக்தியால் உணர்ந்து அருளின் நிறை குடமாகப்பேசுவார். பக்திபரவசநிலையில்அம்பிகையின் திருவடி நின்று ஓதுகின்ற போது அடியவர்களை அம்பாளின்அருள்சுனையில்மூழ்கவைத்துவிடுகின்றார். மனிதருள் சிலரால் எழுத முடியும், சிலரால் பேசமுடியும், சிலரால் பண்ணோடு பாட முடியும், இன்னும் சிலரால் ஆன்மீக பக்தி நெறியோடு வாழமுடியும், ஆனால் மேற்சொன்ன அத்தனை கைங்கரியங்களும் ஒருவரிடத்தே குடிகொண்டுள்ளது எனில், அது தெய்வீக அருள் சக்தியின் வெளிப்பாடே. இத்தகு சைவப்பெருநெறியாளனைநயினைஅம்பாள்சைவ உலகுக்கு தந்தருளினாள் என்பது பெருங்களிப்பே.

ஆம், தன்னைத்தந்ததுநயினைஅம்பாளின்நூலகம் தான் என்றுபெருமையோடுபேசிக்கொள்வார். தான் பெற்ற இன்பத்தை அம்பாளின் அருள் வேண்டிவருகின்ற அனைத்து அடியவர்களும் பெறவேண்டும் என்ற பணிப்பிற்கமைய அம்பாளின் நூலகத்துக்கு ஒரு பணியாளரை நிரந்தரமாக நியமித்து காலை 8.30 மணியில் இருந்து மாலை 4.30 மணிவரை நூலகம் திறந்திருக்க வழிவகை செய்து கொடுத்துள்ளார். நயினாதீவுநாகபூஷணிஅம்பாள்ஆலய அறங்காவலர்சபையினரும்இதனைஅண்மைக்காலமாக திறம்பட செயலருவாக்கி வருகின்றனர்.

"யான்பெற்றஇன்பம்பெறுகஇவ்வையகமே" என்ற திருமூலரின் தவமொழிக்கமைய அம்பாளின் நூலகத்தில் அமர்ந்து கொண்டு நாம் வாசித்துச் சுவாசிக்கின்ற அத்தனை விடயங்களும் பசுமரத்தாணி போல மனதில் பதிந்து விடுகின்றன. இதனை அம்பாளின் அருள் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். அம்பாளின் அருள் வெளிப்பாடு நூலகமெங்கும் விரவிக் கிடக்கின்றது.



**அறிவுப் பசி காணுங்கள்**

நயினை அம்பாள் அருள்பசியையும், உடற்பசியையும், அறிவுப்பசியையும்நாடிவரும்அடியவர்களுக்கு அனுதினமும் நல் அபயகரங்களை உவந்திருக்கிறாள். அடியவர்கள்நூலகம்வருகை தந்துஅறிவுக்கனியைபறித்துச்செல்லவேண்டும் என்பது அறங்காவலர் சபையினரின் அன்பான பணிவான வேண்டுகோளாக அமைந்துள்ளது. அடியவர்கள் அம்பிகையின் தரிசனம் கண்டு மர நிழல் மேடையில் அமர்ந்து காற்று வாங்குவதை விடுத்து, அவர் தம் பொழுதை நற்பொழுதாகக் களிக்கவேண்டும். அதற்காய் நூலகத்தின் நுழைவாயில் எப்போதும் அம்பிகையின் மலர்முகமாய் செந்தளித்துவரவேற்பளிக்கிறது. ஆக, அம்பாளின் அருள் அறிவுத்தேனைப் பருக வாரீர்.

# எட்டுத்தொகை

எட்டுத்தொகை என்பது எட்டு நூல்களின் தொகுப்பு. இது சங்க இலக்கியம். இதில் அடங்கிய ஒவ்வொரு நூலும் பலரால் பல காலகட்டங்களில் எழுதப்பட்டுப பின்னர் ஒருசேரத் தொகுக்கப்பட்டது. இவற்றில் பல பாடல்களில் அவற்றை எழுதியவரது பெயர் காணப்படவில்லை. அகத்தையும் புறத்தையும் பற்றிய பாடல்களாக இந்த நூல்களைப் பகுக்கின்றனர். தொழில், அளவு, பாட்டு, பொருள் ஆகியவற்றால் தொகுக்கப்பப்பட்டமையால் தொகை எனப் பெயர் பெற்றது. இந்தத் தொகையுள் ஏறத்தாழ 2 ஆயிரத்து 352 பாடல்களை 700 புலவர்கள் பாடியுள்ளனர். சுமார் 100 பாடல்கள் ஆசிரியரின் பெயர் தெரியாப் பாடல்களாக உள்ளன.

### எட்டுத்தொகை நூல்கள்



நற்றிணை
குறுந்தொகை
ஐங்குறுநூறு
பதிற்றுப்பத்து
பரிபாடல்
கலித்தொகை
அகநானூறு
புறநானூறு

# சிவப்பேறுதந்த தவப்பேறு

கே.எஸ்.சிவஞானராஜா

திருக்கேதீஸ்வரம் இதுவரை செல்லாதவர்களாக இருந்தாலும் தயவுசெய்து இனியாவது ஒருமுறை சென்று உங்கள் பாதங்களை அந்தப் புண்ணிய பூமியில் படுமாறு நடந்து தொழுது வணங்கி வலம் வாருங்கள். காரணம், நவக்கிரகங்களில் ஞானாசிரியனான கேது வழிபட்ட ஆலயம் என்பது ஒரு புறம் இருக்க மகாபாரத இராமாயணப் பாத்திரங்கள் போர் முடிந்த கையோடு திருக்கேதீஸ்வரத்தில் எழுந்தருளியுள்ள கௌரி அம்பாள் சமேத திருக்கேதீஸ்வரப் பெருமானை வணங்கி சமாதான சக வாழ்வு பெற்றதாகக் கர்ணபரம்பரைக் கதைகள் எடுத்தியம்பும் அல்லாமலும் சுந்தரரும், சம்பந்தரும் போற்றிப் பாடிய திருப்பதிகங்கள் பாடுவோர்க்கும், ஓதுவோர்க்கும், கேட்போர்க்கும் வரமளிப்பனவாய் உள்ளன. மேலும் பாலாவித் தீர்த்தத்தில் தீர்த்தமாடியவர்கள் எவராயினும் நோய் தீர்க்கப் பெற்றவர்களாகவே வெளியேறுகின்றனர்.

'கேடிலாத கேதீச்சரம் தொழுதெழக்
கெடுமிடர் வினை தானே'

இந்தியாவில் இருந்து கொண்டே, குழந்தை சம்பந்தரும் தோழராம் சுந்தரரும் திருக்கேதீஸ்வரத்தைப் பாடி பேறுபெற்ற தவப்பேறினை நாம் இன்னுமே முறையாக அனுபவிக்கவில்லை என்பது மனக் கவலையே.

மன்னாரில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரம் உங்களனைவரையும் இருகரங்கூப்பி வரம் பெற அழைக்கின்றது.

**பேறு**

எம் பெருமானையும்; பெருமாட்டியையும் வணங்கி அருள்பெற தூர இடங்களிலிருந்து வருகை தரும் அடியார்களின் நலன் கருதி, தாராள மனங்கொண்ட 'மடங்கள்' பலதத்தம் வாயில்களை அகலத் திறந்து வைத்துள்ளன. அவற்றுள் அமுத சுரபியாகவும், அட்சய பாத்திரமாகவும் திகழ்வதில் எல்லோராலும் வாழ்த்தப்படும் ஒரு மடம், திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கருகில் அமைந்துள்ள "அம்மை அப்பன்" மடமாகும்.

இந்த மடம் சிவத்தொண்டு புரியும் 'வல்லிபுரம்' அம்மாவினால் நிர்வகிக்கப்படுகிறது. சதா எந்த நேரமும் கேதீஸ்வரப் பெருமானையே இடைவிடாது சிந்தித்து தரும காரியங்கள் செய்து வரும் இந்த மடத்தில் சைவ சமய ஆசாரம் தழுவிய பக்குவமான பண்பான அடியார்களுக்குத் தங்குமிட வசதியும் சாப்பாட்டு வசதியும், தொண்டாற்றக் கூடிய வாய்ப்பும், பாராயண வசதியும் செய்து கொடுக்கப்படுகிறது. பூப்பறித்தல், மாலைகட்டுதல், துப்பரவாக்குதல், கூட்டுதல், பெருக்குதல், பஞ்சபுராணம் ஓதுதல், பஜனை பாடுதல் ஆகிய தொண்டுகளும் நிறைவாக எம்பெருமானுக்காகவே நிறைவேற்றப்படுகிறது. மேற்படி புனித கைங்கரியங்கள், அம்மை அப்பன் மடத்தில் எப்பொழுதும் நடைபெறுகிறது.


**நிறுவல்**

அம்மை அப்பன் மடத்தை நிறுவியவர் ஆங்கில விஞ்ஞானப் பட்டதாரியும் ஓய்வு பெற்று வரும் சைவ ஆசார சீலருமாகிய திருமதி சி.வல்லிபுரம் அம்மா ஆவார். இவருடைய கணவர், கல்வி வெளியீட்டுத் திணைக்கள நூலாக்கப் பிரதம அதிகாரியான அமரர் வல்லிபுரம் எனும் ஸ்ரீமான் ஆவார். இவருடைய இரண்டு பெண் பிள்ளைகளும் விசேட தரமுடைய வைத்திய கலாநிதிகளாவார்கள். ஒருவர் டாக்டர் பாலசரஸ்வதி மற்றையவர் டாக்டர் பஞ்சலட்சுமி. இருவரும் கொழும்பிலே வைத்தியர்களாக சேவை புரியும் வேளையிலே நோயினால் பாதிக்கப்பட்டவர்களாக இருவருமே சிவபதம் எய்தினார்கள். டாக்டர் செல்வி பஞ்சலட்சுமி தனது நோயின் எதிர்காலம் உணர்ந்தவர் என்ற காரணத்தினால் கொழும்பில் உள்ள வீட்டினை விற்குமாறும் மன்னார் கேதீஸ்வரத்தில் ஓர் ஆச்சிரம மடத்தினை நிறுவி அங்கு எம்பெருமானுக்கும் பெருமாட்டிக்கும் உகந்த கைங்கரியங்களையும் தானதருமங்களையும் சிரமேற்கொள்ளுமாறும் வேண்டி, தன் தாயாரையே அதற்குப் பொறுப்பாகும்படியாகக் கூறி கட்டட வரைபடத்தையும் ஒப்படைத்ததற்கு அமைவாக நிர்வாக அனுமதியுடன் 'அம்மை அப்பன் மடம்' எம்பெருமானுக்கும் எம் பெருமாட்டிக்கும் தொண்டுபுரியும் ஒரு சிவப் பேறும் தவப் பேறுமுடைய மடாலயமாகத் திகழ்கிறது. அன்னத்துக்கும் குறைவில்லை. அடியவர்க்கும் குறைவில்லை. தொண்டுக்கும் குறைவில்லை. தூய்மைக்கும் குறைவில்லை. தமிழுக்கும் குறைவில்லை. தயவுக்கும் குறைவில்லை. மடம் சுயநலம் எதுவுமின்றி சீராக இயங்குகின்றது.

**மும்மணிகள்**

18.9.2017 திங்களன்று அமரர்கள் வல்லிபுரம், பாலசரஸ்வதி, பஞ்சலட்சுமி ஆகிய மூவராம் மும்மணிகளுக்கும் புரட்டாதி மாத பட்ச தவப்பேறினையும் அருட்பேறினையும் வரமாக்கவல்ல குருபூசை சிறப்பாக மடத்தில் நடைபெற்றது. அடேயப்பா! தானதர்மங்கள், பேச்சுகள், பாமாலைகள், பஜனைகள் என நிகழ்வுகள் யாவும் அறவழிக்கும் யாவரையும் ஈர்த்துச் சென்றன. வயிற்றுக்கும் வாழ்வுக்கும் வாழ்த்துக்கும் அம்மை அப்பன் திருமடம் ஆற்றும் பணி இப்பூவுலகில் சூரிய சந்திரர் உள்ளவரை நீடிக்க ஆவன புரிவது கேதீஸ்வரப் பெருமானின் பொறுப்பாகும். அந்த மண்ணில் புண்ணியம் விளைகிறது.





# ராசிகளின் வகைகளும் அதன் குணங்களும்!

ஜோதிட ரீதியாக பன்னிரெண்டு ராசிகளில் சில ராசிகளை நெருப்பு ராசி என்றும், சில ராசிகளை நீர் ராசி என்றும், சில ராசிகளை நில ராசி என்றும், சில ராசிகளை காற்று ராசி என்றும் அழைப்பது உண்டு. அந்த வகையில் உங்கள் ராசி எந்த வகையைச் சேர்ந்தது. அதற்கான குணம் என்ன என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**நெருப்புராசிகள் :**

மேஷம், சிம்மம், தனுசு ஆகிய மூன்று ராசிகளையும் 'நெருப்பு ராசிகள்' என்று அழைப்பார்கள்.

இந்த ராசியைச் சேர்ந்தவர்கள் அளவுக்கு அதிகமாக கோபப்படுவார்கள். நெருப்பு ராசியாக இருப்பவர்கள் கோபமாகவும், முரட்டுத்தனமாகவும், தைரியமாகவும் தலைமைப் பொறுப்புடனும் இருப்பார்கள்.

**நிலராசிகள்:**

ரிஷபம், கன்னி, மகரம் ஆகிய மூன்று ராசிகளையும் 'நில ராசிகள் என்று அழைப்பார்கள்.

இந்த ராசியைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலான நேரங்களில் பொறுமையின் சிகரமாக இருப்பார்கள். மேலும், இவர்கள் சாந்தமாக விட்டுக்கொடுக்கும் குணத்துடனும், அன்பு நிறைந்து மனத்துடனும், ஒழுக்கத்துடனும், பாசத்துடனும் நல்வழியில் செல்பவர்களாக இருப்பர்.

**காற்றுராசிகள்:**

மிதுனம், துலாம், கும்பம் ஆகிய மூன்று ராசிகளையும் 'காற்று ராசிகள் என்று அழைப்பார்கள்.

இந்த ராசியைச் சேர்ந்தவர்களின் மனம் எப்போதும் அலைபாய்ந்து கொண்டே இருக்கும் என்று கூறப்படுகிறது. இவர்கள் தற்பெருமையுடன் உயர்ந்த ஆராய்ச்சியுடன் அறிவாளிகள் புடைசூழ சந்தோஷமாகவும், புத்துணர்ச்சி யுடனும், எந்த நேரமும் ஆலோசனை செய்து கொண்டும் இருப்பார்கள்.

**நீர்ராசிகள்:**

கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய மூன்று ராசிகளையும் 'நீர் ராசிகள்' என்று ஜோதிடர்கள் அழைக்கிறார்கள்.

இந்த ராசியை சேர்ந்தவர்கள் இளகிய மனம் கொண்டவர்களாக இருப்பார்கள். இவர்கள் அமைதியாகவும், ஞானத்துடனும் சூழலுக்கு தகுந்தவாறு தம்மை மாற்றிக் கொண்டு சந்தோஷத்துடன் பிறருக்கு உதவும் குணம் கொண்டவர்களாகவும் இருப்பர்.

## நாளை

**26.10.2017**
வியாழக்கிழமை

**ஐப்பசி 9**

திதி: ஷஷ்டி மு.ப.10.25 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.இ. 10.35வரை
சுபநேரம்: 07.32–09.02 வரை
ராகுகாலம்: 01.32–03.02 வரை

கந்தசஷ்டி விரதம்

## வரலாற்றில் இன்றைய தினம் 25.10.2017

1760 – மூன்றாம் ஜோர்ஜ், பிரிட்டனின் அரசரானார்.

1927 – இத்தாலிய அதி சொகுசுக் கப்பல் பிறின்சிபெஸ்ஸா, பிரேசில் கடற்பரப்பில் மூழ்கியதில் 314 பேர் உயிரிழந்தனர்.

1945 – கூட்டு நாடுகளிடம் ஜப்பான் சரணடைந்ததை அடுத்து, தாய்வானின் நிர்வாகத்தை சீனக் குடியரசு கைப்பற்றியது.

1962 – ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில், கியூபாவில் சோவியத் யூனியனின் ஏவுகணைகள் நிறுத்தப்பட்டுள்ள ஒளிப்படங்கள் வெளியிடப்பட்டது.

2007 – தமிழருக்காகக் குரல் எழுப்புவது இராஜதுரோகக் குற்றமாயின், விளைவுகளை ஏற்கத்தயார் என்று தலைமை நீதியரசருக்கு கூட்டமைப்புத் தெரிவிப்பு.

2009 – பக்தாத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 155 பேர் உயிரிழக்க சுமார் 730 பேர் காயமடைந்தனர்.

2016 – யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கொலை தொடர்பாக வெளிப்படை விசாரணை நடக்கும் என்று தலைமை அமைச்சர் ரணில் தெரிவித்தார்.

2016 – யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் மீதான சூட்டுச் சம்பவம் பொலிஸார் தமது வரையறைகளை மீறிய செயல் என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

2016 – இலங்கையில் சமாதானம் நிலவ வேண்டும் என்று பிரார்த்தனை செய்ய சர்வமதக் குருக்கள் ஜப்பானில் இருந்து முள்ளிவாய்க்கால் வருகை.

# சொல்லிசை ஊடே தனித்துவம் பெறும் கலைக்கூறாக வில்லிசை சிறப்புற்றிருக்கிறது

## வில்லிசைத் தென்றல் ஏ.என்.மதியழகன் கூறுகிறார்





க.கனகராஜா

கலைகள் ஆத்மார்த்தமானவை. இனிய கதைகூறலின் வழி மக்களை வழிப்படுத்துபவை. இயல், இசை, நாடகம் என முத்தமிழின் சிறப்பியல்பாக தனித்துவம் பெறுபவை. அந்தவகையிலே கதையோடு பாக்களும் ஒன்றுகூடி மக்களோடு கதையாடும் கலைக்கூறாக 'வில்லிசை' நிகழ்வு முதன்மை பெறுகின்றது. அங்கு பல கலைஞர்கள் கதைமாந்தர்களாக மேடை அலங்காரம் செய்வர். அவர்களுள் கதையின் முதன்மை அங்கமாக ஒருவர் கதைகூற அதற்கு இசைந்து ஏனையோர் அணிசெய் உரைஞர்களாக வாத்தியங்களை இசைத்தும் கதையோடு ஒன்றித்தும் உயிரோட்டம் தருவர்.



### பண்பியல்பு

வில்லிசை ஊடு சமூக விழிப்புணர்வும் ஆன்மீக விழிப்புணர்வும் புராண இதிகாச கதை அம்சங்களின் வழியே கருத்தாழம் மிக்கவையாக சிறந்திருக்கும். நிகழ்வின் ஓட்டத்தில் நகைச்சுவையும், ஜனரஞ்சகப் பண்பும் நிறைவுபெற்றிருக்கும். தமிழர் வரலாற்றில் இவ்வகையான கலைக்கூறுகளின் மிளர்வு தென்றுதொட்டே சொல்லிசையாக விளங்கின. அவற்றின் பொதுமைப் பண்புடைய அழகியலாக தற்காலத்தின் வழி 'வில்லிசை' என்ற உயர் வரைவிலக்கணங்கள் எம்மிடையே சிறப்புற்றிருக்கின்றன.

### தனித்துவ ஆளுமை

ஆக, ஈழத்தின் கலையியல் வளர்ச்சியில் 'வில்லிசை' எனும் தனித்துவக் கலை அம்சத்தைக் கையாண்டவர்களாக பலர் விளங்குகின்றனர். அவர்களுள் கலைவாணர் வில்லிசைக்குழுவின் நாயகன் க.நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி ஐயா) சிறப்பித்துக் கூறக்கூடியவர். ஈழத்தின் பல்வேறுபட்ட பிரதேசங்களுக்கும், புலம்பெயர் தேசங்களுக்கும் பயணம் மேற்கொண்டு நற் கதைகளை செவியுரையப் பறைந்த நல் மனிதராகத் திகழ்கிறார். போராட்ட காலங்களிலும் அவருடைய பணி உரிமையின் காயாக உருவகம் கொண்டு நற் கதைகளின் கனிகளையும் தந்திருந்தது. இவருடைய பணி நீளுகையில் அன்னாரின் அமரத்துவத்தைத் தொடர்ந்து அவரிடம் கலை படித்த பல மாணாக்கர்கள் நல் அறிவுரை ஊட்டம் பெற்றுள்ளனர். வில்லிசையின் கலை ஆளுமையை தொடர்ந்தும் அரங்கேற்றி வருகின்றனர்.

### நோக்குதற்குரிய ஆளுமை

அந்தவகையிலே சின்னமணி ஐயாவின் கலை ஆளுமைத் தெரிவுகளுள் கலாவித்தகர், வில்லிசை தென்றல் ஏ.என். மதியழகனும் குறித்து நோக்கத்தக்கவர். சின்னமணி ஐயாவின் பணியையும் அவரது கதையாடல் பாணியையும் பின்பற்றி வில்லிசை நிகழ்வுகளை நடத்திவருகிறார். இவர் தேர்வு கொள்கின்ற கதை அம்சங்கள் இலக்கியம் சார்ந்தும், சமூக விழிப்புணர்வு சார்ந்தும் முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பாக அவை இலக்கியக் கதைகள், இறைவனின் திருவிளையாடல் கதைகள், இயற்கையை பாதுகாப்போம், பனை மரத்தின் பெருமை என பலவாறாக அமைந்துள்ளன.

உதயன் நாளிதழின் 'புதன்பொய்கை' சிறப்பு இணைப்பு இதழுக்கான நேர்காணல் பொழுதின் போது- அவர் பின்வருமாறு தனது கலைப் பயண அமைவுகள் குறித்து கருத்துரைத்தார்.



### அனுபவ ஆரம்பம்

"தமிழர் வாழ்வில் பின்னிப்பிணைந்து காணப்படுவது முத்தமிழ். அதாவது இயல், இசை, நாடகம் ஆக அவை சிறப்பித்துக் கூறப்படுகின்றன. இவற்றுள் இசைச் சிறப்புடன் பிற கலைகளை தன்னகத்தே கொண்டமைந்தது தான் ஈழத்து வில்லிசை எனும் கலைக்கூறு. இவற்றின் சிறத்தல் இந்தியாவில் மட்டுமல்ல இலங்கையில் இன்னும் உன்னதமான பண்போடு இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அத்தகைய வில்லிசையைப் பார்க்கும் வாய்ப்பு 7.8 வயதில் எனக்குக் கிடைத்தது. கலைவாணர் வில்லிசைக்குழு க.நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி ஐயா) அவர்களின் வில்லுப்பாட்டை எனது அளவெட்டிக் கிராமத்தில் கும்பளாவளைப் பிள்ளையார், பெருமாக்கடவைப் பிள்ளையார், அழகொல்லைப் பிள்ளையார், தவளக்கிரி முத்தமாரி அம்மன் ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் பார்க்கக்குடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மிகவும் ஆவலாக மேடையின் முன்னால் அமர்ந்தி ருந்து அவர்கதைசொல்லும் பாங்கு, பாடல் முறைகள் என அபிநயங்கள், பக்கப்பாட்டுகாரரின் பகிடிகள் அனைத்தையும் ரசிப்பேன்





பாடசாலை வாழ்க்கைக் காலத்தில் யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் எனக்குத் தமிழ்மொழிக் கல்வி கற்பித்த செல்வி சகுந்தலா ஆசிரியை ஊடாக தமிழ்த்திணப் போட்டிகள், கலை விழாக்கள் என்பவற்றில் வில்லிசை நிகழ்வுகளை நடத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்தது. காரணம் எனது இரண்டாவது சகோதரன் நா.சிவ பாதசுந்தரம் சின்னமணி வில்லிசை குழுவில் ஒரு நகைச்சுவைக் கலைஞராக பல ஆண்டுகள் இருந்தார். அதனால் பாடசாலையில் வில்லிசை செய்யக் கூடிய சந்தர்ப்பத்தை எனக்கு ஏற்படுத்தித் தந்தார்கள். அதன் பின்னர் பாடசாலையில் மட்டுமல்லாது வெளியிடங்களில் இடம்பெறும் பொது விழாக்களின் போதும் நவராத்திரி காலங்களிலும் வில்லிசை நிகழ்வைச் செய்தேன்.

### நாடக ஆர்வம்

இக்காலங்களில் நாடகத்திலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தேன். அதன் பயனாக திருமதி. கோகிலா மகேந்திரன் ஆசிரியையிடம் நாடகத்தைப் படிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. தொடர்ந்து நாடகக் கற்கையை கற்று பலநாடகங்களில் பங்குபற்றிக் கொண்டேன். நாடகத்துறையில் ஆசிரியர் தரப்பரீட்சையில் சித்திபெற்று நாடகக் கலாவித்தகர் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டேன்.

### கலைவாணர் வில்லிசை குழுவில் இணைதல்

இந்த சந்தர்ப்பத்திலேயே எனது சகோதரன் புலம்பெயர்ந்து வெளிநாடு செல்ல வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. சின்னமணி ஐயாவோடு வில்லிசையில் பங்குபற்றி கலை; பணி செய்த எனது அண்ணனின் வெற்றிடத்தை இட்டு நிரப்ப வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டது. அசின்னமணி ஐயாவின் வில்லிசைக் குழுவில் நான் இணைந்து கொண்டேன். அதைத் தொடர்ந்து பல இடங்களுக்கு. அவ ரோடு வில்லிசை நிகழ்வுகளுக்குப் போகக் கூடிய வாய்ப்புகள் அதிகமாய் கிடைத்தன.

என்னுடைய பல்கலைக்கழக வாழ்க்கைக் காலத்திலும் நாடகம், வில்லுப்பாட்டு நிகழ்வுகளில் பங்காற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம் கிடைத்தன. ருசாங்கன் ஆசிரியர் நெறியாள்கை செய்த 'அடங்காப்பற்று' என்ற நாடகத்தில் நடித்தேன். அந்த ஞாபகங்கள் இப்போதும் நிழலாடுகிறது.

வில்லிசைத் துறையில் க.நா.கணபதிப் பிள்ளை ஐயாவோடு 15 வருட காலங்களுக்கு மேலாக பணியாற்றியுள்ளேன். ஆயிரக்கணக்கான மேடைகளை அவருடைய வில்லிசை நிகழ்வுகளை ஆளுகை செய்திருந்தன எனலாம்.

அவருடன் இருந்தகாலத்தில் கடந்த 2004

"இந்தியாவில் வில்லிசைக்கலை இருந்தாலும் ஈழத்துச் சின்னமணி ஐயாவின் வில்லிசை தனித்துவம் வாய்ந்தது. பாடல், கதை சொல்லும் முறை, அபிநயம், நகைச்சுவை, நடிப்பு என அவருடைய ஆளுமைகள் என்றும் நிலைத்திருக்கும்.

ஆம் ஆண்டு சுவிற்சர்லந்திற்கு வில்லிசை நிகழ்வு செய்வதற்காக செல்லும் வாய்ப்பு கிடைத்திருந்தது. அங்கே பல ஆலயங்களில் வில்லிசை நிகழ்வுகளை செய்திருந்தோம். புராண இதிகாசக்கதைகளான மகாபாரதம், இராமாயணம், வரலாற்றுக்கதைகள், கிளைக்கதைகள், தனிநபர் கதைகள், நவராத்திரி, சிவராத்திரி, பாலன்பிறப்பு எனப் பலதரப்பட்ட கதைகளை வில்லிசையில் சின்னமணி ஐயா அவர்கள் சுவாரஸ்யமாகச் சொல்வார். இலங்கையில் அவரது வில்லிசை நிகழ்வு இடம்பெறாத கோயில்களே இல்லை எனலாம். அவ்வளவு சிறப்பு அவருக்குண்டு.

இந்தியாவில் வில்லிசைக்கலை இருந்தாலும் ஈழத்துச் சின்னமணி ஐயாவின் வில்லிசை தனித்துவம் வாய்ந்தது. பாடல், கதை சொல்லும் முறை, அபிநயம், நகைச்சுவை, நடிப்பு என அவருடைய ஆளுமைகள் என்றும் நிலைத்திருக்கும்.

### கலைவாணரின் ஆசீர்வாதம்

இத்தகு சிறப்புகளோடு கலை வடிவங்களில் சொல்லாடல் ஊடு முதன்மை பெறுகின்ற வில்லிசையை கடந்த 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி உளவிக்குளப் பிள்ளையார் ஆலயத்தில் சின்னமணி ஐயா முன்னிலையில் நிகழ்த்தும் பேறும் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. அந்த நிகழ்வைத் தொடரந்து அத்தனை கலைஞர்களும் இணைந்து வில்லிசையை நடத்தி வருகின்றோம். எங்களுடைய கதை பேசல் பார்வையாளர் இடத்தில் அதிக வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. சின்னமணி ஐயாவின் ஆசீர்வாதமாக அவருடைய திருநாமம் கொண்ட 'கலைவாணர்" வில்லிசைக்குழுவாக' கதைகளைப் பேசி வருகிறோம். யாழ்பாணத்தில் மட்டுமல்லாது. மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, வவுனியா என தமிழர் தயாகம் எங்கும் கொழும்பு போன்ற பிற மாவட்டங்களிலும் இற்றை வரை நூற்றுக்கணக்கான மேடைகளை கண்டுள்ளோம். அதன் பயனாக 'வில்லிசைத்தென்றல்" என்ற பட்டத்தைத் தந்து என்னை பெருமைப்படுத்தியுள்ளார்கள். அது குறித்து மகிழ்வடைகிறேன். வில்லிசை எனும் தனித்துவமான கலைக்கூறு அழிந்துபோகமல் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இத்துறையில் தொடர்ந்தும் பயணித்துக் கொண்டு இருக்கிறேன்." என்றார்.

இராசையா ஸ்ரீதரன்

# மன்னார் மண் களித்த இந்து மாநாடு

## சீர்பல உடைய சிவ அருளுடைய நிகழ்வு

உலகெலாம் நிறைந்து அருள் பாலிக்கின்ற எல்லாம்வல்ல பரம்பொருள் சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக்கொண்டு வழிபாடு இயற்றுகின்ற ஒப்புவமையில்லாத தொன்மையுறு சமயம் சைவசமயம். இதன்வழி நாம் பெறுகின்ற அமைதியின் கைங்கரியம் அற்புதக் கீர்த்தியும் நன்நெறிமுறை உடைய நேர்த்தியும் கொண்டதாக விளங்குகின்றது. அந்த வகையிலே சைவ சமயத்தின் அருளுரைகளையும் அதன் பொருண்மைகளையும் மக்களிடத்தே கருத்துரைக்கும் விதமாக மன்னாரில் இடம்பெற்ற மகத்தான இந்து மாநாடு போற்றுதற்குரியது. ஆழ்ந்து நோக்குதற்குரியது.




**அருள் வலம்**

இந்த மாநாட்டுச் சிறப்பை 'உதயன்' நாளிதழ் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் சிறியேன் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். உண்மையில், நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோதசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் சைவ மாநாட்டில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கச் செல்வதான செய்தி எனை பக்தியின் வழி ஈர்த்தது. நிகழ்வுக்கு வருகை தர விரும்பினால் வாருங்கள் என்ற அழைப்பு சிவத்தின் காரண காரியமாக எனக்குள் தென்பூட்டியது. 'கரும்பு தின்னக் கூலியா..?' என்ற விதமாக நானும் மன்னார் நோக்கிப் பயணப்பட ஒப்புதல் கொண்டேன். கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 6 மணியளவில் மன்னார் நோக்கிய பயணம் ஆரம்பமானது.



காலை 8.30 மணியளவில் மன்னாரை வந்தடைந்தோம். எல்லாம் வல்ல திருக்கேதீஸ்வரப்பெருமானை வழிபாடு இயற்றினோம். திருநீற்றின் மகிமையைப் பீடித்து நல் உரைகளைக் கனிந்திட திருமுறைகள் பல பாடி இன்புற்றிருந்தோம். பின்பு ஆலயத்தில் இருந்து புறப்பட்டுச் சென்று ஊர்வலத்தில் பங்கெடுத்துக் கொண்டோம்.

**கலாசாரப் பாங்கான ஊர்வலம்**

அன்றைய மாநாட்டு நிகழ்வில் கலந்துகொள்ள பல அறிஞர்களும், சைவ அபிமானிகளும் வருகை தந்திருந்தனர். அவர்கள் அனைவரும் கலாசார உடையணிந்து ஊர்வலத்தை சீர்பல உடைய, சிவ அருளுடைய வீதிவலமாக மாற்றியமைத்திருந்தனர். மன்னார் நுழைவாயிலில் இருந்து சைவ கலாசாரப் பேரணி கொடி, குடை, ஆலவட்டம் என வண்ண அலங்கார ஆசாரமுற, பக்தர்கள் தில்லைக் கூத்தன் கனகசபையான் பொன்னம்பல நடராஜர் திருவுருவத்தைத் தாங்கி மேன்மையுற பக்தி பூர்வமாக அனைவரும் அசைந்திருந்தனர். அந்தச் சாலையின் இருமருங்கிலும் நந்திக் கொடிகள் தென்றலோடு கதையாடி அனைவரையும் சிவநாமத்தால் அரவணைத்திருந்தன.



காலை 9.30 மணியளவில் அந்த அழகிய கலாசாரப் பேரணி, மாநாடு நடைபெறுகின்ற மன்னார் நகரசபை மண்டபத்தை வந்தடைந்தது. ஊர்வலம் ஆரம்பமாகிய இடத்திலிருந்து நிகழ்வு மண்டபத்தை வந்தடையும் வரை ஒலித்துக் கொண்டிருந்த திருக்கேதீச்சரப் பதிகமும், திருவாசகம், சிவபுராணமும் அனைவரது கேண்மையுள்ளும் இன்பக் களிப்பூட்டின.

இந்த ஊர்வலத்தில் யாழ்ப்பாணம் நல்லை ஆதீன குரு முதல்வருடன் இந்தியாவைச் சேர்ந்த பேரூர் ஆதீன சந்நிதானம் தவத்திரு மருதாசலம் அடிகளார், நல்லை ஆதீன சமயப் பிரசாரகர், சிறப்புப் பேச்சாளர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சட்டத்தரணி கோசலை மதன், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன், வவுனியா தமிழ்ச் சங்க ஆரம்ப கத்தா தமிழருவி த.சிவகுமாரன், பன்னாட்டு இந்து இளைஞர் பேரவையின் நிறுவுநர் இலக்கியப்பணி சி.கணேஸ்குமார் மற்றும் சமயப்பெரியார்கள் மற்றும் ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

**பக்தியுணர்வும் ஆன்மீக மேன்மையும்**

இந்த எழுச்சிமிகு இந்து மாநாடு மங்கள விளக்கேற்றலோடும் இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்திருந்த நல்லை ஆதீன குரு முதல்வர் தமது ஆசியுரையை நல்கினார்.

"இப்படி ஒரு மாநாடு மங்களகரமாகவும் மகத்தான நெறிமுறையின் பயனாகவும் மன்னாரில் நிகழ்வது என்பது மகிழ்ச்சியைத் தருகிறது. சைவ சமய ஆர்வலர்கள் ஒன்றுகூட்டிய பக்திமயமான பேராதரவுடன் கூடிய அக்கறையானது மன்னார் மக்களின் பக்தியுணர்வையும் சைவத்தின் பாற்கொண்ட மேன்மையுறு பற்றுதலையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. பேரூர் ஆதீன இளைய சந்நிதானம் மற்றும் சிறப்புப் பேச்சாளர் சொல்வேந்தர் சுகிசிவம் ஆகியோரின் வருகை இந்த மாநாட்டுக்கு அற்புதக் கொழிப்பினை தந்துள்ளது. மேலும் ஒரு மித்த ஸ்ருதி லய ஞானத்துடன் கூடிய வரவேற்பு நடனம் புரிந்த இளமங்கையரின் அர்த்த நாதம் தில்லை நடராஜப் பெருமானுடைய சிவத்தாண்ட வத்தின் பிரதிபலிப்பை ஒப்புமை செய்தது. இவை அனைத்துமே மாநாட்டுக்கு பெருமை தேடித் தந்துள்ள சிறப்பான செயற்பாடுகளே. தவிர, இந்து மாநாடு சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்களெனப் போற்றி வளர்த்து நல்லூருக்குப் பெருமை சேர்த்த ஆறுமுகநாவலர் அரங்காக நடைபெறுவது எமக்கு மட்டிலா மகிழ்ச்சியைத் தந்துள்ளது." - என்றார்.

அதேபோன்று மன்னார் அறநெறிப் பாடசாலையின் இணையத் தலைவர் சிவஸ்ரீ மகாதர்மகுமாரக் குருக்கள் மாநாட்டின் முதல் நிகழ்வில் வழங்கிய ஆசியுரையில் கருத்துரைக்கும் போது,

"இன்று இங்கு நடைபெறுகின்ற இந்து மாநாடு பல்வேறு விதத்திலும் சிறப்புற்று மக்களுக்கு ஆன்மீக நாட்டத்தை ஏற்படுத்தும் உந்துசக்தியாக விளங்கும். வரலாற்றுச் சிறப்புமிக்க பாடல்பெற்ற தலமாகத் திகழும் திருக்கேதீஸ்வரத்தில் மூல மூர்த்தியாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற கௌரியம்மை சமேத ஸ்ரீ கேதீச்சரநாதர் திருவருள் அனைவரையும் ஆட்கொள்ளட்டும். இந்த மாநாடு நன்முறையில் நிகழ்ந்து சைவர்களுக்குப் பயன்மிகு நல்க பிரார்த்திக்கின்றேன்." - என்றார். தொடர்ந்து பேரூர் ஆதீன இளைய சந்தி தானத்தின் சிறப்புமிக்க அருளாசியுரை இடம்பெற்றது. அவர் தமது உரையில், "இந்தியாவிலிருந்து இலங்கை வந்திருக்கும் நாங்கள் இப்படி ஒரு மாநாடு நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். இலக்கண சுத்தமான தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்ற ஈழவளநாட்டின் மகிமையை இன்று நேரில் கண்டுகொண்டதையிட்டு பெருமிதம் கொள்கின்றேன். எழுச்சிமிக்க இந்த மாநாட்டில் நாம் கலந்துகொள்வதையிட்டு இறையருளை வியந்து வாழ்த்தி பிரார்த்தித்து மகிழ்கின்றேன்." என்றார். இத்தகு சிறப்பான ஆசியுரை நிகழ்வுகளோடும் பல அரங்க நிகழ்வுகளோடும் ஆரம்பமான இந்து மாநாட்டில் பல பிரமுகர்களும் அறிஞர்களும் நல் உரை பகர்ந்தனர். காலை அமர்வு சிறப்பாக நிறைவுக்கு வந்தது.

**இன்பத் தமிழின் தேன் சுவை பருக வைத்த மாநாடு**

மாநாட்டுக்கு வருகை தந்து தமிழ் பருகி மகிழ்ந்த அத்தனை ஆர்வலர்களுக்கும் மதிய உணவு போசனம் வழங்கிய கைங்கரியம் நல்ல உபகாரம். மாலை 2.40 மணியளவில் மாநாட்டின் மாலை அமர்வு ஈழத்தின் சிறந்த நாதஸ்வர, தவில் கலைஞர்களின் மங்கள இசையுடன் ஆரம்பமானது. தொடர்ந்து சிறப்புப் பேச்சாளர் சொல்வேந்தர் சுகிசிவம் வழங்கிய சொற்பொழிவு இடம்பெற்றது. மண்டபம் நிறைந்த பார்வையாளர்களை அவரது கணீரென்ற குரல் அமைதியால் கட்டிப்போட்டது.

"இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து இந்த அருமையான சிறப்பார்ந்த மன்னார் மாவட்டத்தில் அதுவும் தமிழ் மொழியினதும் இந்து சமயத்தினதும் மேன்மையை உணர்த்துகின்ற மாண்புமிகு இந்து மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்குக் கிடைத்த வாய்ப்பைப் பெருயாகக் கருதுகின்றேன். இலங்கை மண் சக்திமிக்க மண். இங்கு பூர்வீகச்சிறப்போடு வாழ்ந்துவருகின்ற தமிழ் மக்கள் ஆர்வத்துடன் எனது சொற்பொழிவினை சுவீகரிப்பதும் பொறுமையின் இலக்கணமாக அமர்ந்திருந்து கேட்பதையும் பார்க்கும் பாக்கியம் மிகந்த மன நிறைவையும் மகிழ்ச்சிப் பெருக்கையும் தருகிறது" என்ற அவருடைய கருத்து இந்து மாநாட்டு நிகழ்வுக்கு நல் மகுடம் தந்தது எனலாம்.

ஈழவளநாட்டின் முடிபோல விளங்குகின்ற துறைமுகப் பெருமைமிக்க மன்னார் மாவட்டத்தில் இவ்வாறானதொரு எழுச்சிமிகு தமிழ் இந்து மாநாட்டைக் கண்டு களித்து இன்பத் தமிழ்த் தேன் பருகக் கிடைத்த வாய்ப்பு வாழ்வில் கிடைத்த பெரும் பேறே.

இந்த மாநாட்டை இவ்வளவு சிறப்பாக நெறிப்படுத்தி பெரிய அளவில் நடத்திய மன்னார் பன்னாட்டு இந்து இளைஞர் பேரவைக்கும் மற்றும் மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலையின் இணையத்துக்கும் ஒரு சபாஷ்.



"மன்னார் மக்களின் பக்தியுணர்வையும் சைவத்தின் பாற்கொண்ட மேன்மையுறு பற்றுதலையும் வெளிப்படுத்தி நிற்கின்றது இந்த மாநாடு"







# ‘ஆரொடு நோகேன்’

## கச்சித அரங்கேற்றம்





நுண்கலைத்துறையின் சமூக நலப் பணிக்கான செயற்பாடுகளில் ஒன்றாக ‘ஆரொடு நோகேன்’ எனும் நாடகம்; கல்குடா கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் அண்மையில சந்திவெளி சித்தி விநா யகர் மகா வித்தியாலயத்தில் மேடையேற்றப்பட் டது.

குழந்தை ம.சண்முகலிங்கத்தினால் எழுதப்பட்ட இந்த நாடகம் நுண்கலைத்துறையின் தலைவர் சு.சந்திரகுமாரால் நெறியாள்கை செய்யப்பட்டு இரண்டு தடவைகள் பல்கலைக்கழக தலைமை மண் டபத்தில் மேடையேற்றப்பட்டது என்பதும் குறிப் பிடத் தக்கது.

கல்குடாக் கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப் பாளரின் வேண்டுகோளுக்கிணங்க கிழக்குப் பல்க லைக்கழக கலை கலாசார பீடாதிபதி மு.ரவியின் அனுமதியுடன் ஆசிரிய ஆலோசகர் திருமதி பிரதீஸ் பரன் பரமேஸ்வரியின் இணைப்பாக்கத்தில் தரம் 10,11 மாணவர்களுக்காக சித்தி விநாயக அதிபர் தவராசாவின் தலைமையில் ஆற்றுகை செய்யப்பட் டது.

**மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு வழிவகுத்த ‘ஆரோடு நோகேன்’**

சுமார் எட்டு பாடசாலைகளில் இருந்து நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்கள், கற்பிக்கும் ஆசி ரியர்கள் இதில் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் கற்றல் கற்பித்தலுக்கான தேர்ச் சியை கோட்பாட்டு ரீதியாகவும் செயன்முறை ரீதியாக வும் வலுப்படுத்த வழிவகுத்தது. மாணவர்கள் பார்த் தும் கேட்டும் கொண்டாடியும் மகிழ்ந்தும் ரசித்தனர். இதற்கு சு.சந்திரகுமாரின் நெறியாள்கையும் வெளிப் பாடும் அவரது நவீன பாரம்பரிய நாடக அரங்க ஆளுமையின் வீச்சும் அதனால் உருவான மாண வர்களின் நடிப்பாற்றால் விருத்தியும் வழிவகுத்தது. நாடகத்தின் ஒவ்வொரு விடயமும் நுணுக்கமாக பயிற்சியின் மூலம் நெறியாள்கை செய்யப்பட்டுள்ளது. நடிகர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரங்களைத் திறமையாக நடித்து பார்ப்போரைக் கிறங்க வைத்த னர். வடமோடி தென்மோடிக் கூத்தின் ஆட்டக் கோலங் கள் கோரஸின் ஆட்டத்தில் வெளிப்பட்டன. யதார்த்த நாடகமாகக் காணப்பட்டாலும் அதன் ஆற்றுகை வெளியில் யதார்த்த விரோத நாடகப் பாணி நாடகச் சூழமைவை வெளிப்படுத்தக் கையா ளப்பட்டது. யதார்த்த நாடகப் பாத்திரவாக்கம் நடிப்பின் போது அதற்குப் பொருத்தமான நடிப்பைக் கொண்டு வருவதாக அமைதல் வேண்டும். இதனை நெறியாள் கையும் நடிப்பும் தந்தது. நாடகத்திற்கான காட்சி விதா னிப்பு, இசை விதானிப்பு, ஒளியமைப்பு, ஒப்பனை, மேடைக் கையாள்கை, ஆட்டக் கோலங்களின் அர்த் தப்பாடு, பாடலின் உயிர்ப்பு என்பன காத்திரமாக கட் புல செவிப்புலத்தைப் பூர்த்தி செய்தது. பார்ப்போராக இருந்த மாணவர்களும் ஆசிரியர்களும் சிரித்தும், பாத்திரங்களுடன் இணைந்தும் வெறுத்தும், பரிதா பப்பட்டும், கோபப்பட்டும், உளம் நெகிழ்ந்தும் உணர்ச் சியை வெளிப்படுத்தினர். கட்டிளமைப் பருவப் பிள் ளைகள் மாணவப் பருவத்தில் கல்வி நிலை நின்று எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டதாகக் கதைக்கரு அமைந்துள்ளது.

# ஊடகவியலாளர்கள் மதிப்பளித்தல்

கல்வி அமைச்சினால் நடத்தப் பட்ட தேசிய தமிழ்த் தினவிழாவும் நாடளாவியரீதியில்சாதனைபடைத்த மாணவர்களுக்கானபரிசளிப்புவிழா வும்கடந்தவாரம் (சனி, ஞாயிறு) இரு தினங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரிவிளையாட்டுமைதானவளாகத் தில் இடம்பெற்றது.

முதல் நாள் நிகழ்வுகள் கல்வி இரா ஜாங்க அமைச்சர் வி.எஸ்.இராதா கிருஷ்ணன் தலைமையில் நடை பெற்றன. இரண்டாம்நாள்நிகழ்வுகள் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பா ளர் எஸ்.உதயகுமார் தலைமையில் நடைபெற்றன. இரண்டாம் நாள் நிகழ் வில்ஊடகவியலாளர்கள்,எழுத்தாளர் கள்விருதுவழங்கி மதிப்பளிக்கப்பட்ட னர். கல்விஅமைச்சின்வேண்டுகோ ளுக்கு அமைய வடக்கு மாகாண கல்வி அமைச்சு விருதுக்கான விண் ணப்பங்களைக்கோரிதெரிவுக்குழுக் கள் மூலம் விருதுக்குரியோர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். விருதுக்காக ஊடகத்துறையைச்சேர்ந்த 8 பேரும் ஏனையதுறைகளைச்சேர்ந்ததலா 6 பேரும்தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். ஊடகத்துறை விருதுக்கு மு.வாமதே வன், கே.அரசரத்தினம், எஸ்.தில்லை நாதன், வாஸ் கூஞ்ஞ, பி.மாணிக்க வாசகம், எஸ்.திருச்செல்வம், அருட் திரு தமிழ்நேசன் அடிகளார், எம். லாபிர் ஆகியோர்தெரிவுசெய்யப்பட்டி ருந்தனர். கல்வி இராஜாங்க அமைச் சர் விருதுகளை வழங்கினார்.









புதன்பொய்கை
புதன்கிழமை | 25 | ஒக்ரோபர் | 2017

# சூரன்போர்

## முருகப்பெருமானின் திவ்ய கடாட்சத்தால் அழிவுபெற்ற ஆணவம், கன்மம், மாயை



மதுரகவி
காரை எம்.பி.அருளானந்தனம்.

சூரபத்மன்முருகப்பெருமானுடன் போர் புரியப் புறப்பட்டான். ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் நிலைபெற்றிருந்த படைகளை ஒன்றுதிரட்டினான். அசுரப் படைகள் எண்ணிறைந்த வையாய் எங்கும் சூழ்ந்துகொண்டன. ஒப்புமையற்ற விதமாக அழிவை விழித்திருந்தன. அசுரப்படைகளின் வருகையால் எழுந்த புழுதி, சூரியனின் ஒளியையே மறைத்தது. கடல்கள் வற்றிப் போயின. தேவர்கள், இந்திரன் முதலானோர் அஞ்சி நடுங்கினர். திருமால் கலங்கினார்.

**இந்திர ஞாலத் தேரில் போர்க்களம் புகுதல்**

சூரபத்மன் நீராடி, உணவு உண்டு, புத்தாடை உடுத்தினான். சிவப்படைக்கலம் முதலிய பலவகையான படை ஆயுதங்களை ஆயிரம் கோடி தேர்களில் நிறைத்துக் கொண்டான். இந்திர ஞாலத்தேரை தன்னிடம்கொண்டு வரச்செய்தான். பலவகைச்சிறப்புகளை உடையதேரில் பெருமையுடன் ஏறி நின்றான். போர்க்களம் புகுந்தான்.

**சூரனும் முருகக் கடவுளும் போர் புரிதல்**

சூரபத்மன் வருகை முருகப் பெருமானுக்கு அறியத்தரப் பட்டது. அவரும்மனவேகத்தேரில்ஏறினார். வாயுவைத் தேரோட்டியாக்கிக் கொண்டார். மழு, குலிசம், சூலம், வேல், வாள், பரிசை, சக்கரம், தடி, எழு, வில், கணை முதலியபடைக்கலன்களைத்தரித்துநின்றார். பூதப்படைகள் அவரைச்சூழ்ந்து கொண்டன.

போர் ஆரம்பமாகியது. அசுரப் படையும், பூதப்படையும் ஒன்றோடுஒன்றுமோதிக்கொண்டன. அவற்றைமுருகக் கடவுள் பார்த்தருளினார். வில் நாண் ஒலியை எழச்செய்தார். அம்புகளைப்பொழிந்தார். அம்புகளின்பலம்கண்டு அசுரர் கூட்டமும், தேர்களும், குதிரைகளும், யானைகளும்வீழ்ந்தன. குருதிஆறுபெருக்கெடுத்தது. பிணங்கள் குவிந்தன. எல்லாப் படைகளையும் முருகப் பெருமான் அழித்தருளினார். அண்ட வாயிலை அடைந்து தமது பன்னிரண்டு திருக்கண்களின் அருள்ப்பார்வை கொண்டு உற்று நோக்கினார். பிணங்கள் எரிந்து சம்பலாகின. தேவர்கள் முருகக்கடவுளை வாழ்த்திவணங்கினர்.

சூரபத்மன் குமரக் கடவுளின் திருவிளையாடல்களைக் கண்ணுற்றான். முருகப்பெருமானை நோக்கினான், "குழந்தையே...! நான் எப்பொழுதும் அழியமாட்டேன். என்னிடம் தேவர்களும் தோற்றனர். உன்னைக் குழந்தைஎன்றுவிடமாட்டேன். உன்னையும்உன்படைகளையும் அழிப்பேன்" என்று கர்ச்சித்தான்.

சூரபத்மனுக்கும் முருகக் கடவுளுக்கும் இடையே போர் மூண்டது. அம்பு மழைகளைப் பொழிந்தனர். முருகப் பெருமானின் தேர் மீது இருந்த கொடியைச் சூரபத்மன் அறுத்தான். முருகப்பெருமானும் அவ்வாறே செய்தார். தேவர்களின்வேண்டுதலுக்கிணங்க, தீக்கடவுள் முருகப் பெருமானது தேர் மீது கோழிக் கொடியாகி உலகமே பிளவடையுமாறு கூவினான்.

**சூரபத்மனுடைய தேரை முருகக் கடவுள் அழித்தல்**

இருவருடையதேர்களும்விண்ணுலகம் சென்றன. அங்கிருந்து கொண்டே இருவரும்போர்புரிந்தனர். சூரபத்மனுடைய தேரை முருகக் கடவுள் அழித்தார். உடனேயே சூரபத்மன் இந்திர ஞானத்தேரைக் கொண்டு வரச் செய்தான். அதன்மீது ஏறிநின்று போர்புரிந்தான்.

அண்டத்தின் வாயில்களைத் திறந்துகொண்டு அசுரப் படைகள் வந்தன. முருகன் அவற்றைத்தம்முடைய கண் பார்வை கொண்டே எரித்தார். தப்பித்திருந்த படைகளைக் குமரக் கடவுள் தமது கரங்களில் இருந்த மழு, சூலம், சக்கரம் ஆகிய ஆயத மூர்த்தங்கள் கொண்டு அழித்து ஒழித்தார்.

**சூரபத்மன் மகேந்திரபுரியையவந்தடைதல்**

சூரபத்மன் ஏவிய சக்கரப் படையைப் எம்பெருமான் தமது திருக்கரங்களால் பற்றினார். சூரபத்மன் போர்க்களத்தில் தனி ஆளாக நின்றான். வேறு வேறு உலகங்களுக்கு மாய சக்தி கொண்டு மறைந்து சென்றான். குமரக் கடவுளும் சூரபத்மனை விடாது தொடர்ந்து சென்றார். போர் புரிந்தார். சூரபத்மன் எல்லா உலகங்களுக்கும் சென்று சுற்றிச் சுழன்று இறுதியில் மகேந்திரபுரியையே வந்தடைந்தான். மாயையை நினைந்து இறந்துபோன அசுரப் படைகளை உயிர்ப்பித்துத் தருமாறு வேண்டிநின்றான்.

**மாயை சூரபத்மனுக்கு அறிவுரை கூறல்**

மாயை தன் மகனுக்கு அறிவுரை கூறினாள். தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்குமாறு வேண்டினாள். இல்லாது போனால் இறப்பு நிச்சயம் நிகழும் என்பதை அறிவுறுத்தினாள். ஆனாலும் தான் சொல்வதை சூரபத்மன் ஒருபோதும் கேட்கமாட்டான் என்பதை உணர்ந்து கொண்டாள். "அமுதகீதமந்திர கூடம்" என்ற மலையைக் கொண்டுவந்தால் இறந்தவர் உயிர்பெறுவர் என்று சூரபத்மனுக்கு இதமான வார்த்தைகள் கொண்டு அறிவுரை கூறினாள்.

> நான்கு நாள்கள் போர்நடந்தது. சூரபத்மன் மும்மூர்த்தி, தேவர்கள், அசுரர்கள், இந்திரன், பூதங்கள், யமன், பேய், தீ, காற்று, கடல், நஞ்சு, பாம்பு, மேகம், இடி, இருட்டு, மலை எனப் பல உருவம் தரித்து போர்க்களம் வந்தான். தாரகன், சிங்கமுகாசுரன், பானுகோபன், அக்கினிமுகாசுரன், தருமகோபன் போன்றவர்களின் வடிவங்களையும் சூரபத்மன் தரித்து வந்தான். அத்தனை மாய உருவங்களையும் முருகப்பெருமான் அழித்தார்.

**உயிர்பெற்ற அசுர சேனைகள்**

இந்திர ஞாலத்தேர் 'அமுத கீத மந்திர கூட' மலையைக்கொண்டுவந்தது. இறந்துபோன சிங்கமுகாசுரன், பானுகோபன், அக்கினிமுகாசுரன், வச்சிரவாகு, தருமகோபன், அதிசூரன், அசுரேந்திரன், மைந்தர்கள் மூவாயிரர் என அனைவரும் உயிர்பெற்று எழுந்தனர்.

**புத்துயிர் பெற்று எழுந்தவர்கள் மீண்டும் மாய்ந்தனர்**

அசுரர்கள் மீண்டும் உயிர்பெற்றெழும் தன்மை கண்டு தேவர்கள் அஞ்சினர். முருகப் பெருமான் புன்முறுவல் பூத்தார். இறந்து எழுந்த அசுரர்கள் குமரக் கடவுளுடன் போருக்குவந்தனர். ஆனால்பாசுபதத்தால்இறந்தெழுந்த அனைவரையும் குமரக் கடவுள் கொன்று குவித்தார். இந்திர ஞாலத் தேர் கொண்டுவந்த 'அமுத கீத மந்திர கூட' மலையையும்பாசுபதாஸ்திரம்பொடிப்பொடியாக்கியது.

**நான்கு நாள்கள் இடம்பெற்ற போர்**

நான்கு நாள்கள் போர்நடந்தது. சூரபத்மன் மும்மூர்த்தி, தேவர்கள், அசுரர்கள், இந்திரன், பூதங்கள், யமன், பேய், தீ, காற்று, கடல், நஞ்சு, பாம்பு, மேகம், இடி, இருட்டு, மலை எனப் பல உருவம் தரித்து போர்க்களம் வந்தான்.

தாரகாசூரன், சிங்கமுகாசுரன், பானுகோபன், அக்கினி முகாசுரன், தருமகோபன் போன்றவர்களின் வடிவங்களையும் சூரபத்மன் தரித்து வந்தான். அத்தனை மாய உருவங்களையும் முருகப்பெருமான் அழித்தார்.

**முருக்கப் பெருமானின் அருள் ரூப தரிசனம் காணல்**

"இத்தனை மாய வடிவங்களையும் எடுத்த சூரபத்மனே, இப்போது என்னுடைய நிலையான பேருருவத்தைக் காண்பாயாக" என்று கூறி முருகக் கடவுள் விஸ்வரூப தரிசனம் கொண்டார்.

அந்தப் பேரருளின் திருவுருவத்தில் மலைகளும், கடல்களும் தெரிந்தன. இடியும் நட்சத்திரங்களும் காலடி விரல்களில் தெரிந்தன. அவ்வுருவில் வருணனும் முனிவர்களும் உடல்பரப்பினாலும் கணைக்காலிலும் இருந்தனர். வித்யாதரர் முழந்தாளிலும் இந்திரன் முத்லானோர் தொடையிலும், காலன் தொடை முலத்திலும், அசுரர்கள் அரைஇடத்திலும், தேவர்கள் விலாப்புறத்திலும், நாகர்கள் மூலாதாரத்திலும், அமுதம் குறியிலும், உயிர்க் கட்டம் கொப்புழிலும், உலகங்கள் மயிலிலும், திருமால் நான்முகன் தோள்களிலும், தெய்வப் பெண்கள் கைவிரல்களிலும், வேதங்கள் திருவாயிலும் நின்று அருள் ஒளி சிந்தத் திகழ்ந்தன.



# ‘மேக்னடைட்’


## வாகனப் புகையில் இருந்து மூளையைத் தாக்கும் துகள்

நகரங்களின் நுண்ணிய வாகன மாசுத்துகள்கள் மூளைக்குள் செல்வதாகவும் மூளையில் ஏற்படும் 'அல்சைமர்ஸ்' நோய்க்கான காரணிகளில் ஒன்றாக அது இருக்கலாம் என்றும் புதிய ஆய்வின் முடிவுகள் தகவல் தெரிவிக்கின்றன. ஐக்கிய இராச்சிய விஞ்ஞானிகள் மேற்கொண்ட இந்த ஆய்வின் முடிவுகள் நகரவாழ்வின் சுகாதார ஆபத்துக்கள் குறித்த புதிய கேள்விகளை எழுப்பியுள்ளன.

வாகனப் புகையால் மூச்சுத்திணறல், இதயநோய், அகால மரணம் போன்றவை ஏற்படும் என்பது நாம் அறிந்த விடயங்களே.

தற்போதைய இந்த புதிய ஆய்வு, வாகனப்புகை மூளைக்குள் சென்று பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்ற சாத்தியத்தை கண்டுபிடித்திருக்கிறது.

சாதாரண கண்களுக்குப் புலப்படாத சின்னஞ்சிறு இரும்புத்துகள்கள் மூளையில் படிந்திருப்பதை இந்த ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஒருகிராம் மனித மூளைத்திசுவில் மில்லியன் கணக்கில் இவை படிந்திருக்கின்றன. எனவே மூளைக் கலங்களுக்கும் மூளைக்கும் சேதம் ஏற்படுவதற்கு மில்லியன் கணக்கான சாத்தியங்கள் இருக்கின்றன என்கிறார்கள் இந்த ஆய்வாளர்கள்.




இந்தத் துகள்கள் 'மேக்னடைட்' என்று அறியப்படுகின்றன.

வாகனப்புகையில் இருக்கும் மாசின் பெரிய துகள்கள் மூக்குவழியாக உள்வாங்கப்படும். அவற்றில் சிறியவை நுரையீரல் மூலம் குருதியினுள் நுழையும். அதனிலும் சிறியவை, மூக்கை மூளையுடன் இணைக்கும் நரம்புகள் மூலம் ஊடுருவி மூளைக்குள் செல்வதாக இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

மூளைக் கலங்களுக்கு இடையிலான தொடர்பாடலை தடுக்கும் பாசி அல்லது மாசு மூளைக்குள் வளர இந்த 'மேக்னடைட்' துகள்கள் தூண்டுகோலாக இருக்கலாம் என்றும் மூளையை பாதிக்கும் 'அல்சைமர்ஸ்' போன்ற நோய்கள் உருவாக இவையும் ஒரு காரணியாக அமையலாம் என்றும் கருதப்படுகிறது.

ஆனாலும் இது ஆரம்பகட்ட ஆய்வு மட்டுமே. இந்த 'மேக்னடைட்' துகள்களுக்கும் 'அல்சைமர்ஸ்' நோய்க்கும் நேரடித்தொடர்பு இருக்கிறதா என்கிற கேள்விக்கான தெளிவான பதில் இந்த ஆய்வில் கிடைக்கவில்லை. அதேசமயம், வாகன நெரிசலுக்கும் மனித மூளை மாசடைதலுக்கும் இடையிலான தொடர்பு குறித்து ஆய்வு செய்வதற்கான தொடக்கமாக இந்த முடிவுகள் பார்க்கப்படுகின்றன.

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணம் கொழும்பு ஆகிய இடங்களில் இயங்கும் வியாபார நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை.
**உணவு, தங்குமிடம் இலவசம்.**
**ஆண்கள் மட்டும்.**
**0717667715** (10)

**வீடு வாடகைக்கு**

யாழ் சுண்டுக்குளிப் பகுதியை அண்மித்த இடத்தில் அதி சொகுசு. நவீன முறையில் அமைக்கப்பட்ட ஆடம்பர வீடு வாடகைக்கு உண்டு. வாகன தரிப்பிடம் உண்டு. Foreign NGOs மட்டும் தொடர்பு கொள்ளவும்.
**தொடர்பு :- 077 135 0082**

**தேவை**

யாழ் நகரிலுள்ள Restaurant இற்கு சமையல் துறையில் (Hotel துறையில்) அனுபவமுள்ளவர்கள் தேவை. சாப்பாடு பரிமாறுபவர்கள், சைனீஸ் உணவு தயாரிப்பவர்கள் Rotti makers, Delivery Boys, சமையல் துறைக்கு தேவையான உதவியாளர்கள் (ஆண்கள், பெண்கள்).சமையல் துறையில் அனுவமுள்ள பெண்கள் தேவை.
**தொடர்பு :- 077 2017 824**
**077 085 6412**

**முதல் முறையாக நெய்யுடன் போத்தலில் அடைக்கப்பட்ட விளக்கேற்றும் றோயல் நெய் விளக்கு**

நெய் விளக்கு ஏற்றினால் சகல செல்வமும் குடும்ப மகிழ்ச்சியும் பெருகி குலம் தழைக்கும் என்பதும்,. மண்ணினால் செய்த விளக்கில் தீபம் ஏற்றினால் வீரிய விருத்தி அளிக்கும் என்பதும் எமது இந்து சமயத்தின் ஐதீகம்.
உங்கள் வாழ்வில் சகல நலனும் பெருகிட இதோ உங்களிற்காக "**போத்தலில் அடைக்கப்பட்ட சுத்தமான விளக்கேற்றும் நெய்யுடன்**" றோயல் நெய் விளக்கினை மகிழ்ச்சியுடன் அறிமுகம் செய்கின்றோம்.
**Packed by :**
**Royal Industry®**
**Colombo - 13**
உங்கள் நலன் Royal எமது நோக்கம்
சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப்பூங்கா®
இல. 288 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 2567

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**அகில இலங்கை சமாதான நீதிவானாக**
**சந்திரமோகன் கிஷாந் அவர்கள் நியமனம்**



வடக்கு மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், பிளாக் வீதி, சங்கானையைச் சேர்ந்த **சந்திரமோகன் கிஷாந்** அவர்கள் **நேற்று (24.10.2017) செவ்வாய்க்கிழமை** யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி **ஜெ.கஜநிதிபாலன்** அவர்கள் முன்னிலையில் **அகில இலங்கை சமாதான நீதிவானாக** சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

திரு.திருமதி சந்திரமோகன் பாலராணி தம்பதிகளின் ஏக புதல்வராகிய இவர் தனது ஆரம்பக் கல்வியை தி/விக்னேஸ்வரா மகா வித்தியாலத்திலும் பின்னர் ஆண்டு 4 தொடக்கம் உயர்தரம் வரை தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்றதுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் விஞ்ஞான இளமானி (கௌரவ) சிறப்புப் பட்டதாரியும் ஆவார்.

இவர் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அகில இலங்கை ரீதியான பதிவாளர் சேவை III / II இற்கு தெரிவு செய்யப்பட்டு மேலதிக காணிப்பதிவாளர் மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளராக முதல் நியமனம் பெற்று கிளிநொச்சி மாவட்டச் செயலக காணி மாவட்டப் பதிவகத்தில் கடந்த 4 வருடங்களுக்கு மேலாக அந்த மாவட்ட மக்களுக்கு அயராத அரச சேவையை வழங்கி வருகிறார்.

இவரது அர்ப்பணிப்புடனான மக்கள் சேவையை கௌரவிக்கும் வகையில் கௌரவ நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச அவர்களினால் அகில இலங்கை சமாதான நீதிவான் நியமனம் 20.06.2017 ஆம் திகதி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. எமது அலுவலகத்தின் பதவிநிலை அலுவலரான சந்திரமோகன் கிஷாந் அவர்களுக்கு அகில இலங்கை சமாதான நீதிவான் நியமனம் கிடைத்தமையையிட்டு மனமகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-** காணி மாவட்டப் பதிவக உத்தியோகத்தர்கள்,
காணி மாவட்டப் பதிவகம், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.

**பணியாளர் தேவை**

அனுபவம் உள்ள காசாளர் (Cashier) தேவை.
எல்லா விதமான வேலைகளும் செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
ஆர்வமுள்ளவர்கள் நேரில் சமுகமளிக்கவும்.
நிர்வாகி.
**All Ceylon Distributor**
No:212 & 214, K.K.S. Road, Jaffna. (10)

**காணவில்லை**

Brown Colour பொம்மேரியன் நாய்க்குட்டியை உரும்பிராயில் 20.10.2017 வெள்ளிக்கிழமையில் இருந்து காணவில்லை தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**தொடர்பு :- 076 575 7067**

**துயர் பகிர்வு**

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியையான **திருமதி சகிலா மயூரன்** அவர்களின் தந்தையார்
**நாகலிங்கம் நாகராசா**
18.10.2017 அன்று இறைபதமடைந்தார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
**யாழ் கல்விவலய**
**இசையாசிரியர் கழகம்** (10)

**பணிப்பெண் தேவை**

கொக்குவில் வீட்டில் வீட்டு வேலை செய்ய 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
**தொடர்பு :- 077 187 7754**

**மணமகன் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1986 இல் பிறந்த கார்த்திகை நட்சத்திரம் கிரகபாவம் 52 1/4 லக்கினத்தில் சனி அரச உத்தியோகத்தில் உள்ள மணமகளுக்கு தகுந்த மணமகனை எதிர்பார்க்கிறோம்.
**Viber No :- 076 534 1294**

**தவறிவிட்டது**

தியாகராசா இராஜேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை மற்றும் பேர்ஸ் (195534001992) கொக்குவில் கிழக்குக்கும் வீரசிங்கம் மண்டபத்துக்கும் இடையில் 17.10.2017 அன்று தொலைந்துவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**077 948 5557, 021 221 2019**
**கண்டெடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

**விநியோகத்தர்கள் தேவை** (Distributor)

போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் (**19l**) உட்பட சகல பிரதேசங்களுக்கும் விநியோகத்தர்கள் தேவை உடன் தொடர்பு கொள்ளவும்.
- **19l** போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் வீடுகள், அலுவலகங்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்படும்.
- **19l** வெற்றுக்கான் விலைக்கு வாங்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்.
**T.P :- 077 553 4437**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க.த. பாடசாலை ஊடாகத் தோற்றி **ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் 180 புள்ளிகளைப்** பெற்று **பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தையும், யாழ்.மாவட்ட ரீதியாக 61 ஆவது இடத்தையும்** பெற்ற
**கிருஸ்ணகுமார் பிருதிவி**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் கல்வியில் சிறந்து விளங்கிப் பட்டங்கள் பல பெறவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.




**அன்புடன் வாழ்த்துவோர்:-**
அப்பா, அம்மா,
அப்பப்பா, அப்பம்மா,
மாமன், மாமிமார்,
சித்தப்பா, சித்திமார்
ப.பாஸ்கரநாதன் (மாமா)
நிஷா ஐஸ்கிறீம் , முருங்கன்பிட்டி, முருங்கன், மன்னார்.

**CANADA , USA**
**study & work visa**
**Minimum Qualification O/L**
- VISA Consulting and Online form filling.
- குறைந்த செலவில். விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
**செல்ல வழிகாட்டல்**

**Royal Visa Consultants & Education Service**
No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com
Haarini : 011 232 3975
Office : 077 721 6291

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா /செட்டியார் தெரு மெ.மி.த.க பாடசாலை ஊடாகத் தோற்றி ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்ற
**சந்திரசேகரன் கோபிநாத்**
அவர்கள் இப்பரீட்சையில் சித்தியெய்தியமையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் கல்வியில் சிறந்து விளங்கி பட்டங்கள் பல பெறவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
Best Wishes
**அன்புடன் வாழ்த்துவோர்:**
அப்பப்பா, அப்பம்மா.
அத்தை, மச்சான்மார், மச்சாள்மார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 25.09.2017 திங்கட் கிழமை அமரத்துவம் அடைந்த

**கந்தையா செட்டியார் கிருஷ்ணமூர்த்தி**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வுகள் 25.10.2017 புதன் கிழமை நணபகல் 12 மணியளவில் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தியாகி அறக்கொடை ( TCT ) சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

155, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 33 ஆம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம்
11
.
04
.
1972



மறைவு
25
.
10
.
1984

**செல்வி நிமாலினி வீரசிங்கம் (பாப்பா)**

அன்பு மகளே! உன்னை இழந்து
இன்றுடன் 33 வருடங்கள்
ஆகியும் நேற்று நடந்தது
போல் எம் மனம் வேதனையில்
தவிக்குதம்மா மகளே முழு நிலவாக
எமை சுற்றி சுற்றி வந்தாய்
நீ அரும்பாகி மொட்டாகி மலர்ந்த
வேளையில் கண் இமைக்கும் நேரத்தில்
பறித்து விட்டான் எம்மை தவிக்கவிட்டு
எங்கு சென்றாய் அம்மா!

எங்கள் உயிர் உள்ளவரை
உன் நினைவுகள் அழிவதில்லை

34/1, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

பாசமுள்ள அப்பா, அம்மா, தம்பிமார்,
தங்கைமார்

## மரண அறிவித்தல்

**திருமதி சிவதாசன் லோகேஸ்வரி (பபா)**



யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவதாசன் லோகேஸ்வரி கடந்த 21.10.2017 சனிக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜதுரை (முன்னாள் பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) - சிவயோகம் (கிளி) தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான குகதாசன் - சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகளும் குகதாசன் சிவதாசனின் (முகாமைத்துவ உதவியாளர் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார சங்கம்) அன்பு மனைவியும் நிலக்ஷனின் பாசமிகு தாயாரும் ரஞ்சிதமலர்(லண்டன்), இரட்னேஸ்வரன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ் பிள்ளையார் இன் உரிமையாளர்), செந்தமிழ்ச்செல்வி (லண்டன்) காலஞ்சென்ற சாந்தநாயகி மற்றும் வதனி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகராஜா(லண்டன்), அமுதினி(இலங்கை), தனஞ்செயன் (லண்டன்), ரட்னசோதி(லண்டன்), சட்குனேஸ்வரன்(கனடா), கமலதாசன் காலஞ்சென்ற ஈசன் மற்றும் விமலதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கமலாதேவி, கலாவதி, சத்தியவதி ஆகியோரின் சகோதரியும் ஜனனி, ஆரனி(லண்டன்), ரிஷிகேஷன், ஆரனி(இலங்கை) ஆகியோரின் சித்தியும் சர்மிளா, பவனா, நிஷா, சிவகாமி, அபிராமி, ராகவன், ஜதிகா, யாதவன், கம்சிகா, பிரியங்கா, விபூஷ்னா, உரேஷ், ஸ்ரீகணன், யதுகுலன் ஆகியோரின் பெரியதாயும் பிரியங்கா, மயூரிப்பிரியா, காவியன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (இல 368, உஸ்மானியார் கொலேஜ் வீதி, ஓட்டுமடம்) இல் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குகதாசன் சிவதாசன் (கணவர்) - 077 658 9443**
**இ.இரட்னேஸ்வரன் (சகோதரன்) - 077 722 2715**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்வன்

**ஆனந்தகுமார் ஜெயபிரகாஷ்**

(பிரகாஷ்)

(2016 தரம் - 9 மாணவன், யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி)

திதி : ஐப்பசி ஷஷ்டி
(25.10.2017) புதன்கிழமை



தாயின் மடியில் 08.11.2002
கந்தன் அடியில் 05.11.2016

எங்கள் குலம் செழிக்க வந்த செல்வமகனே!
எங்கள் கனவுகள் பகல் கனவாய் போனதடா!
நீர் எம்மைவிட்டு பிரிந்து ஓராண்டு
சென்றாலும் நீங்காத நினைவாய் என்றும்
எம் உள்ளத்தில் உள்ளாய் பிரகாஷ்!
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உன் நினைவுகளுடன் அப்பா, அம்மா, தம்பி, தங்கை

இராஜ வீதி, சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

தகவல் : தந்தை (ஆனந்தன்)

## கண்ணீர் அஞ்சலி

19.10.2017 அன்று இறைவனடி சேர்ந்த
எமது புற்றுநோயாளர் காப்பக நிர்வாக அங்கத்தவரும்
முன்னாள் நிர்வாக செயலாளருமான **வைத்திய கலாநிதி
கிருஷாந்தி இராஜசூரியர்** அவர்களின்
அன்புத்தாயார்

**திருமதி ஏஞ்சலா இராஜசூரியர்**

அவர்களது திடீர் மறைவுச் செய்தி எம்மை ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.**
**கேன் புற்றுநோயாளர் காப்பகம்**

## விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கைகொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - (யோவான் 11:25)

அமரர்
**றொசாறியோ வயலற் அந்தோனிப்பிள்ளை**

அன்னையின்
அணைப்பில்
08.12.1933



ஆண்டவனின்
அழைப்பில்
25.10.2015

கண்ணாக கருத்தாக அருகிருந்து காத்தீர் - நாம்
பண்பாக சிறப்பாக வாழ வகை செய்தீர்
மண்ணக ஓட்டத்தினை மாண்புடனே முடித்தீர்
விண்ணக பரிசுதனை பெற்று நீடுவாழ்வீர்!

என்றும் உங்கள் நினைவில்

பத்திமா மாதா கோயிலடி, பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**திருமதி அன்னம்மா தர்மலிங்கம்**



காரைநகர், களபூமி, பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும், திக்கரையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா தர்மலிங்கம் 21.10.2017 சனிக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி (ஆசிரியர்) - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறு முகம் - சின்னக்குட்டி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்றவரான தர்மலிங்கம் (ஆங்கில ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், இந்திரா (காரைநகர்), சிவயோகம் (லண்டன்), அம்பிகைபாகன் (லண்டன்), திருச்செல்வம் (கனடா), தவயோகம் (காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலேந்திரா, ஜெயசீலன், பாலேஸ்வரி, திருமகள், கணேசராசா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, நேசம்மா, கதிரவேற்பிள்ளை, ஆலாலசுந்தரம், தியாகராசா மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி, செல்லையா, கனகசபை, பொன்னம்மா, செல்லம்மா மற்றும் பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், துசிந்தன், சுகிந்தன், துவாரகன், கரிசன், சஜீவன், ஸ்ரீராம், சக்திராம், ஹரிராம், வினோத், ராம், மோகனதாசன், குலமதி, சிவராஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2017) வியாழக் கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திக்கரை, களபூமி,
காரைநகர்.


தகவல்:
குடும்பத்தினர்.


# கப்பல் பறவை

## ஓய்வின்றிய இயற்கையின் அசைவியக்கப் பிறவி

பறவைகள் பறப்பதே ஓர் அதிசயம். அப்படியெனில் சிறகடித்துக்கொள்ளாமல் கடல்களையே கடக்கின்ற 'கப்பல் பறவை' (frigate birds) அதிசயமானமன்றோ. 'கப்பல் கூழைக்கடா', 'கடற்கொள்ளைப் பறவை' போன்ற பெயர்களிலும் அழைக்கப்படும் இந்தப் பறவையைப் பற்றிய வியக்க வைக்கும் புதிய தகவல்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் ஆய்வாளர்கள்.

உணவின்றி, தண்ணீரின்றி, ஓய்வு உறக்கமின்றி, தரையிறங்காமல் தொடர்ந்து 400 கிலோ மீற்றர்கள் தூரம் வரையிலும் பயணிக்கக்கூடியவை என்று உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். காரணம், இதன் இறகுகள் நீர் ஒட்டும் தன்மையைக் கொண்டவை. எனவே, வாத்துபோலத் தண்ணீரில் மிதந்து ஓய்வெடுக்கவோ, முக்குளிப்பான் போலத் தண்ணீரில் மூழ்கி மீனைப் பிடிக்கவோ 'இதனால் முடிவதில்லை.



மடகாஸ்கர் பகுதியில் வாழும் கப்பல் பறவைகள் சிலவற்றைப் பிடித்து, அதில் உணர்வுக் கருவிகளைப் பொருத்தினார்கள் 'வெய்மர்ஸ்க்ரிச்' தலைமையிலான ஆய்வாளர்கள். இப்பறவை எப்படி இரை எடுக்கிறது, எவ்வளவு வேகத்தில் பறக்கிறது, எத்தனை முறை இறகை அசைக்கிறது, எவ்வளவு தூரம் செல்கிறது போன்ற விடயங்கள் மட்டுமின்றி, இதயத்துடிப்பு, இறக்கை அசைப்பு உள்ளிட்டவற்றையும் நுட்பமாக ஆராய்ந்தார்கள்.

வானில் அண்ணளவாக 400 முதல் ஆயிரம் மீற்றர் உயரத்தில் உள்ள மிகமிக அடர்த்தியான மேகக் கூட்டத்துக்குப் பெயர்தான் 'குமுலஸ்'. விமான ஓட்டிகளுக்கே இவை சவால் விடுபவை. பார்ப்பதற்குப் பஞ்சு போலத் தெரிந்தாலும் இந்த வகை மேகத்துக்குள் காற்று மேல் நோக்கிச் சென்றபடி விசைவுற்றிருக்கும் இருக்கும். இதற்குள் விமானம் சென்றுவிட்டால், விமானம் திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்து மேல் நோக்கிச் செல்லும். அடுத்த நொடியே திடீரெனக் கீழே இறங்கும். நான்குவழிச் சாலையில் வேகமாகச் சென்றுகொண்டிருக்கும் வாகனம், திடீரென மாட்டு வண்டிப் பாதைக்கு மாறியது போலக் குலுங்கும். இதனால் பொதுவாக ஆபத்து எதுவும் நிகழ்வதில்லை என்றாலும், விமானத்தில் பயணம் செய்யும் பாதிப் பேருக்கு வாந்தி மயக்கம்கூட ஏற்படும். பல ஆயிரம் கிலோ நிறையுள்ள விமானத்தையே அதிர வைக்கும் இந்த மேகத்துக்குள் புகுந்து சடுகுடு ஆடுகிறது கப்பல் பறவை.



மேகத்துக்குள் புகுந்து, அங்கே வீசுகின்ற மேல் நோக்கிய காற்றின் உதவியால் காகிதம் போல மேலெழுந்து செல்கிறது கப்பல் பறவை. பின்பு 'கிளைடர்' போல இலாவகமாக காற்றில் மிதந்தபடி கீழ்நோக்கிவருகிறது. நிலத்துக்கு அருகே வந்த பிறகுதான் சிறகை அசைத்துப் பறக்கிறது. ஆக, உயரச் செல்லவும் நெடுந் தூரம் செல்லவும் எந்தவித ஆற்றலையும் பயன்படுத்தாமல் ஆற்றலைச் சிக்கனப்படுத்துகிறது இந்தப் பறவை.

"இவை கடலுக்கு மேலே தாழ்வாகப் பறந்தபடி மீனைப் பிடித்து உண்கின்றன. வழியில் கடற்பாறை கிடைத்தால் ஓய்வெடுக்கவும் செய்கின்றன. வழியில் உணவோ, ஓய்விடமோ கிடைக்காவிட்டாலும்கூட இவை கவலைப்படுவதில்லை. இருந்த போதிலும் கப்பல் பறவைகள் எப்படித் தூங்குகின்றன என்பதுதான் இனனமும் புரியாத புதிராக இருக்கிறது" என்கின்றனர் ஆய்வாளர்கள்.

# கடலடியில் அதிக ஐதரசன் வாயு

புவித் தகடுகள் நகருவதால் கடலுக்கடியில் உருவாகும் மலைப் பகுதியில் அதிகளவில் ஐதரசன் வாயு நிறைந்திருக்கலாம் என்று அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது. அந்த நாட்டின் 'டியூக்' பல்கலைக்கழகத்தில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆழ்கடலடிப் பகுதிகளில் புவித்தகடுகள் நகரும் பகுதிகள் இதுவரை மேலோட்டமாகவே ஆய்வு செய்யப்பட்ட நிலையில், அந்தப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ள புதிய ஆய்வு முறை மூலம் ஐதரசன் வாயு இருப்பை துல்லியமாக கணிக்க முடிவதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து இந்த ஆய்வில் பங்கேற்ற நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது;



"புவித் தகடுகள் வேகமாக நகர்வதால் கடலுக்கடியில் உருவாகும் மலைப் பகுதிகளில் எவ்வளவு ஐதரசன் வாயு உற்பத்தியாகும் என்பதை எங்களது புதிய ஆய்வு முறை மூலம் தெரிந்து கொள்ள முடியும். அந்த முறையைக் கொண்டு ஆய்வு செய்ததில், கண்டங்களுக்கு அடியில் உருவாகும் ஐதரசன் வாயு அளவைவிட கடலடியில் பன்மடங்கு அதிகமாக ஐதரசன் வாயு உருவாகிறது என்பதைக் கண்டறிந்துள்ளோம். இதன்மூலம், ஐதரசன் வாயுவை அதிக அளவில் பெற முடியும்" என்று தெரிவித்தனர். சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் பெற்றோலிய எரிபொருள் களுக்கு ஐதரசன் வாயு மிகச் சிறந்த மாற்று என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வாயுவை எரித்த பிறகு நீராவி மட்டுமே வெளியேறும்.

எனினும் வாகனங்களில் ஐதரசன் வாயுவைப் பரவலாகப் பயன்படுத்தும் அளவில் அவை கிடைப்பதில்லை. இந்தச் சூழலில் 'டியூக்' பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வானது ஐதரசன் வாயுவை அதிக அளவில் எரிபொருளாகப் பயன்படுத்தி சுற்றுசூழலைப் பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

**காணவில்லை**



**இரவீந்திரா அனுதரன் (வயது - 23)**
**தே.அ.இல:-** 941604200V
இல.92, மல்லாவி. கொல்லவிளாங்குளம், வவுனிக் குளத்தைச் சேர்ந்த இரவீந்திரா அனுதரன் வயது 23 கடந்த 18.10.2017 தீபாவளித் தினத்தன்று காணாமல் போயுள்ளார். இவர் காணாமல் போகும் போது இறுதியாக கட்டம்போட்ட சேர்ட்டும், கறுப்பு நிற நீளக்காற் சட்டையும் அணிந்திருந்தார். சாதாரண உடல்கட்டுடைய தோற்றத்தைக் கொண்டவர். இவர் பற்றிய தகவல் தெரிந்தாலோ அல்லது நேரடியாகப் பார்த்தாலோ கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
**(காணாமல் போனது தொடர்பான பொலிஸ் முறைப்பாடு மல்லாவி பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது)**
**077 567 2120 -இரவீந்திரா தேவகி (தாய்)**

**22 ஆம் ஆண்டு ஈரவிழிகளுடன்**



**அமரர் வீரகத்தி ஜெயறூபன் (றூபன்)**
தோற்றம் 09.08.1972
மறைவு 29.10.1995
திதி: சஷ்டி (25.10.2017)

அன்பான உள்ளத்தவனே! பண்பான வார்த்தைகளை
பகிர்ந்து கொள்பவனே! பார்போற்ற வாழ்ந்தவனே!
பாசமழை பொழிந்தவனே உறவுக்காக உயிர் கொடுக்கும்
உத்தமனே நீ எங்கு சென்றாயப்பா?
இரக்கம் இல்லா அரக்கன் உன்னை
கவர்ந்து சென்றதேனோ?
எம்விழி உன்னை எங்கும் தேடுகிறது.
மீண்டும் ஒருமுறை வந்துதிக்க மாட்டாயா?
உன் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

சிவன்கோயில் வீதி,
எழுதுமட்டுவாழ்.
**குடும்பத்தினர்.**

**கண்ணீருடன் கூடிய ஈராண்டு நினைவலைகள்**



**மகேந்திரராசா கௌரிசங்கர்**
தோற்றம் 28.08.1983
மறைவு 17.11.2015

பார் எல்லாம் போற்ற பாரினிலே நீண்ட நாள் வாழ்வாய் என்று எம் நினைவு கனவாகி ஈராண்டு ஆனதடா இருள் சூழ்ந்த இவ்வுலகில் எம்மை விட்டு ஒளியாய் மறைந்த எம் அன்பு மகனே சங்கர்! நீ இருந்தவேளை நாம் பெற்ற இன்பத்துக்கு நிகர் இல்லை என் செல்வமே! உன் அழகான வதனத்தை எப்போ காண்போம்? உன்னைப் பிரிந்து வாழும் வாழ்க்கை நரகமாய் இருக்கிறதே மகனே. நீ சென்ற நாள் முதலாய் எப்போ வருவாய் என்ற நம்பிக்கையில் காத்திருக்கும் உன் தந்தையின் நிலையை எண்ணிப்பார் மகனே! பிறப்பும் இறப்பும் இயற்கை நியதி என்பது படிப்பதற்கு உண்மை. என்றாலும் அதை ஜீரணிக்க சக்தி இல்லை எனது அருமை மகனே! எண்ணிப்பார்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, உற்றார், உறவினர்

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் 2018 ஆம் ஆண்டுக்கான கேள்விஅறிவித்தல்

**நல்லூர் பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள்,- என்பவற்றை 2018 ஆம் ஆண்டு தைமாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்கழி 31ஆம் திகதிவரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.**

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 08.11.2017 ஆம் திகதிபுதன்கிழமைநண்பகல் 12.00
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 08.11.2017 ஆம் திகதிபுதன்கிழமைபிற்பகல் 2.00
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 08.11.2017 ஆம் திகதிபுதன்கிழமைபிற்பகல் 3.00
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- நல்லூர் பிரதேச சபை தலைமைஅலுவலகம்.

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு. மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை **செயலாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி,கொக்குவில் கிழக்கு,கொக்குவில்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுதபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு. பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும். மீளளிக்கப்படக் கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டுவருதல் வேண்டும்.
3. கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த. தனிப்பட்டவர்கள் **திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை** என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவிரும்பின். ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500,000.00 இற்கும் ரூபா 200,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. எந்தவொருகேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்குப் பூரண அதிகாரம் உண்டு.
5. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
6. கேள்விதிறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோஅல்லதுஅவரதுபிரதிநிதியோசமூகமளிக்கலாம்.
7. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 01.12.2017 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளவேண்டும்.
8. கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


### 2018 ஆம் ஆண்டுக்கு சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள் (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப் படாதகேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்விவைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடியஆகக்குறைந்த தொகை (வற்வரிதவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 23,650,770.00 |
| 2. | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 661,100.00 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 500.00 | 5,000.00 | 148,500.00 |
| 4 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 500.00 | 5,000.00 | 180,584.00 |
| | **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1. | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 10,000.00 | 1,137,400.00 |
| 2. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 782,210.00 |
| 3 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 183,150.00 |
| 4 | கொக்குவில் உப அலுவலகஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 506,000.00 |
| 5 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 1,106,875.00 |
| 6 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 760,210.00 |
| 7 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக்கடை இல 01 | 500.00 | 5,000.00 | 158,000.00 |
| 8 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக்கடை இல 02 | 500.00 | 5,000.00 | 158,000.00 |

**திரு சு.சுதர்ஜன்,**
**செயலாளர்,**

**நல்லூர் பிரதேச சபை,**
**திருநெல்வேலி.**
**25.10.2017**

கல்லு வைச்ச மோதிரம்



பணக்காரங்களைப் பார்த்துக் கூட வராத பொறாமை



படுத்த உடனே தூங்குறவங்களை பார்த்தா வருது....

நண்பனிடம் பைக் கேக்கும் போது முடியாது என்ற வார்த்தையை விட




''பெற்றோல் இல்ல மச்சான்'' என்ற வார்த்தைதான் அதிகமாக வரும்.

## சினிமா



# கோலி சோடா -2 திரைப்படத்தில் கவுதம் மேனன்

விஜய் மில்டன் இயக்கத்தில் உருவாகி வரும் 'கோலி சோடா -2' படத்தில் இயக்குநர் கவுதம் மேனன் நடித்துள்ளார். இவரின் வருகை படத்தை மேலும் வலுவாக்கியுள்ளது என்று பெருமைப்பட்டுள்ளார் இயக்குநர் விஜய் மில்டன்.

'கோலி சோடா -2' படத்தின் இறுதிக்கட்டப் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இந்தப் படத்தில் இயக்குநர் கவுதம் வாசுதேவ மேனன் ஒரு சிறப்புத் தோற்றத்தில் நடிப்பது உறுதியாகி உள்ளது. இது தொடர்பில் விஜய் மில்டன், ''இந்தக் கதையை நான் எழுதும் பொழுதே சிறப்புத் தோற்றத்தில் கவுதம் வாசுதேவ மேனன் நடித்தால் மேலும் சிறப்பாகவும் பொருத்தமாகவும் இருக்கும் என நினைத்தேன். நான் அவரை அணுகி எனது விருப்பத்தைத் தெரிவித்த போது எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் மேனன் ஒப்புக்கொண்டார். அவர் நடிக்க ஒப்புக்கொண்டதில் எங்களுக்கு பெரும் மகிழ்ச்சி. படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு நடந்துவருகிறது. நான் நினைத்ததை விட 'கோலி சோடா-2' சிறப்பாக உருவாகி வருகிறது" என மில்டன் மேலும் தெரிவித்தார்.

சிரிப்பினில் உதிரும் வார்த்தைகளை விட, வலியினில் உதிரும் வார்த்தைகள் வலிமைமிக்கவை!

சிலர் சூரியனை எழுப்புகிறார்கள், பலரை சூரியன்தான் எழுப்புகிறது!

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். இரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உடல் நலம் பாதிக்கும்.

**இடபம்:** மூத்த சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சு வெற்றியடையும். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். வாகனத்தைச் சரி செய்வீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரம் செழிக்கும்.

**கடகம்:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். அக்கம்பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**சிங்கம்:** எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.

**கன்னி:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும்.

**துலாம்:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வர வேண்டிய பணம் கைக்கு வரும்.

**விருச்சிகம்:** அலைச்சலும், சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** குடும்பத்தினருடன் விவாதங்கள் வந்து போகும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள்.

**மகரம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெற்று மகிழ்வீர்கள். பெண்கள் புத்தாடை நகை வாங்க யோகம் உண்டு. பிள்ளைகளின் செயல்பாடு பெருமையளிக்கும்.

**கும்பம்:** வழக்கத்துக்கு மாறாக பணிச்சுமை அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். நண்பரால் உதவி உண்டு.

**மீனம்:** பிறருக்காகதகுதி மீறிய வாக்குறுதி வழங்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சராசரி அளவில் இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு எகிறும்.



சில பிரச்சினைகள் பேசினால் தான் தீரும்!!

சில பிரச்சினைகள் பேசாமல் விட்டால் தீரும்!!!

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | | | 8 | | |
| | | 9 | | | 5 | 7 | 2 | |
| | | 4 | | 6 | | | | 1 |
| 3 | | | | 4 | 7 | 1 | | |
| | | | | | | | | |
| | | 2 | 5 | 8 | | | | 6 |
| 8 | | | | 3 | | 2 | | |
| | 2 | 3 | 9 | | | 6 | | |
| | | 5 | | | | | 3 | |

### நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 4 | 9 | 5 | 7 | 2 | 6 | 1 |
| 1 | 9 | 7 | 8 | 2 | 6 | 3 | 4 | 5 |
| 2 | 5 | 6 | 1 | 3 | 4 | 9 | 7 | 8 |
| 9 | 1 | 2 | 6 | 8 | 3 | 4 | 5 | 7 |
| 4 | 7 | 5 | 2 | 1 | 9 | 6 | 8 | 3 |
| 6 | 8 | 3 | 7 | 4 | 5 | 1 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 4 | 7 | 1 | 8 | 3 | 6 |
| 3 | 4 | 1 | 5 | 6 | 8 | 7 | 9 | 2 |
| 7 | 6 | 8 | 3 | 9 | 2 | 5 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

# படித்ததில் ரசித்தது

தையற்காரர் ஒருவர் ,தனது கடையில் துணிகளைத் தைத்துக் கொண்டிருந்தார்.

அவருடைய மகன் அருகில் இருந்து, அவர் வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தையற்காரர் ஒரு புதுத் துணியை எடுத்தார். அதை அழகிய கத்திரிக்கோலால் துண்டுகளாக வெட்டினார்.

பின்னர் கத்திரிக்கோலைக் காலின் அருகே போட்டுவிட்டுத் துணியைத் தைக்கலானார்.

துணியைத் தைத்து முடித்ததும் சிறிய ஊசியை எடுத்துத் தனது தலையில் இருந்த தொப்பியில் குத்திப் பத்திரப்படுத்தினார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த மகன் அவரிடம் , "அப்பா ! கத்திரிக்கோல் விலை உயர்ந்தது, அழகானது. அதை அலட்சியமாக காலடியில் போடுகிறீர்கள். ஊசி சிறியது ... மலிவானது. ஆனால், அதை தலையில் பாதுகாக்கிறீர்களே. அது ஏன்...? என்று கேட்டான்.

"நீ சொல்வது உண்மைதான் என்றார் தையற்காரர் . "கத்திரிகோல் அழகாகவும் ... மதிப்புள்ளதாகவும் இருந்தாலும் , அதன் செயல் வெட்டுவது.அதாவது பிரிப்பது!

ஆனால், ஊசி சிறியதாகவும், மலிவானதாகவும் இருந்தாலும் அதன் செயல் சேர்ப்பது.

ஒருவருடைய மதிப்பு அவருடைய செயலைக்கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது. அவர் உருவத்தை வைத்து அல்ல" என்றார்.

வார்த்தைகளை தவிர எதுவும் சட்டென்று சுடுவதில்லை மனதை



# வாள்களுடன் வீட்டினுள் புகுந்தவர்கள் அட்டகாசம்

## மானிப்பாயில் 3ஆவது சம்பவம் இது

யாழ்ப்பாணம், ஒக். 25

மானிப்பாயில் உள்ள வீடொன்றினுள் வாள்களுடன் புகுந்த இனம் தெரியாத நபர்களால் அந்த வீட்டின் பெறுமதியான பொருள்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இச்தச் சம்வம் நேற்று முன்தினம் மானிப்பாய் நவாலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. மானிப்பாய்ப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற மூன்றாவது சம்பவம் இது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது: சந்தை வீதி நவாலியிலுள்ள வீடொன்றுக்குள் நேற்று முன்தினமிரவு அத்துமீறி உள்நுழைந்த 5 பேர் அடங்கிய வாள்வெட்டுக் குழுவினர் அங்கிருந்தவர்களைத் தாக்க முற்பட்டனர். அவர்கள் தெய்வாதீனமாக வீட்டுக்குள் சென்று கதவை தாழிட்டுக் கொண்டனர். இதனால் ஆத்திரமடைந்த வாள்வெட்டுக் குழுவினர் அந்த வீட்டின் முன்பாக வீதியோரம் நிறுத்தி வைத்திருந்த புதிய பல்சர் மோட்டார் சைக்கிள் மற்றும் வீட்டுத் தளபாடங்களைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இதனால் மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த இரண்டு வாரங்களுள் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற மூன்றாவது சம்பவம் இது. மானிப்பாய் லோட்டன் வீதியிலுள்ள வீடொன்றின் மீதும், மோட்டார் சைக்கிள் மீதும் கடந்த 13ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தச் சம்பவம் இடம்பெற்று 3 நாள்களுக்குள் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்க வீதியிலுள்ள வீடொன்றின் மீதும் இதே பாணியில் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் எவரும் இது வரை பொலிஸாரால் கைது செய்யப்பட்டவில்லை.

(21,103)

---

### வேள்விகளுக்கு...

கவுணாவத்தை நரசிம்மர் ஆலயத்தில் வேள்வி நடத்தப்படுவது, இறைச்சிக்கடைச் சட்டத்தின் பிரகாரமும், மதவுரிமைச் சட்டத்தின் பிரகாரமும், மிருக பலிச் சட்டத்தின் பிரகாரமும் அத்து மீறிய செயற்பாடு என்று மனுதாரர்கள் தமது வாதங்களை முன்வைத்தனர்.

300 வருடங்களுக்கு மேலாக, மரபுமுறையாக இந்த வழிபாட்டு முறை நடைபெற்று வருகின்றது. இதனைத் தடை செய்யக் கோருவது, எமது மத வழிபாட்டு உரிமையில் தலையீடு செய்யும் செயற்பாடு என்று எதிர்த்தரப்பினர் வாதங்களை முன்வைத்தனர்.

ஆனால், ஆயிரக்கணக்கான மக்கள் கூடும் இடத்தில் நூற்றுக்கணக்கான மிருகங்களைப் பலியிடுவது மிருக வதைச் செயற்பாடு என்று கூறி அவர்களின் வாதங்களை ஏற்க நீதிமன்று மறுத்துவிட்டது.

"சமய விழாக்களுக்கு அனுமதி வழங்கும் போது, இறைச்சிக்கடைச் சட்டத்தின் கீழ் அனுமதி வழங்கக்கூடாது. சமய விழாக்கள் சட்டத்தின் கீழேயே அனுமதி வழங்கவேண்டும்" என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

"யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட இந்து ஆலயங்களில் பூஜைகளின் போதோ வேறு சந்தர்ப்பங்களிலோ மிருகங்களைப் பலியிடக் கூடாது என்று மன்று தடை விதிக்கின்றது. அதற்கு எந்த உள்ளூராட்சி சபைகளும், நீதிவான் நீதிமன்றங்களும் அனுமதி வழங்கக்கூடாது. அதனையும் மீறி எவரேனும் மிருக பலியிடலை மேற்கொண்டால் அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யமுடியும். முறைப்பாட்டின் பிரகாரம் குற்றமிழைத்தவர் உடனடியாகக் கைது செய்யப்பட்டு நீதிவான் மன்றில் முற்படுத்தப்படவேண்டும்" என்று தீர்ப்பளித்தார்.

இந்தத் தடையுத்தரவை வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் அமைச்சராக உள்ளமையினால் முதலமைச்சருக்கும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சருக்கும், மல்லாகம் நீதிவான் மன்றுக்கும் அனுப்பி வைக்குமாறு மேல் நீதிமன்ற பதிவாளருக்கு நீதிபதி பணித்தார்.

(உ-4,37,106)

### சட்ட மா...

தலைவரின் முடிவு இன்று வெளிவரும் என்கிற எதிர்பார்ப்பு நிலவும்போது, வழக்கை தமிழ்ப் பிரதேசங்களில் நடத்தமாட்டோம் என்ற உத்தரவாதம் வழங்கினால் மட்டுமே சாட்சியமளிக்க வருவதாக, வெளிநாட்டுக்குச் சென்றுள்ள இரு சாட்சிகளும் கூறியுள்ளனர் எனச் சட்ட மா அதிபர் தெரிவித்துள்ளார். நேற்றுத் தன்னுடன் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருக்கும், சட்டமா அதிபருக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

அநுராதபுரத்தில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவரினதும் வழக்கை அநுராதபுரத்திலிருந்து வவுனியாவுக்கு இடமாற்றுவது தொடர்பில் சாதகமாக ஆராய்வதாக சட்டமா அதிபர் இந்தச் சந்திப்பில் கூறியுள்ளார்.

எனினும் வழக்கில் சாட்சிகளாக உள்ள மூன்று முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களும் வவுனியாவில் வந்து சாட்சியமளிக்கத் தயார் என்றால் வழக்கை மாற்ற முடியும் என்ற சாரப்பட அவர் தெரிவித்துள்ளார்.

வழக்கின் சாட்சிகளாக பெயரிடப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களில் இருவர் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் இந்த வழக்கில் சாட்சியமளிக்க நிபந்தனை விதித்துள்ளனர். வழக்கு தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறக் கூடாது என்று கூறியுள்ளனர். இது தொடர்பில் சாட்சிகளுடன் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக சட்டமா அதிபர் என்னிடம் தெரிவித்தார் என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (உ-5)

### ஜனவரி...

தீர்மானித்த திகதியிலேயே உள்ளூராட்சி தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுவும் முடிவெடுக்கும் என்று தெரியவருகின்றது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் கடந்த 2 ஆண்டுகளாக இழுத்தடிக்கப்படுவது தொடர்பில் பல்வேறு தரப்புக்களாலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. நாடாளுமன்றத்தில் உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டும் வர்த்தமானியில் அந்த அறிவிப்பு வெளியிடப்படவில்லை. இது நாடாளுமன்றின் கடந்த அமர்விலும் சர்ச்சையாக வெடித்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரிமாளிகையில் நேற்றுக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தாமதமடைவது தொடர்பில் கட்சித் தலைவர்கள் பலரும் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர். சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் காட்டமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

நீண்ட விவாதத்தின் பின்னர் ஜனவரி 27ஆம் திகதி உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்குக் கட்சித் தலைவர்கள் இணங்கிக் கொண்டனர். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டத்தை வர்த்தமானியில் அடுத்த வாரம் அமைச்சர் பைசர் முஸ்தபா வெளியிடுவார் என்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கு ஏற்கனவே கோரப்பட்ட வேட்புமனுக்களை இல்லாமல் செய்வதற்கும் புதிதாக வேட்புமனுக்களைக் கோருவதற்கும் நாடாளுமன்றத்தில் முதலாம் வாசிப்புக்காக சட்டவரைவு முன்வைக்கப்பட்டுள்ளது. அந்தச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டதும் அந்த இரண்டு சபைகளுக்கும், ஜனவரி 27ஆம் திகதியே தேர்தல் நடைபெறும். (உ-5,31)

### மாமியை...

காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையின் பின்னர் உயிர் தப்பினார்.

இவர்களை வெட்டினார் என்ற குற்றச்சாட்டில் கணேசஜயா காந்தரூபன், சிவகலாவின் மருமகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கிளிநொச்சி நீதிவான் மன்றில் நடந்த பூர்வாங்க விசாரணையில் நடந்தது கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. இதையடுத்து வழக்கின் குற்றப்பகர்வுப் பத்திரம் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைகள் நடைபெற்று நேற்று வழக்குத் தீர்க்கப்பட்டது. சிவகலாவை வெட்டிக் கொன்றதுடன் அவரது மகளான தனது மனைவியையும் காந்தரூபன் வெட்டிக் காயப்படுத்தினார் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக நீதிபதி அறிவித்தார். கொலைக் குற்றத்துக்காக 7 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனையும், வெட்டிக் காயப்படுத்திய குற்றத்துக்காக ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார். இரண்டு தண்டனைகளையும் ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

இரண்டு குற்றங்களுக்கும், தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 6 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. அதனை செலுத்தத் தவறின் மேலும் இரண்டு மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்று நீதிபதி தீர்ப்பளித்தார். (உ-4,37,106)

### விமலிடம்...

முன்னணி யின் தலைவர் விமல் வீரவன்ஸ, அது தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும் என்று சபாநாயகர் கரு ஜயசூரியதெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்சவின் கருத்தானது நாட்டின் ஜனநாயகத்தை ஆதரிக்கும் இடமான நாடாளுமன்றத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக சபாநாயகர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது விமல் வீரவன்ச தாம் வெளியிட்ட அந்தக் கருத்து தொடர்பில் சபைக்குத் தெளிவுபடுத்தவேண்டுமென சபாநாயகர் கரு ஜயசூரிய கோரியுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-5)

### இடியுடன்...

தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: இரண்டாவது பருவப் பெயர்ச்சிக் காலநிலை ஆரம்பமாகியுள்ளது, எதிர்வரும் நாள்களில் பிற்பகல், மாலை வேளைகளில் மழை மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் காலநிலையின் போது காற்றும் பலமாக வீசும். எனவே பொதுமக்கள் இடி மின்னலின் தாக்கத்தில் இருந்து தங்களைப் பாதுகாக்க முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது-என்றார். (உ-21)

### மற்றொரு...

இந்தத்துப்பாக்கிச்சூட்டைப்புலனாய்வாளர்களே முன்னெடுத்ததாக உறவினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. பொலிஸ் தரப்பு இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ இல்லை.

இந்த நிலையில் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொசான் தெரிவித்ததாவது:

அரியாலையில் இடம்பெறும் கள்ள மணல் கடத்தலை கட்டுப்படுத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அங்கு கடமையில் இருந்த பொலிஸாருக்கு சிவில் உடையில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் மற்றொருவரும் அன்றைய தினம் பகல் உணவு எடுத்துச் சென்றுள்ளனர். துப்பாக்கிதாரிகளின் இலக்கு அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர்களாக இருக்கலாமா என்ற சந்தேகமும் உள்ளது. பொலிஸார் என்று நினைத்து இளைஞன் இலக்கு வைக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

ஆயுததாரியை அடையாளம் கண்டு கைது செய்யும் வரை எதையும் உறுதியாகக் கூறமுடியாது. அதுவரை சந்தேகிக்கப்படும் அனைத்துக் கோணங்களிலும் விசாரணைகள் நடத்தப்படும் - என்றார். (உ-5)

### ஐ.நா...

கையாளர் தனது இலங்கைப் பயணத்தின் முடிவில் கொழும்பில் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று கேட்டபோதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. அறிக்கையாளர் கூறியதை நாம் வரவேற்கின்றோம். நாம் இதே விடயத்தை முன்னரே வலியுறுத்தியிருந்தோம். பன்னாட்டுச் சமூகத்துக்கு அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. ஆட்சி மாற்றத்தின் பின்னர், 100 நாள்கள் வேலைத் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தியது. அதில் நிறைவேற்றப்படும் என்று கூறப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை என்று ஐ.நா. அறிக்கையாளர் குறிப்பிட்டுள்ளார். பொறுப்புக் கூறல் விடயங்களை அரசு செய்யத் தவறினால் உலக நியாயாதிக்கத்தை அரசால் தவிர்க்க முடியாது. வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் - என்றார். (உ-5)

### அம்பலவன்...

டும் இயந்திரத்தின் உதவியுடன் பிற்பகல் 2.30 மணி முதல் இருளும் வரை ஆயுதங்களைத் தேடும் பணி நடந்தது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றின் நீதிபதி எஸ். எம் .எஸ். சம்சுதீன் முன்னிலையில் இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது. சிறப்பு அதிரடிப்படையினர், விமானப் படையினர், இராணுவத்தினர், பொலிஸார் என படையினர் அனைவரும் இணைந்து இந்த நடவடிக்கையை ஆரம்பித்தனர். எனினும் அங்கு ஆயுதங்கள் எவையும் சிக்காத நிலையில் தோண்டும் பணி தோல்வியுடன் கைவிடப்பட்டது. (உ-21,ரி3)

### அமைச்சராக...

கூட்டு அரசின் அமைச்சரவைக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல் உட்பட சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது. "திட்டமிட்ட அடிப்படையில் தேர்தல் நடத்தப்படவேண்டும். சிக்கல் எதுவும் ஏற்படின் பழைய முறையிலேயே தேர்தல் நடத்தலாம். இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே இருக்கின்றது" என்று அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலருமான கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

"கலப்பு முறையிலேயே தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுதியாக இருக்கின்றது" என்று இதற்கு அமைச்சர் பைசர் முஸ்தபா பதிலளித்துள்ளார். இவ்வாறு இருவருக்குமிடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

இதன் பின்னர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, மேல்மாகாண அபிவிருத்திக்குரிய அமைச்சு ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் உரிய வகையில் நிதி ஒதுக்கப்படுவதில்லை. பெயருக்கு மாத்திரம் அமைச்சுப் பதவியை வைத்திருப்பதால் என்ன பயன்? இதே கோணத்தில் பயணிக்க முடியாது. அரசில் அங்கம் வகிப்பதுகூட கடும் எரிச்சலாகவே இருக்கின்றது. அபிவிருத்தித் திட்டங்களை சுயாதீனமாக முன்னெடுக்க முடியாத சூழ்நிலையும் காணப்படுகின்றது. நல்லாட்சியின் கோட்பாட்டுக்கு இது ஏற்புடையதல்ல - என்றார். (உ-5)

### கூட்டமைப்பினரின்...

ளது. அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு தலைமை அமைச்சர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் பங்கேற்கவிருந்தார். இருப்பினும் அவர் கலந்துகொள்ளவில்லை.

கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பை ஏற்படுத்தினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஜனவரியில் இறுதிப் பகுதியில் நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஆட்சேபனை ஏது இருக்கின்றதா என்று தலைமை அமைச் கேட்டுள்ளார்.

எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என றும், தேர்தலை விரைவில் நடத்தவேண்டு என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடாகவுள்ள என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திர கூறியதாக கூட்டத்தில் தலைமை அமைச்சர் தெரிவித்தார்.

இதனையடுத்து ஜனவரி 27ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் முடிவு எடுக்கப்பட்டது. (உ-5,31)

## இன்றைய மோதல்கள்

**காமாட்சி அம்பாளின் கரப்பந்துத் தொடர்**

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கான அரையிறுதி ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக 'சி' அணி மோதவுள்ளது.

**யாழ்ப்பாணம் மத்தியின் கூடைப்பந்துத் தொடர்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை நடத்தும் வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

## குறிஞ்சிக்குமரன் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 25

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் குறிஞ்சிக்குமரன் அணி வெற்றிபெற்றது.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றமையால் சம நிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் குறிஞ்சிக்குமரன் அணி வெற்றி பெற்றது. (ம-23)

## அச்சுவேலி யுத் கழகத்தை வென்றது இளவாலை மத்தி.

யாழ்ப்பாணம், ஒக். 25

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

காமாட்சிஅம்பாள் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அச்சுவேலி யுத் அணியை எதிர்த்து இளவாலை மத்திய அணி மோதியது. முதலாவது செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது இளவாலை மத்தி. இரண்டாவது செற்றை 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது அச்சுவேலி யுத். சரிவில் இருந்து மீண்டு அடுத்த இரண்டு செற்களையும் முறையே 25:23, 25:21 என்ற புள்ளிகளின் அடிப் படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி. (ம-23)



# திருக்குடும்பக் கன்னியர் இறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணமத்தியகல்லூரியின்மாணவர் முதல்வர் சபை நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற 20வயது பெண்கள் பிரிவு அரையிறுதி ஆட்டமொன்றில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது திருக்குடும்பக் கன்னியர் மட அணி.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் திருக்குடும்பக் கன்னியர்மட அணியை எதிர்த்து வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. 44:42 என்ற புள்ளிகளின் அடிப்படையில் திருக்குடும்பக் கன்னியர்மட அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## அரையிறுதியில் அன்ரனீஸ்

யாழ்ப்பாணம். ஒக். 25

மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் சென். அன்ரனீஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனீஸ் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## இந்துவை வீழ்த்தியது ஏஞ்சல்

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற 20வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டமொன்றில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆடுகளத்தில் நேற்று மாலை 4 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. 76:63 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி வெற்றிபெற்றது. (ம-23)



## மைலோ கிண்ண கால்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 25

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் பருத்தித்துறை லீக்குக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் சில அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. இந்த ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

சிமாட் போய்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணிக்கும், நெடியகாடு விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும், வல்வை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில், வல்வை விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

குடத்தனை சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குடத்தனை சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி 1:0. என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

சிவானந்தா விளையாட்டுக் கழக அணிக்கும், சென். சேவியர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், சென். சேவியர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 6:5 என்ற கோல் கணக்கில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணிக்கும், திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:3 என்ற கோல் கணக்கில் திக்கம் இளைஞர் அணி வெற்றிபெற்றது.

பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் வல்வை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

சென். சேவியர் விளையாட்டுக் கழக அணிக்கும், மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 6:5 என்ற கோல் கணக்கில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## லீமன் விலகல்

ஆஸ்திரேலிய அணியின் ஒரு நாள் ஆட்டங்களுக்கான பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகுவதற்கு லீமன் முடிவு செய்துள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆஸ்திரேலிய அணியின் மூவகை ஆட்டங்களுக்கும் தலைமைப் பயிற்சியாளராக லீமன் உள்ளார். லீமனின் பயிற்சியில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை திருப்தி தெரிவித்துள்ளபோதிலும் அவர் தனது உடல் நிலையைக் கருத்திற்கொண்டு ஒரு நாள் ஆட்டங்களுக்கான அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## பாரதி 'சி' அணி நேர்செற் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 25
நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பாரதி 'சி' அணி வெற்றிபெற்றது.
காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் புத்தூர் சென் ஸ்டார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக் கழக 'சி' அணி 25:20, 25:17, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நேர்செற் வெற்றிபெற்றது. (ம-23)

## மனோகரா இறுதியில்

யாழ்ப்பாணம், ஒக். 25
மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் மனோகரா அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் மனோகரா அணி வெற்றி பெற்றது. (ம-23)

## டோனியே என்றும் தலைவர்

### என்கிறார் சாகல்

"தலைமைப் பதிவியில் இருந்து விலகினாலும் டோனியே என்றும் எங்கள் தலைவர்" என்று தெரிவித்தார் இந்திய அணியின் சுழல்பந்து வீச்சாளர் சாகல்.
இந்திய அணிக்கு மூன்று விதமான உலகக் கிண்ணங்களையும் வென்று கொடுத்தவரான டோனி, தற்போது தலைமைத்துவத்தில் இருந்து விலகி ஒரு சாதாரண வீரராக அணியில் தொடர்ந்து வருகிறார். அவரின் ஆலோசனைகள் அணிக்கு மிக முக்கியத்துவம் மிக்கவையாக உள்ளன. அணித்தலைவர் கோக்லிகூட, "எமது உண்மையான அணித்தலைவர் டோனியே" என்று பலமுறை தெரிவித்துள்ளார். இதையடுத்து சாகலும் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.
"ஓர் அனுபவம் பெற்ற வீரரும் முன்னாள் அணித்தலைவரும் என்ற வகையிலும் டோனி இன்றியமையாத வீரராக எமக்கு உள்ளார். அவரின் ஆலோசனைகள் அற்புதமானவை. கோக்லி ஏற்கனவே தெரிவித்ததைப்போல் டோனி என்றும் எமது தலைவர். கோக்லி பல முறைகள் பவுண்டரி எல்லையில் களத்தடுப்பில் ஈடுபட வேண்டியுள்ளது. அந்த நேரத்தில் தலைமைப் பொறுப்பை டோனி தானாக எடுத்துக்கொள்கிறார். அதுவே அணிக்கும் தேவை" என சாகல் மேலும் தெரிவித்தார். (ம)






### பன்னாட்டு கால்பந்து சம்மேளனத்தின்


# தலைசிறந்த வீரராக ரொனால்டோ தெரிவு



போர்த்துக்கல் அணியின் தலைவரான ரொனால்டோ பன்னாட்டு கால்பந்து சம்மேளனத்தின் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த விருதை ரொனால்டோ வெல்வது நடப்பு வருடத்துடன் சேர்த்து ஐந்தாவது தடவையாகும்.
பன்னாட்டு கால்பந்து சம்மேளனம் சிறந்த வீரரை ஆண்டுதோறும் தெரிவுசெய்து வருகிறது. கடந்த வருடம் இந்த விருதை வென்றிருந்த ரொனால்டோ நடப்பு வருடத்திலும் சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்டு உலகின் ஆகச் சிறந்த கால்பந்தாட்ட வீரர் என்ற அந்தஸ்தைத் தக்கவைத்தார்.
போர்த்துக்கல் அணியின் தலைவராக உள்ள ரொனால்டோ, கழகத்தைப் பொறுத்த வரையில் ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகத்துக்காகவும் விளையாடி வருகிறார். ரியல் மட்ரிட் அணி இந்த வருடம் லா லிகா, ஸ்பானிஸ் சுப்பர் கப், ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் ஆகிய தொடர்களில் சம்பியனாகியிருந்தது. இதற்கு ரொனால்டோவின் பங்களிப்பு மிகவும் அதிகம். இதனால் உலகின் ஆகச் சிறந்த வீரராக ரொனால்டோ அடையாளமிடப்பட்டார்.
விருதுக்காக ரொனால்டோ, மெஸ்ஸி, நெய்மர் ஆகியோருக்கு இடையில் கடும் போட்டி நிலவியது. மெஸ்ஸி இரண்டாவது இடத்தையும் நெய்மர் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.
பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனத்தின் விருதை அதிக தடவைகள் கைப்பற்றியவர்களின் பட்டியலில் மெஸ்ஸி ஐந்து விருதுகளுடன் முதலிடத்தில் இருந்தார். தற்போது ரொனால்டோ இந்தச் சாதனையைச் சமன்செய்தார். (ம)

# டெஸ்ட் தொடரில் மட்டுமே விராட் கோக்லிக்கு ஓய்வு?

இலங்கை - இந்தியா அணிகளுக்கு இடையிலான மூன்று வகைத் தொடர்களும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள நிலையில், டெஸ்ட் தொடரில் கோக்லி களமிறங்க வாய்ப்பில்லை என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.



இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டதை அடுத்து, இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. மூன்று டெஸ்ட், மூன்று ஒரு நாள், மூன்று ரி-20 ஆட்டங்களைக் கொண்டதாக இந்தத் தொடர்கள் நடைபெறவுள்ளன. டெஸ்ட் தொடர் முதலாவதாக நடைபெறவுள்ளது. இந்தத் தொடர் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரில் கோக்லிக்கு ஓய்வு கொடுக்கப்பட வாய்ப்புள்ளது என்று ஏற்கனவே இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. எனினும் இலங்கைக்கு எதிரான தொடர்களுக்காக நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்ட இந்திய அணியில் கோக்லி பெயரிடப்பட்டிருந்தார். இந்த நிலையில் மூன்று வகைத் தொடர்களிலும் அல்லாமல் டெஸ்ட் தொடரில் கோக்லிக்கு ஓய்வு கொடுக்கப்பட வாய்ப்புள்ளது என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வட்டாரங்கள் நேற்றுத் தகவல் வெளியிட்டன.

(ம)



## வழித்துத் துடைக்கப்பட்டதில் இலங்கை மோசமான சாதனை

ஒருநாள் தொடரில் ஒரு வருடத்தில் மூன்று தடவைகள் எதிரணியால் வழித்துத் துடைக்கப்பட்ட முதல் அணி என்ற மோசமான சாதனைக்கு சொந்தமாகியுள்ளது இலங்கை அணி.
பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது. இந்தத் தொடரில் 5:0 என்று வெற்றிபெற்று இலங்கையை வழித்துத் துடைத்தது பாகிஸ்தான்.
இலங்கை அணி முன்னதாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரை 0:5 என்று இழந்தது. பின்னர் இந்தியாவை தனது சொந்த மண்ணில் வைத்து ஒரு ஆட்டத்திலேனும் வீழ்த்த முடியாமல் 0:5 என்று படுதோல்வியடைந்தது. தற்போது பாகிஸ்தானிடமும் 0:5 என்று முறையாக வாங்கிக்கட்டியுள்ளது.
இதன்மூலம் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரில் ஒரு வருடத்தில் மூன்று முறை எதிரணியால் வழித்துத்துடைக்கப்பட்ட முதல் அணி என்ற மோசமான சாதனையைப் படைத்தது. (ம)




இலங்கை கராத்தே சம்மேளத்தினால் வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட தொடரில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர் சி.இந்துயன் தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம் என்று இரண்டு பதக்கங்களைக் கைப்பற்றினார். யாழ்ப் பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டிகளிலேயே அவர் இரண்டு பதக்கங் களைக் கைப்பற்றினார்.

(ம-23)



# மே.இ.தீவுகள் அபார வெற்றி

சிம்பாப்வே அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 117 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

சிம்பாப்வேயின் பல்வையோ மைதானத்தில் கடந்த 21ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்ப மாகியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பெடுத் தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 219 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஹோப் ஆட்டமிழக்காமல் 90 ஓட்டங்களையும், பவல் 56 ஓட்டங்களையும், சேஸ் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிரீமர் 4 இலக்குகளையும், வில்லியம்ஸ் 3 இலக்குகளையும், யாவிஸ், மொபு, ரசா மூவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே அணி 159 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக மசகட்சா 42 ஓட்டங்களையும், எர்வின் 39 ஓட்டங்களையும், மிரி 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிஸ்கூ 5 இலக்குகளையும், கோல்டர், றோச் இருவரும் தலா 2 இலக்குகளையும், கபிரியேல் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி சகல இலக்குகளையும் இழந்து 373 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக சேஸ் 95 ஓட்டங்களையும், பிரீத்வைட் 86 ஓட்டங்களையும், பிஸ்கூ 44 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிரீமர் 4 இலக்குகளையும், வில்லியம்ஸ் 3 இலக்குகளையும், ஜாவீஸ் 2 இலக்குகளையும், ரசா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். 434 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய சிம்பாப்வே அணி 316 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 117 ஓட்டங்களால் வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி. பந்துவீச்சில் பிஸ்கூ 4 இலக்குகளையும், சேஸ் 2 இலக்குகளையும், றோச், பிரீஸ்வைட் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப் பற்றினர். (ம)

# சிறந்த பயிற்சியாளராக ரியல்மட்ரிட்டின் சிடேன்

பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனத்தின் சிறந்த பயிற்சியாளர் விருதை ரியல் மட்ரிட் அணியின் சிடேன் வென்றார்.

பன்னாட்டு கால்பந்து சம்மேளனம் பல விரு துகளை வழங்கி வருகிறது. அவற்றில் சிறந்த பயிற்சியாளருக்கான விருதும் ஒன்றாகும். இந்த வருடத்தின் சிறந்த பயிற்சியாளர் விருதை ரியல் மட்ரிட் அணியின் பயிற்சியா ளர் சிடேன் தனதாக்கினார். ரியல் மட்ரிட் அணி இந்த வருடம் லா லிகா, ஸ்பானிஸ் சுப்பர் கப், ஐரோப்பியக் கழகங்களுக்கு இடை யிலான சம்பியன்ஸ் லீக் ஆகிய தொடர்களில் சம்பியனாகியிருந்தது. இதையடுத்தே சிடே னுக்கு இந்த விருது கிடைத்தது. (ம)



# வோஸ்னியாக்கி அசத்தல் வெற்றி

சிங்கப்பூர் ரென்னிஸ் தொடரில் நேற்று நடை பெற்ற பெண்கள் பிரிவு முதல் சுற்று ஆட்ட மொன்றில் கரோலினா வோஸ்னியாக்கி வெற்றிபெற்றார்.

வோஸ்னியாக்கியை எதிர்த்து உக்ரைன் வீராங்கனை எலினா ஸ்வெட்டலினா மோதி னார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத் தின் முதல் இரண்டு செற்களையும் முறையே 6:4, 6:0 என்ற செற் கணக்கில் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார் வோஸ் னியாக்கி. (ம)




# நெருக்கடியான நிலையில் களமிறங்குகிறது இந்தியா

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடை பெறவுள்ள நிலையில், இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற நெருக்கடியான நிலையில் இந்திய அணி களமிறங் குகிறது.



நியூசிலாந்து அணி இந்தியா வுக்குச் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட் டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடர் தற்போது நடை பெற்று வருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்று தொட ரில் 1:0 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றால் மட்டுமே கிண்ணம் வெல்லலாம் என்ற இக்கட்டான நிலை இந்தியாவுக்கு உள்ளது. இந்த நிலையில் தொட ரில் தனது இருப்பைத் தக்கவைக்க இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடியில் இந்திய அணி களமிறங்குகிறது. (ம)

**Great Way**

எமது நிறுவனத்தின் முகாமைத்துவம் சம்பந்தமான வேலை வெற்றிடங்கள் உள்ளன. O\L , A\L படித்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்பு-
077 695 3242 , 077 985 6671

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

**K.M.M**
**பதிவு செய்யப்பட்ட திருமணசேவை**

திருமணப் பொருத்தம் பார்த்தல், திருமணங்கள் நிச்சயித்தல், ஜாதகம் எழுதுதல் (ருது) போன்ற சேவைகள் திருப்திகரமாக செய்து கொடுக்கப்படும். உங்களது வாழ்க்கையில் நடந்த, நடக்கின்ற, நடக்கப் போகின்ற கால பலன்கள் 40 வருடத்திற்கு மிகத்துல்லியமாக கணித்து கொடுக்கப்படும்
*குறிப்பு - பதிவுக்கட்டணம் இல்லை*
Phone Number - 021 223 2222, 076 835 1932
Viber Number - 076 9416 424
வெளிநாட்டு தொடர்பு - 0041 617 618 756 (House)
Swiss Number - 0041 768 185 443 (Office)
Manager - K. Suhanthan

**குஜராத், அகமதாபாத், நேப்பாள் காசி யாத்திரை**
நாள்கள்: 16 ஆரம்பம்: 25.11.2017 யாத்திரீகர்: 20
மிகவும் புனிதமான யாத்திரை
**செல்லும் இடங்கள்: குஜராத்தில்:** பாவ்நகர், கடலுக்குள் பஞ்சலிங்கம், சோமநாதர், ஜோதிலிங்கம், தையூர், கங்கேஸ்வரர் பஞ்சலிங்கம் அம்பாஜி 51 கலசமுடைய சக்தி பீடம் (பெரிய ஆலயம்). காபர்மலை பார்வதிதேவியின் இருதயம் விழுந்த இடம், 51 சக்தி பீடங்களில் முதன்மையான ஆலயம். **காசி:** விஸ்வநா-தர், விசாலாட்சி, அன்னபூரணி, காலபைரவர் உட்பட 15 இடங்களைத் தரிசிக்கலாம். **கயா:** முன்னோர்களுக்கு சிரார்த்தம் செய்யுமிடம், **அலகாபாத்** : கங்கா, ஜமுனா, சரஸ்வதி திருவேணி சங்கமம், வேறு இடங்களும் காணலாம். சீத்தாமடியும் காணலாம். **நேப்பாள் :** கோராப்பூர், லும்பினி, புத்தபிரான் பிறந்த இடம், **காத்மாண்டு:** கமக்கயா, போக்ரா, சுயம்புநாதர், பெரியகுகை, ஜெல்நாராயணர், தண்ணீரில் மிதக்கும் விஷ்ணு, குச்சேஸ்வரர், பசுபதிநாதரையும் தரிசிக்கலாம். **சென்னை - இராமேஸ்வரம்:** நவபாஷாணம், திருப்புலானி, உத்திரகோசமங்கை, **மதுரை:** மீனாட்சி சுந்தரேஸ்வரரையும் தரிசிக்கலாம்.
**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை**
விமானப் பயணச்சீட்டு, மூன்றுவேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர், A/C வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள் இவை அனைத்தும் எமது சேவை. இத்துடன் ஒருநாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம்.
பிராமண சமூகத்தினரும் தயக்கமின்றி கலந்துகொள்ளலாம்.
விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
No: 59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
T.P : 077 768 0102, 077 736 2154

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.